# கல்வெட்டியல்

## பாடத்திட்டம்

அலகு 1 தமிழ் எழுத்துக்களின் தோற்றமும், வளர்ச்சியும் - பிராமி – தமிழ் பிராமி - எழுத்துக்கள் - நடுகல் தமிழ் பிராமிக் கல்வெட்டுகள்

அலகு 2 தமிழ் கல்வெட்டுக்களின் பொதுவான அமைப்பு
மெய்க்கீர்த்தி - கூற வந்த செய்தி
ஓம்படைக்கிளவி – (காப்புரை) அமையும் இடங்கள்

அலகு 3 செப்பேடுகள், அமைப்பும், உருவாக்கமும், பல்லவர் செப்பேடுகள், பாண்டியர் செப்பேடுகள், சோழர் செப்பேடுகள் - ஒரு பொதுவான அறிமுகம்

அலகு 4 கல்வெட்டுக் கூறும் நிறுவனங்கள் :
பிரம்மதேயம், திருமடைப்பள்ளி, பண்டாரம், சரஸ்வதி பண்டாரம், ஆதுல சாலை, புரவு வரி திணைக்களம் - பல்வேறு வாரியங்கள்

அலகு 5 அறிய வேண்டிய கல்வெட்டுத் தொடர்களும், கலைச் சொற்களும்

1. தேவதானம்
2. குடி நீக்கிய தேவதானம்
3. குடி நீங்கா தேவதானம்
4. திருவிடை ஆட்டம்
5. திருநாமத்துக்காணி
6. பண்டார வாடை
7. பள்ளிச்சந்தம்
8. முற்றூட்டு
9. இறையிலி
10. ஆயம்
11. சாவா மூவா பேராடு
12. நந்தா விளக்கு
13. எச்சோறு
14. ஆவணக்களரி

**பாட நூல்கள் :**

1. ‘‘கல்வெட்டில் வாழ்வியல்’’ :

   டாக்டர் அ. கிருட்டினன்
   மணிவாசகர் பதிப்பகம்,
   55 லிங்கி தெரு, சென்னை – 600 001.

2. ‘‘கல்லெழுத்துக்கலை’’

   நடன. காசிநாதன், எம்.ஏ.
   மணிவாசகர் பதிப்பகம்,
   55, லிங்கி தெரு, சென்னை – 600 001.

**பார்வை நூல்கள் :**

1. ‘‘சங்க காலத்துப் பிராமிக் கல்வெட்டெழுத்துக்கள்

   - மயிலை சீனி வேங்கடசாமி

2. ‘‘கல்வெட்டு ஓர் அறிமுகம்’’

   - காசிநாதன்
   - தாமோதரன்

3. ‘‘கல்வெட்டியல்’’

   - பேராசிரியர் ஜே. தர்மராஜ் எம்.ஏ. எம்.ஃ.பில்

# கல்வெட்டியல்

## அலகு – 1

### தமிழ் எழுத்துக்களின் தோற்றமும் வளர்ச்சியும்

தமிழ் மொழி மிகப் பழமையானது. பழங்காலத்திலேயே தமிழர் தமிழை வளர்த்தனர். அவர்கள் தமிழ் நூல்களைச் சுவடிகளில் எழுதினார்கள். நூல்களை எழுதுவதற்கு எழுத்து வேண்டும். எழுத்துக்களையும் அமைத்து நூல் எழுதினார்கள். ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளாகத் தமிழில் நூல்கள் எழுதப்படுகின்றன. தமிழ் எழுத்துக்கள் காலத்துக்குக் காலம் மாறிமாறி வந்துள்ளன. எழுத்துக்களின் வரிவடிவம் மாறிக் கொண்டு இருந்தபடியால், பண்டைக்காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்தின் வரிவடிவம் இன்னதென்று இப்போது தெரியவில்லை. பண்டைக்காலத்துத் தமிழ் எழுத்து மறைந்து போயிற்று.

கி.மு. 3ஆம் நூற்றாண்டில், அசோக மாமன்னர் பாரத நாட்டை அரசாண்ட காலத்தில், தென்னிந்தியாவிலும், தமிழகத்திலும், இலங்கையிலும் பௌத்த மதம் வந்து பரவிற்று. அசோக மன்னரின் பாட்டனான சந்திர குப்த மௌரியன் ஆட்சிக் காலத்தில் சமண சமயம் தென்னிந்தியாவிலும், தமிழகத்திலும் வந்து பரவிற்று. சமணம் பௌத்தம் என்னும் இரண்டு மதங்களும் பரவுவதற்குக் காரணமாக இருந்தவர் அந்த மதங்களின் துறவிகளே பௌத்த மதத்தோர்களும், சமண சமய முனிவர்களும் ஊர்களிலும் நகரங்களிலும் போய்த் தங்கள் தங்களுடைய மதங்களைப் பரப்பினார்கள். அசோக மாமன்னன் பொறித்துள்ள கல்வெட்டுகளில் இரண்டு மாமன்னனாகிய அவர் தமிழகத்திலும் இலங்கையிலும் பௌத்த மத பிக்குகளை அனுப்பி தர்ம விஜயம் (அறவெற்றி) பெற்றதாகக் கூறுகின்றன. அதாவது பௌத்த மதத்தைப் பரவச் செய்ததைக் கூறுகின்றன. அசோக மாமன்னருடைய இரண்டாம் எண்ணுள்ள பாறைக் கல்வெட்டும், பதின்மூன்றாம் எண்ணுள்ள பாறைக் கல்வெட்டும் இந்தச் செய்திகளைக் கூறுகின்றன. தென்னிந்தியாவிலும் தமிழகத்திலும் பௌத்த மதத்தைக் கொண்டு வந்து பரவச் செய்த பௌத்த பிக்குகள் பிராமி எழுத்தையும் கொண்டு வந்து பரவச் செய்தார்கள். அந்த காலத்திலேயே சமண சமயத்தைப் பரப்பி வந்த ஆருகத மதத்து முனிவர்களும் பிராமி எழுத்தையும் பரப்பினர்.

**பிராமி:**

மத நூல்கள் பிராகிருத மொழியில் எழுதப்பட்டிருந்தபடியாலும், அந்த நூல்களில் எழுதப்பட்டிருந்த எழுத்து பிராமி எழுத்தாக இருந்த படியாலும் அவர்கள் மூலமாக பிராமி எழுத்து தமிழகத்தில் நுழைந்தது. இவ்வாறு பௌத்த சமண சமயங்களோடு பிராமி எழுத்தும் தமிழ் நாட்டில் கால் ஊன்றியது. இவ்வாறு கடைச்சங்க காலத்தில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் தமிழகத்தில் பிராமி எழுத்து புகுந்தது. அக்காலத்தில் வடஇந்தியா முழுவதும் பிராமி எழுத்து வழங்கி வந்தது. அந்தப் பிராமி எழுத்தைத்தான் அவர்கள் தமிழகத்துக்குக் கொண்டு வந்தார்கள்.

அவர்கள் வருவதற்கு முன்னே தமிழகத்தில் தமிழர் ஒருவகையான தமிழ் எழுத்தை எழுதி வந்தனர். அந்தத் தமிழ் எழுத்து பிராமி எழுத்து வந்தவுடனே மறைந்து விடவில்லை. புதிதாக வந்த பிராமி எழுத்து தமிழகத்தில் பரவுவதற்குச் சில காலம் சென்றது. பிராமி எழுத்து தமிழகத்தில் பரவுவதற்கு ஒரு நூற்றாண்டாவது சென்றிருக்க வேண்டும்.

பௌத்த சமண சமயங்களை வளர்த்த பௌத்த பிக்குகளும் சமண முனிவர்களும் தங்கியிருந்த இடங்களுக்குப் பள்ளி என்பது பெயர் அவர்கள் ஊர்ச் சிறுவர்களைத் தம்முடைய பள்ளிகளுக்கு அழைத்து அவர்களுக்குக் கல்வி கற்பித்தார்கள். பள்ளிகளில் சிறுவர்களுக்குக் கல்வி கற்பித்தபடியால் பாடசாலைகளுக்குப் ‘பள்ளிக்கூடம்’ என்று புதிய பெயர் ஏற்பட்டது. அப்பெயர் இன்றளவும் வழங்கி வருகிறது. பள்ளிக்கூடங்களில் அவர்கள் பழைய தமிழ் எழுத்தைக் கற்பித்தர்கள். மதநூல்களைப் பரப்புவதற்காகச் சிறுவர்களுக்குப் பிராமி எழுத்தையும் கற்பித்தார்கள். காலப் போக்கில் பழைய தமிழ் எழுத்து பையப்பைய மறைந்து போய் புதிய பிராமி எழுத்து பரவத் தொடங்கியது. பழைய தமிழ் எழுத்து மறைந்து விடவே புதிய பிராமி எழுத்து நாட்டில் பயிலப்பட்டது. தமிழ் நூல்கள் பிராமி எழுத்தில் எழுதப்பட்டன. பிராமி எழுத்து கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி மூன்றாம் நூற்றாண்டு வரையில் வழங்கி வந்தது.

**வட்டெழுத்து:**

அதன் பிறகு பிராமி எழுத்து வரிவடிவத்தில் மாறுதல் அடையத் தொடங்கி வட்டெழுத்தாக உருவடைந்தது. பிராமி எழுத்து திரிபடைந்த

உருவமே வட்டெழுத்தாகும். வட்டெழுத்து ஏறத்தாழ கி.பி 4 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி 10 ஆம் நூற்றாண்டு வரையில் தமிழகத்தில் வழங்கிற்று. அப்போது சுவடிகளும் கல்வெட்டுக்களும் வட்டெழுத்திலும் எழுதப்பட்டன. பல்லவ அரசர் காலத்தில் தொண்டை நாட்டிலும் சோழ நாட்டிலும் வட்டெழுத்து மறைந்து வேறுவகையான பல்லவர் எழுத்து வழங்கி வந்தது. ஆனால் வட்டெழுத்து பாண்டிய நாட்டிலும், சேர நாட்டிலும் தொடர்ந்து வழங்கி வந்தது. கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் சோழர் பாண்டியரை வென்று அரசாண்ட காலத்தில் பாண்டி நாட்டில் வழங்கி வந்த வட்டெழுத்தை மாற்றிச் சோழர் இக்காலத்துத் தமிழெழுத்தைப் புகுத்தினார்கள். ஆகவே 10 ஆம் நூற்றாண்டிற்குப் பின் பாண்டிய நாட்டில் வட்டெழுத்து மறைந்து போயிற்று. சேர நாட்டில் வழங்கி வந்த வட்டெழுத்து பிற்காலத்தில் மாறுதல் அடைந்து கோலெழுத்தாக உருவம் பெற்றது. அண்மைக் காலத்தில் கி.பி.16ஆம் நூற்றாண்டில் மலையாள மொழியின் தந்தை என்று கூறப்படுகிற துஞ்சத்து இராமானுசன் எழுத்தச்சன், கிரந்த எழுத்திலிருந்து இப்போதைய மலையாள எழுத்தை உண்டாக்கினார். அதன்பிறகு மலையாள நாட்டில் கோலெழுத்தும் மறைந்து போயிற்று.

**வடக்குப் பிராமியும் தெற்குப் பிராமியும்:**

பிராமி எழுத்து வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் அக்காலத்தில் வழங்கி வந்தது. ஆனால் தென்னிந்திய பிராமிக்கும் வட இந்திய பிராமிக்கும் வரிவடிவில் சிறு வேறுபாடுகள் உண்டு. இந்த வேறுபாடுகளை அறியாத காலத்தில் இவை சரியாகப் படிக்கப்படவில்லை. பிறகு தென்னிந்திய பிராமி எழுத்தைச் சரியாகப் படிக்க ஒரு வாய்ப்புக் கிடைத்தது. ஆந்திர நாட்டிலே கிருஷ்ணா வட்டாரத்தில் பட்டிப்ரோலு என்னும் ஊரில் பழங்காலப் பௌத்தத் தூபி ஒன்று உண்டு. அந்தத் தூபியைத் திறந்து தொல்பொருள் ஆய்வாளர் ஆராய்ந்து பார்த்தபோது அந்தத் தூபிக்குள் வட்ட வடிவமான கல்பேழை காணப்பட்டது. அந்தப் பேழையின் விளிம்பைச் சுற்றிலும் பிராமி எழுத்து வாசகம் எழுதப்பட்டிருந்தது. அந்தப் பிராமி எழுத்துக்கும் வட இந்தியப் பிராமி எழுத்துக்கும் சிறு வேற்றுமை காணப்பட்டது. பட்டிப்ரோலு பிராமி எழுத்து தென் இந்திய பிராமி எழுத்துக்களைச் சரியாகப் படிப்பதற்கு உதவியாக அமைந்தது. தென்னிந்திய பிராமி எழுத்தை திராவிடி என்று கூறினார்கள். பட்டிப்ரோலு பிராமி எழுத்து எபிகிராபியா இண்டிகா என்றும் வெளியீட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டுப் பிராமி எழுத்துக்களில் தமிழுக்கே தனிச் சிறப்பாக உள்ள ழ,ற,ன என்னும் எழுத்துக்களும் காணப்படுகின்றன. இந்தச் சிறப்பு எழுத்துக்களைப் பிராமி எழுத்து வருவதற்கு முன்னே தமிழகத்தில் வழங்கி வந்த பழைய தமிழ் எழுத்திலிருந்து எடுத்துப் பிராமி எழுத்துக்களோடு அமைத்துக் கொண்டனர்.

**பிராமி எழுத்தின் ஒலி வடிவம்:**

பழங்காலத்தில் பாரத நாடு முழுவதும் வழங்கிவந்த பிராமி எழுத்து பிற்காலத்தில் வேறு எழுத்துக்கள் தோன்றிவிட்ட காரணத்தினால், மறக்கப்பட்டு மறைந்து போயிற்று. நெடுங்காலத்துக்கு முன்பே பிராமி எழுத்துச் சுவடிகள் மறைந்து விட்டன. ஆனால், மலைப்பாறைகளிலும் குகைகளிலும் எழுதி வைக்கப்பட்ட பிராமி எழுத்து சாசனங்கள் அழியாமல் வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் அங்கங்கே இருக்கின்றன. இவற்றையெல்லாம் தொல் பொருள் ஆய்வுத் துறையினர் பல ஆண்டுகளுக்கு முன்பே கண்டுபிடித்தனர். பிராமி எழுத்தின் வரிவடிங்களே காணப்பட்டவையெல்லாம். அவற்றின் ஒலி வடிவங்கள் மறைந்து போயின. அவற்றின் ஒலி வடிவங்கள் ஒருவருக்கும் தெரியவில்லை. அசோக மாமன்னரின் பிராமி எழுத்துக் கல்வெட்டுக்களும் மற்றும் வேறு பல பிராமி எழுத்துக் கல்வெட்டுக்களும், அவ்வெழுத்துக்கள் ஒலிவடிவம் தெரியாதபடியால் படிக்கப்படாமலே கிடந்தன. இந்தக் கல்வெட்டுக்களைப் படிக்க திறவுகோல் கிடைக்காமல் இருந்தது.

கடைசியாக கி.பி.18 ஆம் நூற்றாண்டில் பிரின்ஸிப் என்னும் பெயருள்ள ஆங்கிலேயர் பல காலம் முயன்று பிராமி எழுத்துக் கல்வெட்டுக்களைப் படித்துத் திறவு கோலைக் கண்டுபிடித்தார். அதாவது பிராமி எழுத்தில் மறைந்து போன ஒலி வடிவத்தைக் கண்டுபிடித்தார். அக்காலத்தில் ஆங்கிலேய தளபதிக்கு அங்கு பழங்காசுகள் கிடைத்தன. அந்தக் காசுகளை அவர் வங்காள நாட்டுக்கு அனுப்பினார். பழம் பொருள் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த பிரின்ஸிப் அந்தப் பழங்காசுகளை ஆராய்ந்தார். அந்தப் பழங்காசுகள் சிலவற்றில் அசோக மன்னர் காலத்து எழுத்துக்கள் (பிராமி எழுத்துக்கள்) பொறிக்கப்பட்டிருந்தன. அக்காசுகளின் மறுபக்கத்தில் பழைய கிரேக்க எழுத்துக்களும் பொறிக்கப்பட்டிருந்தன. கிரேக்க எழுத்துச் சொற்களே பிராமி எழுத்திலும் எழுதப்பட்டிருந்தது. என்பதை அறிந்த இவர் கிரேக்க ஒலியைக் கொண்டு பிராமி எழுத்துக்களின் ஒலியைக் கண்டுபிடித்தார். இப்படிப்

பல காலம் உழைத்ததன் விளைவாகப் பழைய பிராமி எழுத்துக்களின் ஒலியைக் கண்டுபிடித்தார். இப்படிப் பல காலம் உழைத்ததன் விளைவாகப் பழைய பிராமி எழுத்துக்களின் மறைந்து போன ஒலி வடிவத்தைக் கண்டறிந்தார். பிராமி எழுத்தின் வரிவடிவத்திற்கு ஒலி வடிவம் கண்டு பிடிக்கப்பட்டதனால் பழைய பிராமி எழுத்துக் கல்வெட்டுக்கள் வாசிக்கப்பட்டன. பல நூற்றாண்டுகளாக மறைந்து கிடந்த பிராமி எழுத்து வாசகம் 18ஆம் நூற்றாண்டில் படிக்கப்பட்டது.


**தமிழ் பிராமி எழுத்துக்கள்:**

1906 ஆம் ஆண்டு முதல் அவ்வப்போது தமிழ் நாட்டில் ஆங்காங்கிருந்த பிராமி எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்ட போதிலும் அந்த எழுத்துக்கள் நெடுங்காலம் படிக்கப்படவில்லை. பழம் பொருள் ஆய்வுத்துறையினர். இவ்வெழுத்துகள் பாலி மொழி அல்லது பிராகிருத மொழியால் எழுதப்பட்டிருப்பதாக கருதினார்கள். இந்தக் கருத்து பல ஆண்டுகள் நிலவி இருந்தது. இந்தப் பிராமி எழுத்துக்கள் தமிழ்மொழியில் எழுதப்பட்டன என்பதைப் பல ஆண்டுகளுக்குப் பின் அறிந்தனர். பிறகு இவ்வெழுத்துக்களைப் படித்த சிலர் தமிழராக இருந்தும் இக்கல்வெட்டுக்களின் கருத்தைச் சரியாக அறியவில்லை. காரணம் என்னவென்றால் இந்த எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட காலத்தில் (கடைச் சங்க காலத்தில்) தமிழ்நாட்டில் இருந்த இலக்கியங்களையும், பழக்கவழக்கங்களையும், நாகரீகங்களையும் அறியாததுதான், மற்றும் வட இந்திய (ஆரிய) தொடர்புகளை இந்தக் கல்வெட்டுக்களோடு இணைக்க வேண்டும் என்னும் கருத்துடன் இவர்கள் ஆராய்ந்தனர். இதனால் இவர்களுடைய ஆராய்ச்சிகள் பிழைபட்டுள்ளன. அவர்கள் வெவ்வேறு கருத்துக்களை வெளியிட்டனர். தவறு இல்லாமல் சரியாக வாசிக்கப்பட்ட வாசகங்கள் மிகச் சிலவே.

**முத்துப்பட்டி பிராமி எழுத்து:**

மதுரையிலிருந்து திருமங்கலத்துக்குப் போகின்ற சாலையில் பத்துக்கல் தொலைவில் முத்துப்பட்டி இருக்கின்றது. இந்தச் சிற்றூரின் சாலையில் இடப்பக்கமாக உம்மணாமலை என்னும் குன்றுகள் இருக்கின்றன. கடைசிக் குன்றிலே இவ்வூருக்கருகில் பெரிய குகை ஒன்று இருக்கின்றது. கிழக்கு மேற்காக அமைந்திருக்கிற இக்குகையின் நீளம் 43 அடி, உயரம் 5 அடி இங்கு முப்பதுக்கு மேற்பட்ட கற்படுக்கைகள் இருக்கின்றன. இங்கு ஐந்து

இடங்களில் பிராமி எழுத்துக்கள் வெட்டப்பட்டுள்ளன. இரண்டு கல்வெட்டெழுத்துக்கள் படிக்க முடியாதபடி அதிகமாகச் சிதைந்து உள்ளன. இவை 1910 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டு 1910 ஆம் ஆண்டுஸ்ரீ சாசனத் தொகுதியில் 58,59,60 ஆம் எண்ணுள்ளவையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றின் வரி வடிவம் இது.



திரு.கிருஷ்ணசாத்திரி இவற்றை 1. விநதை ஊர, 2.சைய அளனா, 3.காவிய என்று படித்துள்ளார். திரு.கே.சுப்பிரமணிய அய்யர் இவ்வாறு கூறுகின்றார்.

**சைய அளன் விநதை ஊர கவிய்:** கவிய் - காவி-குகை இந்தக் குகையில் வசித்தவர் பெயர் சையளன் விந்தை ஊரன் என்று பொருள் கூறுகின்றார்.

திரு.சி.நாராயணராவ், 'விநதை' ஊர 'சைய அலேன காவிய' என்று படித்து, விநதை ஊர என்பவருடைய குடைவான ஆசிரமம் என்று பொருள் கூறுகின்றார். திரு.டி.வி. மகாலிங்கம் 'விந்தை ஊர் சையளன் கவிய்' என்று படித்து 'விந்தை ஊர' சையளனுடைய குகை' என்று பொருள் கூறியுள்ளார்.


திரு.ஐ.மகாதேவன் கூறுவது 'சையனன் விந்தை ஊர் காவிய்' என்று படித்து, சையளன் (இலங்கையைச் சேர்ந்தவன்) ஆன விந்தை என்பவருடைய காவிய்(குகை) என்று பொருள் கூறுகின்றார்.

இதை 'விந்தை ஊர் சையளன் காவய்' என்று படிக்கலாம். விந்தையூர் சையளன் காவய் என்பவர் இக்கற்படுக்கையை அமைத்தார் என்பது பொருள்.

**மருகால் தலை பிராமி எழுத்து:**

திருநெல்வேலிக்கு அருகில் உள்ள பாளையங்கோட்டைக்கு வடகிழக்கே பத்துக்கல் தூரத்தில் மருகால் தலை கிராமம் இருக்கிறது. இந்தக் கிராமத்தில் பூவிநுனுடையார்மலை என்னுங் குன்றின் மேல் பிற்காலத்தில் அமைக்கப்பட்ட சில சிறு கோயில்கள் இருக்கின்றன. இந்தக் குன்றின் இன்னோர் இடத்தில் இயற்கையாக அமைந்த பொடவு (குகை) ஒன்றிருக்கிறது. இந்தப் பொடவில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே வசித்திருந்த பௌத்த முனிவர்களுக்காக அமைக்கப்பட்ட கல்படுக்கைகள் காணப்படுகின்றன. இந்தக் குகை வாயிலின் மேற்புற நெற்றியில் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல ஆண்டுகளாக மறைந்து கிடந்த இந்தப் பிராமி எழுத்து 1906ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. பல நூற்றாண்டுகளாக மறைந்து கிடந்த பிராமி எழுத்துக் கல்வெட்டுக்களில் முதல் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டெழுத்து இதுவே. இது சாசனத் தொகுப்பில் 1906 ஆம் ஆண்டு 407 ஆம் எண்ணாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது. சாசன இலாகாவில் 1907 ஆம் ஆண்டு அறிக்கையில் 60ம் பக்கத்தில், இது அசோகன் சாசன எழுத்துக்களைப் போன்ற எழுத்தில் பாலி மொழி சாசனம் என்று கூறப்படுகிறது. இந்தப் பிராமி எழுத்துக் கல்வெட்டு பாலி மொழியில் எழுதப்பட்டது என்று கருதியபடியால் இதைப் பல ஆண்டுகளாகப் படிக்காமலே வைத்திருந்தார்கள். பல ஆண்டுகளுக்குப் பிறகுதான் இது தமிழ்மொழிக் கல்வெட்டு என்பதைக் கண்டுபிடித்தார்கள்.

இந்த எழுத்துக்கள் ஒரே வரியில் பதினொரு எழுத்துக்களைக் கொண்டது. இந்த எழுத்துக்களின் அளவு. 1 அடி முதல் 1 அடி 3 அங்குலம் வரையில் உள்ளது. இதன் வரி வடிவம் இது.



இந்த எழுத்தின் நான்காவது எழுத்து பிராகிருத ஸி என்னும் எழுத்து. மற்ற எழுத்துக்களெல்லாம், தமிழ் எழுத்துக்களே.

திரு.எச்.கிருஷ்ணசாத்திரி இந்த எழுத்துக்களைக் கீழ்வருமாறு படித்தார்.

'வேணகோஸி பானா குடு பிதா க(ா) (ளா) காஞசணான' கோஸிபானா என்பதை காஸ்யபானாம் என்னும் சமஸ்கிருதச் சொல்லோடு ஒத்திருக்கிறது. குடுபிதா என்பது கொட்டு வித்தான் (வெட்டினான்) என்றும் பொருள் உள்ள சொல். கோஸிபானா என்பதில் கோ என்னும் எழுத்து ஸி போலக் காணப்படுகிறது.

திரு.கே.வி.சுப்பிரமணிய ஐயர் இந்த எழுத்துக்களை இவ்வாறு படித்துள்ளார்.

வேண்கோஸிபன் குடுபிதா காள காஞ்சனம்.

வேண் நாட்டு காஸ்யபன் (அல்லது வேளிர் தலைவன் காஸ்யபன்)

கொத்து -வித்த சுபமுள்ள (அல்லது கல்லினாலான) ஆசிரமம்.

காள என்பது கல்ய என்னும் சமஸ்கிருதச் சொல். இது மங்கலம் என்னும் பொருள் உள்ளது. இதற்கு கல் என்னும் மலை என்னும் பொருள் கொள்ளலாம். குடுபிதான் என்பதிலுள்ள குடு என்பது கொட்டு (அறு) என்னும் பொருள் உள்ளது. காஞ்சனம் என்பது பொதுவாகப் பொன் என்னும் பொருளுடையதானாலும் இங்கு ஆசிரமத்தைக் குறிக்கிறது. திரு.சி.நாராயணராவ் இதைப் பிராகிருதமாகப் படித்துப் பிறகு அந்தப் பிராகிருதத்தைச் சமற்கிருதமாக்குகிறார். அவர் இவ்வாறு படித்துப் பொருள் கூறுகிறார்.

'வேண கோஸிபான குட்டுபிதா காளகாஞ்சனம் (பிராகிருதம்)'

'வேணாகி ஸிபான குட்டுபிதா கால காஞ்சனம்' (சமற்கிருதம்)

பௌத்த விநய பிரகத்தைச் சேர்ந்த அல்லது வேணாகி, வேநாயகி என்னும் பெயருடைய) சில்பி குலத்தைச் சார்ந்த ஒரு பெண் மகளால் செய்விக்கப்பட்ட கல்கால காஞ்சனம்?

திரு.டி.வி.மகாலிங்கம் இந்த எழுத்துக்களை இவ்வாறு படித்துள்ளார்.

வேண்கோஸிபன் குட்டுபித கல கஞ்சனம்.

வேள் + கோஸிபன் = வேண்கோஸிபன் எ ன்றாயிற்று வேள் என்பதற்குத் தலைவன் என்னும் பொருள் கொள்ளலாம். இச்சொல்லுக்கு யாகன் என்னும் பொருளும் உண்டு. பிற்காலச் செவிவழிச் செய்தி, வேள் அல்லது வேளிர் என்பவர் வேள்வித் தீயிலிருந்து தோன்றியவர் என்று

கூறுகிறது. குடு பித என்பது குடுப்பித்த அல்லது கொடுப்பித்த என்னுஞ் சொல்லாகும். கல் + கஞ்சனம் என்பதை கல் + சஞ் + சணம் என்று பிரிக்கலாம். தம் + சணம் + சஞ்சணம், கம் என்பதன் பொருள் கம்மியர்: கம்மாளர் என்பது, சணம் என்பது படுக்கை என்னும் பொருளுள்ள சயனம் என்னும் சமற்கிருதச் சொல்.

உறையுள் அல்லது படுக்கை கல்லினால் அமைக்கப்பட்டு வேண் கோஸிபனால் தானமாகக் கொடுக்கப்பட்டது. என்பது இதன் கருத்து.

திரு.ஐ.மகாதேவன் இதை இவ்வாறு வாசித்துள்ளார். ‘‘வேண் காஸிபன் கொடு பித கல் கஞ்சணம்” ‘வேள் காஸிபனால் கொடுக்கப்பட்ட கல்படுக்கை’ இதில் திரு.சி.நாராயணராவ் படித்துப் பொருள் கூறுவது முழுவதும் பொருத்தம் இல்லாதது என்பது நன்றாகத் தெரிகிறது.

திரு.எச்.கிருஷ்ணசாத்திரி. குடுபிதா என்பது கொட்டுவித்தான் (வெட்டுவித்தான்) என்று பொருள் கூறுவது ஏற்கத் தக்கதன்று.

திரு.கே.வி.சுப்பிரமணிய ஐயர், வேண் கோஸிபன் என்பதற்கு வேண் நாட்டுக் காஸ்யபன் என்றும் வேளிர் தலைவன் என்றும் இருவகையாகப் பொருள் கூறுவது ஏற்கத்தக்கதன்று. காள என்பதற்குச் சுபமுள்ள என்றும், கல்லினால் செய்த என்றும் பொருள் கூறுவதும் ஏற்கத்தக்கதன்று. காள என்பது கல்ய என்னும் சமற்கிருத மொழிச்சொல் என்றும் மங்கலம் என்றும் பொருள் உள்ளது என்றும் கூறுவது பொருத்தமற்றவை. குடு என்பது கொட்டு (அறு) என்று பொருள் கூறுவது பொருத்த மற்றது.

திரு.டி.வி.மகாலிங்கம் அவர்கள், வேண்கோசிபன் என்பது வேள் + கோசிபன் = வேண்கோசிபன் என்றாயிற்று என்று கூறுவது புதுமையாக இருக்கிறது. வேள் + கோசிபன் = வேட்கோசிபன் என்றாகுமேயல்லாமல் வேண்கோசிபன் என்றாகாது. வேள் + கோ = வேட்கோ என்றாவது போல் வேள் + கோசிகன் = வேட்கோசிகன் என்று ஆகும். வேண்கோசிகன் என்றாகாது. ஆகவே இவர் கூறுவது தவறு, வேள் என்பது யாகம் என்னும் பொருள் உடைய சொல் என்றும், வேளிர், வேள்வித் தீயில் இருந்து வந்தவர்

என்று செவிவழிச் செய்தியுண்டு என்றும் கூறுகிறார். வேளிர் எல்லோரும் யாகத் தீயில் இருந்து வந்தவர் அல்லர். துவரை (துவாரசமுத்திரம்) யையாண்ட புலிகடிமால் வேளிரும், இருங்கோவேள் பரம்பரையும் வேள்வித் தீயில் இருந்து வந்தவர் என்று கூறப்பட்டனரே தவிர எல்லா வேளிரும் வேள்வியில் இருந்து தோன்றவில்லை. பகாப்பதமாகிய தஞ்சணம் என்பதை இவர் கம் + சணம் என்று பிரித்துக் கம் என்பதற்குக் கம்மியர், கம்மாளர் என்றும் சணம் என்பதற்குச் சயனம் (படுக்கை) என்றும் பொருள் கூறுவது குத்திரயுக்தியாக இருக்கிறதே தவிர ஏற்றுக் கொள்ளத் தக்கதாக இல்லை.

திரு.ஐ.மகாதேவன் இந்தச் சாசனத்தைச் சரியாகவே படித்திருக்கிறார். ஆனால், இவர், வேண்காசிபன் என்பதை வேள்காசிபன் என்று படித்திருப்பது தவறு என்று தோன்றுகிறது.

இனி இந்தப் பிராமி எழுத்து வாசகத்தை நாம் படித்து பொருள் காண்போம்.

“வெண் காஸிபன் கொடுபித கல் கஞ்சணம்” என்று இதைப் படிக்கிறோம். இதனை விளக்கிக் கூறுவோம் முதற்சொல் வெண் என்பது பிராமி எழுத்தில் எகரமும், ஏகாரமும் ஒரே மாதிரி எழுதப்படுகிறது. இதை வெண் என்றும் வேண் என்றும் படிக்கலாம். மேலே கூறப்பட்ட அறிஞர்கள் இதை ‘வேண்’ என்று படித்துள்ளனர். ஆனால் வெண் என்று படிப்பதே இந்த இடத்திற்குப் பெரிதும் பொருந்துகிறது. முதல் ஆறு எழுத்துகளையும் ‘வெண்காசிபன்’ என்று படிக்கலாம். சங்ககாலத்தில் வெண் என்னும் தொடக்கத்தையுடையவர் இருந்ததைச் சங்க இலக்கியங்களில் காண்கிறோம். வெண்கண்ணனார், வெண்கொற்றனார், வெண்பூதனார், வெண்பூதியார், வெண்மணிப் பூதியார் என்னும் பெயர்கள் சங்க காலத்தில் வழங்கி வந்ததை அறிகிறோம்.

வெண்கண்ணனார் அகநானூறு 130, 192ஆம் செய்யுள்களைப் பாடிய புலவர், வெண் கொற்றனார் குறுந்தொகை 86ஆம் செய்யுளைப் பாடிய புலவர், வெண்பூதனார் குறுந்தொகை 83 ஆம் செய்யுளைப் பாடியவர், வெண்பூதியார் குறுந்தொகை 86ஆம் செய்யுளைப் பாடிய புலவர், வெண்பூதியார் குறுந்தொகை 97, 174, 219ஆம் செய்யுள்களைப் பாடியவர். ஆகையால், இந்தப் பிராமிக் கல்வெட்டெழுத்தில் கூறப்படுபவரை

வெண்காசிபன் என்று கொள்வதுதான் சாலப் பொருத்தம் ஆகும் இப்படிக் கொள்வது தான் அந்தக் காலச் சூழ்நிலைக்குப் பொருத்தமாக இருக்கிறது.

அடுத்த நான்கு எழுத்துக்கள் 'குடுபித' என்றிருக்கின்றன. இந்தச் சொல் 'குடுப்பித்த' என்றிருக்க வேண்டும். தகர ஒற்றெழுத்து எழுதப்படவில்லை. இது கற்றச்சனுடைய பிழையாக இருக்கலாம். குடு, என்பதும் கொடு என்பதும் ஒரே பொருளுடைய சொற்கள், குடு, கொடு என்னும் சொற்கள் சாசனங்களில் பயின்று வந்துள்ளன.

இதற்கு அடுத்த இரண்டு எழுத்துக்கள் 'கல' என்று எழுதப்பட்டிருக்கிறது. இதைக் கல் என்று வாசிக்கிறோம். புள்ளியிடப்படவேண்டிய எழுத்துக்கள் புள்ளியிடப்படாமலே பெரும்பாலும் எழுதப்படுகின்றன. ஆகவே இதைக் கல் என்று ஐயமில்லாமல் படிக்கலாம். கல் என்றால் மலை என்பது பொருள்.


கடைசி ஐந்து எழுத்து 'காஞசணம' என்றிருக்கிறது புள்ளி வைக்கவேண்டிய எழுத்துக்களுக்குப் புள்ளி வைத்துப் படித்தால் 'காஞ்சணம்' என்று படிக்கலாம். இது தமிழ்ச் சொல் அன்று பிராகிருத மொழிச் சொல்லாக இருக்கலாம். இதனுடைய நேரான பொருள் தெரியவில்லை. இந்த இடத்தில் இது கற்படுக்கைகளைக் குறிக்கிறது.

'வெண் காஸிபன் கொடுப்பித்த கல் காஞ்சணம்' என்று படிக்கிறோம்.

வெண் காசிபன் என்பவர் முனிவர்களுக்காக மலைக்குகையில் அமைத்துக் கொடுத்த கற்படுக்கை என்பது இதன் பொருள்.

**குறியீடுகள்:**

பிராமி எழுத்து வாக்கியங்களின் இறுதியில் சில குறிகள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. கொங்கர் புளியங்குளம் அழகர்மாலை இவ்விரண்டு இடங்களில் உள்ள பிராமி எழுத்துச் சொற்றொடர்களில் கடைசியில் இக்குறிகள் காணப்படுகின்றன. மற்ற இடங்களில் இக்குறிகள் காணப்படவில்லை. அந்தக் குறிகள் இவை.



இந்தக் குறியீடுகளும் வேறுசில குறியீடுகளும் இலங்கையில் உள்ள பிராமி எழுத்துக் கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன.

இந்தக் குறியீடுகள், வாக்கியத்தின் முடிவைக் காட்டுகின்றன என்று அறிஞர் சிலர் கருதுகிறார்கள். கிருஷ்ணசாத்திரி, கே.வி.சுப்பிரமணிய அய்யர், ஐ.மகாதேவன், டி.வி.மகாலிங்கம் ஆகியோர் இவ்வாறு கருதுகின்றனர். இவர்களுடைய கருத்து தவறானது என்று தோன்றுகிறது. இந்தக் குறிகள் வேறு ஏதோ பொருளைத் தெரிவிக்கின்றன.

இந்தக் குறியை சுவஸ்திகம் என்றும் இது மங்கலத்தைக் குறிக்கிறது என்றும் திரு.கிருஷ்ண சாத்திரி கருதுகிறார். இவர் கூறுவது தவறு என்று தோன்றுகிறது. நாற்சதுரமாக அமைந்த இந்தக் குறி வேறு எதையோ குறிக்கிறது என்று தோன்றுகிறது.

மேலே காட்டப்பட்ட குறிகள் ஏதோ எண்ணின் அளவை (பொன் அல்லது நாணயத்தின் மதிப்பைத்) தெரிவிக்கின்றன என்று தோன்றுகிறது. கொங்கர் புளியங்குளத்துக் கல்வெட்டில்,

'பாகலூர் போத்தன் பிட்டன் ஈந்தவை பொன்'

'குட்டு கொடங்கு ஈத்தவன் சிறு ஆதன் பொன்'

என்று எழுதப்பட்டுள்ளன. இந்தச் சொற்றொடர்களின் இறுதியில் உள்ள குறிகள், இவர்கள் செலவு செய்த பொன்னின் மதிப்பைத் தெரிவிக்கின்றன. இந்தக் குறியீடுகளின் முன் உள்ள 'பொன்' என்னும் சொல்லினால் அறிகிறோம். எனவே இந்த அடையாளங்கள் இவர்கள் இக்குகைகளில் கற்படுக்கைகளை அமைப்பதற்குச் செலவு செய்த பொன்னின் அளவை (மதிப்பைத்) தெரிவிக்கின்றன என்பது ஐயமில்லாமல் தெரிகிறது.

அழகர் மலைப் பிராமி எழுத்துக் கல்வெட்டுக்களிலும் குறியீடுகள் காணப்படுகின்றன. ஆனால், குறியீடுகளின் முன்பு 'பொன்' என்னும் சொல் இல்லை. இல்லாமற் போனாலும் இக்குறியீடுகள் செலவு செய்யப்பட்ட

பொன்னின் மதிப்பைக் குறிக்கின்றன. என்று கருதலாம். அக்குறியீடுகள் இவை.

'மதுரை பொன் கொல்லன் ஆதன் ஆதன்'

'மதுரை உப்பு வாணிகன்'

'பணித வாணிகன் நெடுமூலன்'

'அணிகன்'

கொழுவாணிகன் இளங்சேந்தன்' இந்தப் பெயர்களின் இறுதியில் உள்ள குறியீடுகள் இப்பெயருள்ளவர் இக்குகையில் கற்படுக்கைகளை அமைப்பதற்காகச் செலவு செய்த தொகையைக் குறிக்கின்றன என்பது நன்றாகத் தெரிகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வழங்கிவந்த இந்தக் குறியீடுகள் குறிப்பிடுகிற பொன்னின் அளவை (மதிப்பு) இன்னதென்று இப்போது தெரியவில்லை.

**மொழி:**

தமிழ்நாட்டுப் பிராமி எழுத்துக் கல்வெட்டுக்கள் கண்டு பிடிக்கப்பட்டபோது, கல்வெட்டு ஆராய்ச்சிக்காரருக்குக் குழப்பத்தை உண்டாக்கிவிட்டது. இலங்கையிலும், வடஇந்தியாவிலும் காணப்படுகிற பிராமி எழுத்துக் கல்வெட்டுக்கள் எல்லாம் பிராகிருத மொழியில் எழுதப்பட்டிருக்கிறபடியால் தமிழ் நாட்டில் காணப்படுகிற பிராமி எழுத்துக் கல்வெட்டுக்களும் பிராகிருத மொழியில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று அவர்கள் கருதினார்கள். அவ்வாறே கல்வெட்டு இலாகா ஆண்டு அறிக்கையிலும் இவை பாலி மொழியில் எழுதப்பட்டவை என்று எழுதினார்கள். ஆனால் படிக்க முயன்றபோது பிராகிருத மொழிக்கு மாறுபாடான வாக்கியங்களும் சொற்களும் காணப்பட்டன. கடைசியில் இந்த எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ளது தமிழ்மொழி என்று அறிந்தனர். ஆனால், பாலி, அர்த்தமாகதி போன்ற பிராகிருத மொழிச் சொற்களும் இக்கல்வெட்டுக்களின் இடையிடையே காணப்படுகின்றன. இந்தச் சொற்களை சமற்கிருத மொழிச் சொற்கள் என்று அவர்கள் கருதினார்கள். ஆனால் அவர்களுடைய கருத்து தவறானது. அவை சமற்கிருத மொழிச் சொற்கள் அல்ல, : பிராகிருத மொழிச்சொற்கள், இக்கல்வெட்டெழுத்துக்களை எழுதியவர் பௌத்த சைன சமயத்தவர். இவர்கள் பிராகிருத மொழியைப் பயின்றவர். ஆகவே இந்தக் கல்வெட்டு வாக்கியங்களில் பிராகிருத மொழிச் சொற்களைச் சேர்த்து

எழுதினார்கள். சங்க காலத்திலே தமிழில் வடஇந்திய மொழியான பிராகிருதச் சொற்களே முதலில் கலந்தன. ஏனென்றால், பிராகிருத மொழியைப் பயின்றவர் பௌத்த சமண சமயத்தவர்களே, தமிழ்நாட்டில் எழுதப்பட்டுள்ள பிராமி எழுத்துக் கல்வெட்டுக்கள் எல்லாம் தமிழ்மொழியிலேயே எழுதப்பட்டுள்ளன. அவை கடைச்சங்க காலத்தில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கும் கி.பி.மூன்றாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டவை. அவை பிராகிருத மொழி பயின்ற பௌத்த சமணர்களால் எழுதப்பட்டவையாகையால் இத்தமிழ் மொழித் தொடரின் இடையிடையே பிராகிருத மொழிச்சொற்களும் இடம் பெற்றுள்ளன. பிராகிருத மொழிச் சொற்கள் கலவாத தமிழ் மொழித் தொடர்களும் இந்தக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன.

**இடர்ப்பாடுகள்:**

பிராமி எழுத்துக் கல்வெட்டுக்களைப் படிப்பதில் இடர்ப்பாடுகள் உள்ளன. இவ்வெழுத்துக்கள் கற்பாறைகளில் எழுதப்பட்டுள்ளபடியால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட இந்த எழுத்துக்கள் காலப் பழமையினாலும் தட்ப வெப்பக் கால நிலைகளினாலும் தேய்ந்தும், மழுங்கியும், உருமாறியும், உள்ளன. கற்பாறைகளில் உள்ள கீறல், பிளவு, வெடிப்பு, புள்ளி புரைசல்கள் முதலானவற்றினால் கல்வெட்டெழுத்துக்களின் சரியான வடிவம் தெரிவதில்லை. சில இடங்களில் இன்ன எழுத்துத்தான் என்று அறிய முடியாதபடி சிதைந்துள்ளன. அவற்றின் சரியான வடிவத்தைக் கண்டுபிடித்துப் படிப்பது சங்கடமாக இருக்கிறது.

எழுத்தைப் பொறித்த கற்றச்சர் சில சமயங்களில் இடையே எழுத்துக்களைப் பொறிக்காமல் விட்டுவிடுவதும் உண்டு. இந்தப் பிழை பெரும்பாலும் ஒற்றெழுத்து இரட்டித்து வரும் இடங்களில் காணப்படுகின்றது. பளி, கொடுபிதவன், குறு, குன்றது, தசன், உபு, இயகன் என்று ஒற்றெழுத்து இரட்டிக்காமல் விடுபட்டிருக்கும். இவற்றை முறையே பள்ளி, கொடுப்பித்தவன், குன்று, குன்றத்து, தச்சன், உப்பு, இயக்கன் என்று இடமறிந்து படிக்க வேண்டும்.

புள்ளி இடப்பட வேண்டிய எழுத்துக்கள் பெரும்பாலும் புள்ளி இல்லாமலே பொறிக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாகச் சிலவற்றைக்

கூறுகிறோம். பெருங்கடுங்கோன, தமமம, அதிடடானம, கிரன, ஊர, ஆதன என்று பொறிக்கப்பட்டிருக்கும். இவற்றைப் புள்ளியிட்டு முறையே பெருங்கடுங்கோன், தம்மம், அதிட்டானம், கீரன், ஊர், ஆதன் என்று படிக்க வேண்டும்.

இகர ஈற்றுச் சொற்களும் ஐகார ஈற்றுச் சொற்களும் சில இடங்களில் யகர மெய் சேர்த்து எழுதப்பட்டுள்ளன. மனிய், ஆந்தைய், மதிரைய், கனிய், பாளிய், வழுத்திய் என்று எழுதப்பட்டவை முறையே மனி, ஆந்தை மதிரை, கனி, பாளி வழுத்தி என்று படிக்கப்படவேண்டும். சில இடங்களில் இகர ஈற்றச் சொற்களின் கடைசியில் இகரமும் யகர மெய்யும் சேர்த்து எழுதப்பட்டிருப்பதும் உண்டு. நெல்வெளிஇய், பாளிஇய் என்பவற்றை நெல்வெளி, பாளி என்று படிக்க வேண்டும் இவ்வாறு எழுதுவது அக்காலத்து முறை.

**நடுகல்:-**

மிகப் பழங்காலம் தொட்டுக் கல்வெட்டுக்கள் இத்தமிழ் கூறும் நல்லுலகில் நின்று நிலவின என்பதற்கு ஓல்காப் புகழ்பெற்ற தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் சான்றுகள் நிறைந்துள்ளன. போரில் புறங்காட்டாது வென்றுபட்ட வீரர்களுக்கு நடுகல் எடுத்த வழக்கம் பண்டைய நாளில் இருந்தது. இறந்தவரை நினைவு கூர்தல் பொருட்டு அந்நடுகல் எடுக்கப்பெற்றது. அந்நடுகற்கள் இருந்த இடங்கள் கோயில்களாயின. அவற்றில் வழிபாடுகள் நிகழ்ந்தன. நடுகல்லின் முன் சூலமும் கத்தியும் நட்டினர். அதற்கு எண்ணெய் பூசி மாலைகூட்டினர்: நாட்பலியூட்டி நன்னீராட்டினர் ஒண்ணுதல் அரிவையர் நெல்லைத்தூவிப் பரவினர்: நெய்ப்புகை கமழச் செய்தனர் : நாரரி கள்ளைச் சிறுகலத்து உகுத்துப் படைத்தனர்.

‘காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்
சீர்தகு சிறப்பின் பெரும்படை வாழ்த்தலென்று
இரு மூன்று வகையில் கல்லொடு புணா’

என்றும் தொல்காப்பிய அடிகள் நடுகல் சான்றை நவிலும் குறிப்பாகும். கல் இருந்த இடம் சென்று கல்லைத் தேர்ந்தெடுத்துக் காண்டல் காட்சி எனப்பெறும். கல் தேர்ந்தெடுக்கச் செல்லும் போது வீரர் பலருடன் பாணரும் கூத்தரும் சென்று பாடி மகிழ்ந்து கல்லை நட்டுவர். அது கால்கோள்

எனப்பெறும். அக்கல்லைச் சூழ்ந்து மாலையணிவித்து, மதுவை அளித்து நறும் புகை கூட்டி நன் மணி இசைத்து மஞ்சள் நீராட்டி நீர் வாவியில் இடுவது வழக்கம் இதை நீர்ப்படை செய்தலென்பர். பின்னர் ஆட்டுப் பலியிட்டு, மயிற்பீலி சூட்டி, பாடலை சாத்தி பல்லியம் இயம்ப விழாவெடுத்து அக்கல்லை நடுவது நடுகலாகும். நடப்பட்ட கல்லுக்குக் கோவில் எடுத்து மதிலும் வாயிலும் அமைத்து ஏனைய சிறப்புக்கள் பல படைத்தலை பெரும்படை என்பர். பின்னர் அக்கல்லின் முன் வாள் ஊன்றி மணி இசைப்ப அக்கல்லை வாழ்த்துவர்.

**இலக்கியச் சான்றுகள்:**

நடுகல் எடுத்த நாளில் வீரனுடைய பெயரும் பெருமையும் எழுதினர் என்பதற்குச் சங்க இலக்கியச் சான்றுகள் பல உள்ளன.

'நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்
பெயரும் பீடும் எழுதி யதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்'.
'விழுத்தொடை மறவர் வில்லிட வீழ்ந்தோர்
எழுத்துடை நடுகல் இன்னிழல் வதியும்'.
'பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்'.
'மருங்குல் நுணுகிய பேஎழுதிர் நடுகல்
பெயர்பயம் படரத் தோன்று குயிலெழுத்து'
'கூருளி குயின்ற கோடுமா யெழுத்து'
'அணிமயிற் பீலி சூட்டிப் பெயர் பொறித்து
இனி நட்டனரே கல்லும்'
'நிலைபெறு நடுக லாகியக் கண்ணும்
இடம் கொடுத தளிப்ப மன்ற'
'நடுகற் பீலி சூட்டி நாரரி
சிறுகலத் துடுப்பவும் கொள்வன் கொல்லோ'
'இல்லடு கள்ளின் சில்குடிச் சீறூர்
புடை நடு கல்லின் நாட்பலி யூட்டி''

‘விழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர்
எழுத்துடை நடுக லன்ன விழுப்பிணர்ப்
பெருங்கை யானை’’
‘செல்ல நல்லிசைப் பெயரொடு நட்ட
கல்லேக கவலை யெண்ணு மிகப் பலவே’
‘கிடுகு நிரைத் தெ.:.கூன்றி,
நடுகல்லி னாண்போல
என்னைமுன் நில்லன்முன் தெவ்விர் பல ரென்னை
முன்னின்று கல்நின் றவர்’
‘எழுத்துடைக் கல்நிரைக்க வாயில் விழுத்தொடை
அம்மாறு அலைக்கும் சுரம் நிரைந்து
‘கொடுவில் எயிர்தம் கொல் படையால் வீழந்த
தடிநிணம் மாற்றிய பேஎய் - நடுகல்
விரிநிழல் கண்படுக்கும் வெங்கானம்’
‘ஆனா வென்றி அமரில் வீழ்ந் தோற்குக்
கான நீளிடைக் கற்கண் டன்று’

மேற்காணும் இலக்கியச் சான்றுகள் கல்வெட்டில் பெயரும் பெருமையும் பொறித்து வணங்கி வழிபட்ட பண்பினைப் பறை சாற்றுகின்றன.

எழுத்துடை நடுகல், எழுத்துடைக் கல் என்பன நடுகற்களின் காலத்தால் முற்பட்டவையாகும். எழுத்து என்பது ஓவியத்தைக் குறிக்கும். ஆதலால் முதன்முதலில் நடுகல் எடுத்த போது வீரர்கள் உருவத்தைக் கோடுகளாக வண்ணத்தில் வரைந்துள்ளனர். பாறைக் கற்களில் பழங்காலத்தில் கோடுகளால் வரையப்பெற்ற பல்வேறு கோட்டுருவங்கள் தமிழகத்தில் கிடைத்துள்ளன. அவை காலச்சூழலில் அழிந்தன. அதன் வளர்ச்சி நிலையாக பின்னர் கூர்மையான உளியைக் கொண்டு கோடுகளைக் கல்லில் குடைந்து வரையத் தொடங்கினர். அவற்றைச் சங்க இலக்கியப் பாடல்களில் பயின்றுள்ள ‘குயிலெழுத்து’ ‘குயின்ற’ என்னும் சான்றுகளால் அறியலாம். சங்ககாலப் பிற்பகுதியில் வீரர்களின் உருவத்தைக் கல்லில் செதுக்கி அவருடைய பெயரையும், பெருமையையும் பொறிக்கும் வழக்கம் வளர்ச்சியடைந்து. இத்தகைய நடுகல் எடுத்த வழக்கமே தமிழ்நாட்டில்

தோன்றிய முதன்மையான கல்வெட்டு அமைப்பு முறைக்கும் சிற்பமுறைக்கும் அடிப்படையாகும். இம்முறை தொடர்ந்து வந்துள்ளது என்பதற்கு கி.பி.எட்டாம் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற மும்மணிக்கோவையில்

"பட்டோர் பெயரும் ஆற்றலும் எழுதி

நட்ட திறம் மூதூர் நத்தமும்"

என்று கூறி இருப்பதால் அந்நடுகல் வழக்கம் சங்க காலத்துக்குப் பின்னரும் தொடர்ந்து வந்துள்ளதை அறியலாம்.

**நடுகற்களின் வகைகள்:**

கொங்கு நாடு, தருமபுரி வடஆற்காடு ஆகிய பகுதிகளில் நடுகற்கள் அதிகம் காணப்படுகின்றன. இவை கி.பி 5ம் நூற்றாண்டு முதல் கி.பி 18ஆம் நூற்றாண்டுகளின் காலத்திற்கு உட்பட்டவை ஆகும். நினைவுக் கற்கள் நடுகல், வீரக்கல், சதிக்கல் என மூன்று வகைப்படும். இவை ஒரு நல்ல மனிதனோ, அரசனோ இறந்த போது அவன் நினைவாக நடப்பட்டதாகும். நினைவுக்கல் தட்டை வடிவத்தில் ஒரு பக்கம் மட்டும் உருவங்களும் அடியில் எழுத்துக்களும் பொறிக்கப்பட்டோ அல்லது வெறும் உருவத்துடனோ அமைந்திருக்கும்.

போரில் வீரம் காட்டி இறந்துபோன வீரனின் பெயரையும் ஆற்றலையும் விளக்கி எழுதி நட்டகல் வீரக்கல் எனப்பட்டது. வீரனுடன் அவன் மனைவியும் இறந்திருப்பின் இருவருக்கும் சேர்த்து எடுக்கப்பட்ட கல் சதிக்கல் என அழைக்கப்பட்டது. ஆணின் இடது புறம் பெண் அமர்ந்த நிலையில் அல்லது நின்ற நிலையில் இருவரும் அவரவரது வலக்கையைத் தோளுக்கு அருகில் உயர்த்திக் காட்டுவதாகச் சதிக்கல்லில் செதுக்கப்பட்டு இருக்கும் இத்தகைய கற்கள் திருப்பரங்குன்றம், ஆனைப்பட்டி, விளாத்திகுளம், இலவேலங்காடு போன்ற பாண்டி மண்டலப் பகுதிகளில் அதிகமாகக் காணப்படுகின்றன.

## தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள்

தமிழக வரலாற்றின் தொன்மை பற்றிய ஏதொரு ஆய்விலும் பாண்டியநாடு என்று அழைக்கப்படும், தமிழகத்தின் தென்பகுதியிலுள்ள மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், குமரி மாவட்டங்களிலுள்ள கண்டெடுக்கப்பட்ட தமிழ்மொழிக் கல்வெட்டுக்கள் முக்கிய இடம்

வகிக்கின்றன. முதல் இருபது ஆண்டுகளில் கண்டுபிடிக்கப்பட்ட இக்கல்வெட்டுக்கள் மிக அண்மைக்காலம் வரைக்கும் புரியாத புதிராகவும், வகைப்படுத்த இயலாததாயும் இருந்தன. ஹெச்.கிருஷ்ணசாஸ்திரி, கே.வி.சுப்பிரமணிய அய்யர், கோபிநாதராவ் போன்ற தலைசிறந்த ஆரம்பகாலக் கல்வெட்டறிஞர்களால் இந்நிலையைப் போக்க பெருமுயற்சி மேற்கொள்ளப்பட்டது. இவ்வறிஞர்கள் பல புதிய சொற்களைக் கண்டுபிடித்தும், அசோகர், பட்டிப்புரோலு பிராமி கல்வெட்டுகளின் உதவியுடன் இவற்றை வாசிக்க முனைந்தனர் எனினும் இக்கல்வெட்டுகளை வாசிக்க இயலா வண்ணம் விளங்காத பல எழுத்துக்களும், சொல் அமைப்புகளும் இடையூறாக இருந்தன. வியக்கத்தகுந்த உள்ளுணர்வுடன் கே.வி.சுப்பிரமணிய அய்யர் இக்கல்வெட்டுகள் வேற்றுப்புலத்திலிருந்து பெற்ற பிராமி வரிவடிவத்தில் எழுதப்பட்ட தமிழ் மொழி கல்வெட்டுகள் என்றறிந்தார். ஆயினும் பல எழுத்துக்களைப் பற்றித் தெளிவாக அறிய இயலவில்லை. ஆகையால், பல சொல் அமைப்புகளின் தொடர்ச்சி அறுபட்டும் முடிவுறாதனவுமாகத் தென்பட்டது. அண்மைக்காலத்தில் இக்குறை நீக்கப்பட்டுத் தெளிவாகப் படிப்பதிலும் ஓரளவு நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. குறிப்பாக கே.வி.சுப்பிரமணிய அய்யர் ஐராவதம் மகாதேவன் என்பார் தூயதமிழ்ச் சொற்களை இக்கல்வெட்டுகளில் காண்பதற்குத்துணைபுரிந்தார்.

மக்கட்பெயர், ஊர்ப்பெயர், தானவிவரம் ஆகியவற்றுடன் கூடிய பொருள் பொதிந்த சொற்றொடர்களும் புலப்பட்டன.

அசோகர் காலக் கல்வெட்டுகள் மற்றும் புத்தமதம் வழக்கிலிருந்த ஆந்திரப் பகுதியைச் சேர்ந்த பட்டிப்புரோலு போன்ற பகுதிகளில் கிடைத்த தொன்மையான கல்வெட்டுகளில் காணப்படும் எழுத்து வடிவம், பொருள் வைப்பு ஆகிய பண்புகளுடன் ஒப்பாய்வு நடத்தி இக்கல்வெட்டுகளின் காலத்தை நிர்ணயம் செய்கிறோம்.

தமிழகத்தில் அரிக்கமேடு அகழ்வாய்வுகளில் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் பலவும் கிடைத்துள்ளன. இப்பானை ஓடுகள் கால நிர்ணயம் செய்வதற்கு எளிதான அடுக்குகளில் கிடைப்பது சிறப்பாகும். எழுத்துக்கள் பொறித்த இவை போன்ற பானை ஓடுகள் அழகரை, உறையூர், (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) கொற்கை (திருநெல்வேலி மாவட்டம்) போன்ற

இடங்களில் நடத்தப்பட்ட அகழ்வாய்வுகளில் கிடைத்துள்ளன. இவ்விடங்களில் எல்லாம் இப்பானை ஓடுகளின் காலம் மேலே குறித்த கால அளவை ஒட்டியதாகும். (டி.வி. மகாலிங்கம், அழகரை, உறையூரில் கிடைத்த எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள்)

இக்கல்வெட்டுகள் துண்டு துண்டானவை : சற்று பிராகிருதம் கலந்த பேச்சு வழக்குத் தமிழில் எழுதப்பட்டவை. கடும் தவம் புரிய இயற்கையாக அமைந்த குகைளிலும், மலைப் பொடவு (குகை)களிலும் வாழ்ந்த சமண முனிவர்களுக்குத் தரப்பட்ட தானங்களைக் குறிப்பனவாம். இத்தானங்களை அளித்தவர்களுள் பெரும்பாலோர் வணிகர்கள் (இவர்கள் சமணராக இருக்கலாம்) அரசர்கள் குறுநில மன்னர்கள் சாதாரண குடிமக்கள் ஆகியோரும் தானமளித்துள்ளனர்.

**அரசமரபினர் பெயர்கள்:**

சழிவன்: அண்மையில் கண்டெடுக்கப்பட்ட அரிட்டா பட்டி கல்வெட்டில் ‘அதன’ என்னும் பெயர்ச்சொல்லின் முன் பகுதியாக இது காணப்படுகிறது. சழியன் என்ற பெயரின் மற்றொரு வடிவமாகவே இதனைக் கருதவேண்டும் சங்க, மற்றும் சங்க பிற்கால இலக்கியங்களிலும் பாண்டியர்கள் சழியன் என்ற பெயரால் அழைக்கப்பட்டுள்ளனர். மாங்குளம் கல்வெட்டிலும் இதே சொல்லாட்சியைக் காணலாம். நெடுஞ்செழியன் என்ற பெயர்ச்சொல்லின் பின் பகுதியாக இச்சொல் ஆங்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதை அறியலாம்.

வழுதி, கடவன், அனவன் : இச்சொற்கள் அனைத்தும் நெடுஞ்செழியன் என்னும் பெயர்ச்சொல்லின் முன்பகுதியாக வருகின்றன. இவை பாண்டிய அரச மரபினரின் பிற பெயர்களாகும்.

**பாண்டிய மன்னர்:**

நெடுஞ்செழியன் : இப்பெயர் மாங்குளம் கல்வெட்டில் காணப்படுகிறது. அவ்வூரிலுள்ள பாழிக்கு இம்மன்னன் அளித்த கொடையைக் கல்வெட்டு குறிக்கிறது. இதே பாழிக்கு இளஞ்சடிகனின் தந்தை, சடிகன் அளித்த கொடையை வேறொரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. இவன் நெடுஞ்செழியனின் சாலகன் (மைத்துனன்) என்று குறிப்பிடப்படுகிறான்.

இவற்றிலிருந்து பாண்டிய மன்னர்களும் அவர்களது உறவினர்களும் சமண மத குருக்களுக்கு நல்லாதரவு நல்கியமை புலப்படும். இக்கல்வெட்டு ஏறக்குறைய கி.மு.3ஆம் நூற்றாண்டினாதலால் இது குறிப்பிடும் நெடுஞ்செழியன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், மற்றும் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் ஆகிய சங்க மன்னர்களைவிடத் தொன்மையானவனாகக் கருதப்பட வேண்டும் என்று சிலர் கருதுகின்றனர். (ஐ.மாகாதேவன்)

**சேரமன்னர்:**

ஆதன் சேரல் இரும்பொறையின் மகன் பெருங்கடுங்கோன் : இவன் மகன் இளங்கடுங்கோ ஆகிய சேர மன்னர்களைப் பற்றிப் புகழூர்க் கல்வெட்டு உரைக்கிறது. இவற்றில் கடைசியாகக் குறிப்பிட்ட மன்னன் இளவரசராகப் பொறுப்பேற்ற பின்னர் சமண முனிவருக்குப் புகழூரில் உறைவிடமாகக் குகையொன்றைத் தானமாக வழங்கினான். சங்க இலக்கியமான பதிற்றுப்பத்திலும் இதே சேர மன்னர்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருப்பதை மனத்தில் கொண்டால் கால முறைமை, மரபுவழி ஆகியவற்றை நிர்ணயம் செய்வதற்கு முக்கிய சான்றாக இச்சமகாலக் கல்வெட்டு அமையும்.

## மாங்குளம் கல்வெட்டு

**கல்வெட்டின் இருப்பிடம் :**

மதுரையிலிருந்து மேலூர் செல்லும் நெடுஞ்சாலையிலிருந்து பிரியும் ஒரு குறுக்குச் சாலை வழியாகச் சென்று மீண்டும் அதிலிருந்து ஒரு வண்டிப் பாதை வழியாகச் சென்றால் மீனாட்சிபுரம் என்ற ஊரை அடையலாம். இந்த ஊர் மலையடிவாரத்தில் உள்ளது. இந்த ஊரிலிருந்து அரிட்டாபட்டி என்ற ஊர் வரை ஐந்து மைல் நிளத்திற்கு ஒரு மலைத்தொடர் தெற்கு வடக்காக அமைந்துள்ளது. ஒரு காலத்தில் இந்த மலை முழுவதும் அரிட்டாபட்டி ஊரைச் சார்ந்ததாகக் கருதப்பட்டது. தற்சமயம் வடபகுதி அரிட்டாபட்டியையும் தென்பகுதி மீனாட்சிபுரத்தைச் சார்ந்ததாகவும் குறிக்கப்படுகிறது. இந்த மலையில் உள்ள கல்வெட்டுகளுக்கு அருகில் இருப்பது மீனாட்சிபுரமே ஆகும். எனவே இக்கல்வெட்டுகள் மீனாட்சிபுரம் கல்வெட்டுகள் என்றும் அரிட்டாபட்டி கல்வெட்டுகள் என்றும் அழைக்கப்படுகிறது.

ஆனால் இதை மாங்குளம் கல்வெட்டு என்று குறிப்பிட்டவர். ஐ.மகாதேவன் என்பவர் ஆவார். மாங்குளம் இந்த மலையிலிருந்து மூன்று மைல் தொலைவிலுள்ளது. இவ்வாறு மூன்று பெயர்களால் இந்தக் கல்வெட்டு குறிக்கப்படுகிறது. மாங்குளம் கல்வெட்டுகள் அமைந்துள்ள மலை கழுகுமலை என்றும் ஓவா மலை என்றும் அழைக்கப்படுகிறது.

**மாங்குளம் கல்வெட்டுகளில் காணப்படும் செய்திகள்:**

கழுகு மலை அல்லது ஓவா மலை என்று அழைக்கப்படும் இந்த மலையின் கிழக்குப் புறத்தில் இயற்கையாக அமைந்த குகைத் தளங்களில் சில கற்படுக்கைகள் இருக்கின்றன. மேலும் பாறையின் மேற்புறத்தில் சில கல்வெட்டுகள் காணப்படுகின்றன மொத்தம் ஐந்து கல்வெட்டுகள் உள்ளன. இவைகள் படியெடுக்கப்பட்டு 1906ம் ஆண்டுக்கான கல்வெட்டுத் தொகுப்பில் 460-465-ம் எண்களுடன் வெளியிடப்பட்டன. இக்கல்வெட்டுகள் கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

**முதல் கல்வெட்டில் காணப்படும் எழுத்து:**

கணிய நந்த அ ஸிரிய இகுவ் அன் கே
தம்மம் இத்த அ நெடுஞ்செழியன் பண அன்
கடன் அன் வழுத்திய் கொட்டுபித்த அ பளி இய்

**திருத்தமான வடிவம்:**

கணி நந்த ஸ்ரீ இயக்குவனுக்கு தர்மம் ஈத்த நெடுஞ்செழியன் பணவன் கடலன் வழுதி கொட்டு வித்த பள்ளி.

**பொருள்:**

கணியாகிய நந்த ஸ்ரீ இயக்குவனுக்கு நெடுஞ்செழியன் என்ற பாண்டியன் ஒரு பள்ளி (கற்படுக்கை) செதுக்குவித்தான்.

**இரண்டாம் கல்வெட்டு:**

கணிய நந்த ஸிரிய்க்கு அன் தமம் இத நெடுஞ்செழியன் ஸலகள்
இளஞ்சடிகன் தந்தைய் சடிகன் செகிய பணீய்

**திருத்தமான வடிவம்:**

கணி நந்த ஸ்ரீ இயக்குவனுக்கு தர்மம் ஈத்த நெடுஞ்செழியன்
ஸலசன் இளஞ்சடிகன் தந்தை சடிகன் செய்த பள்ளி

கணி நந்த ஸ்ரீ இயக்குவனுக்கு நெடுஞ்செழியனது சலகனும் இளஞ்சடிகனது தந்தையும் ஆகிய சடிகன் ஒரு பள்ளி செதுக்குவித்தான்.

**மூன்றாம் கல்வெட்டு:**

கணி இ நந்த ஸிரிய் குவ
வெள் அறைய் நிகமது காவிதி இய்
கழிதிக அந்தை அஸிதன்
பிண ஊ கொடுபிதோன்.

**திருத்தமான வடிவம்**

கணி நந்த ஸ்ரீ இயக்குவனுக்கு வெள்ளறை
நிகமத்துக் காவிதி கழிதிக அந்தையது அதன்
பிணவூ கொட்டு வித்தோன.

கணி நந்த ஸ்ரீ இயக்குவனுக்கு வெள்ளறை நிகமத்தைச் சார்ந்த காவிதி அழிதக அந்தையின் மகனான் பிணவூ என்பவன் ஒரு பள்ளி செதுக்குவித்தான்.

**நான்காம் கல்வெட்டு:**

சந்தரி தன் கொடுபிதோன்

விளக்கம்

சந்தரி தன் கொட்டுவித்தோன்

ஐந்தாம் கல்வெட்டு

வெள் அறை நிகமதோர் கொடி ஓர்

**விளக்கம்:** வெள்ளறை நிகமத்தோர் கொட்டினோர்

**செய்தி:** வெள்ளறை நிகமத்தோர் ஒரு பள்ளி செதுக்கு வித்தனர்.

**கல்வெட்டுகளில் காணப்படும் கருத்து:**

சமண சங்கத்தைச் சேர்ந்தவர்களை கணி என்று குறிப்பிடுவது வழக்கம். இக்கல்வெட்டில் கணி என்று குறிக்கப்பட்டுள்ளது. நந்த ஸிரியக்குவள் (இயக்கன்) என்பவருக்கு நெடுஞ்செழியன் பள்ளியமைத்துக் கொடுத்ததை முதற்கல்வெட்டு குறிக்கிறது. கே தம்மம் என்றால் அவருக்குக் கொடுக்கப்பட்டது என்று பொருள். கே என்பது நான்காம் வேற்றுமை உருபு ஆகும்.

இரண்டாம் கல்வெட்டு அதே பெரியருக்கு நெடுஞ்செழியனின் சாலகன் இளஞ்சடிகனின் தந்தை சடிகன் என்பான் பள்ளி செய்வித்ததைக் குறிக்கிறது. மூன்றாவது கல்வெட்டு அதே பெரியாருக்கு வெள்ளரை நிகமத்தைச் சேர்ந்த காவிதி கழிதிக அந்தை என்பவரின் மகன் பிணவு என்பவன் கொடுத்ததைக் குறிக்கிறது. சந்தரிதன் என்பவனும் வெள்ளறை நிகமத்தோரும் தானம் கொடுத்ததை மற்ற இரண்டு கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

**கல்வெட்டில் காணப்படும் எழுத்தமைதி:**

மாங்குளம் கல்வெட்டுகள் தமிழி என்ற தென்னாட்டு பிராமி எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. மேலும் இந்த எழுத்து வடிவம் மிக முற்பட்ட தமிழி எழுத்தாக உள்ளன. எனவே இவற்றின் காலம் கி.மு.3ம் அல்லது இரண்டாம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இக்கல்வெட்டின் படி ‘க’ என்ற எழுத்தின் தலையில் ஒரு குறுக்கு கோடு இருந்தால் அதை ‘க’ என்று படிக்க வேண்டும்.. மேலும் ‘க’ வுக்கும் ‘கா’ வுக்கும் எழுத்தில் வேறுபாடு இல்லை. மொழி அறிந்தவர்கள் சொல் அறிந்து வேறுபடுத்தி வாசிக்க வேண்டும். இவ்வாறு தலையில் கோடு இல்லாத வடிவை மெய்யாகவும் கோடுள்ள வடிவை அகரமுடைய உயிர் மெய்யாகவும் படித்தால் தான் இக்கல்வெட்டின் பொருள் தெளிவாகக் கிடைக்கும்.

எழுத்துக்கள் இந்த முறையில் எழுதப்பட்டன என்பதை முதன் முதலில் கண்டு பிடித்தவர் டாக்டர். பூலர் ஆவார் இவர் பட்டிப்பு ரோலு என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டில் இந்த முறையில் எழுதப்பட்டிருப்பதை கண்டுபிடித்து அறிவித்தார் புத்தபிரானின் புனித எலும்பு ஒன்றை வைத்திருந்த ஒரு கற்பேழையிலும் இந்த முறையில் எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ளன. பூலரின் முறையைப் பின்பற்றியே ஐ.மகாதேவன் அவர்கள் மாங்குளம் கல்வெட்டுகளைப் படித்துள்ளார்.

இக் கல்வெட்டுகளில் கணிய், ஸரிய், பளிய், வழுதிய் என் தந்தைய் பென் அறைய் என்றும் இகர ஐகார ஈறுகளின் பின் யகர ஒற்று அதிகப்படியாகச் சேர்த்து எழுதப்பட்டுள்ளது. இவ்வாறு யகர ஒற்று சேர்த்து

எழுதும் முறை பல்லவர், சோழர், பாண்டியர் கல்வெட்டுகளிலும் சிற்சில இடங்களில் காண்ப்படுகிறது.

**மாங்குளம் கல்வெட்டில் காணப்படும் சொல்லமைதி:**

1. மாங்குளம் கல்வெட்டுகளில் பண, அன், கடல் அன் இரு அன் என்று பகுதிகள் உடம்படு மெய்யின்றி தனியாக எழுதப்பட்டுள்ளது, குறிப்பிடத்தக்கதாகும்.
2. அந்தை, அ, இகுவன கே என வேற்றுமை உருபுகளும் பிரித்து எழுதப்பட்டுள்ளன. இதில் அ என்ற விகுதி ஆறாம் வேற்றுமை உருபாக இங்கு வழங்கப்பட்டுள்ளது.
3. இந்த கல்வெட்டுகளில் ஸிரி குவன், தம்மம், பனி, ஸீதன், நிகமம், கணி முதலிய பாகதச் (பிராகிருத) சொற்களும் இடம் பெற்றுள்ளன. காவிதி பிண ஊ என்ற பழைய சொற்களும் இடம் பெற்றுள்ளன.
4. கோட்டு வித்த என்பது கோட்டு பித்த எனவும், செய்த என்பது செ இய என்றும், கொட்டியோர் என்பது கொடி ஓர் எனவும் சிதைந்த சொல் வழக்குகளாக அமைந்துள்ளன.
5. மாங்குளம் இரண்டாவது கல்வெட்டில் நெடுஞ்செழியனின் சாலகன் இளஞ்சடிகன் என்பவன் குறிக்கப்பட்டுள்ளான். மனைவியின் உடன் பிறந்தவளின் கணவன் சாலகன் என்று குறிக்கப்படுகிறான். இதனை சலகன் என்றும் வாசிக்கலாம். இந்த சலகன் தான் பின்னர் திரிந்து சகலன் என்று மாறியிருக்கலாம்.
6. இக்கல்வெட்டில் வெள்ளரை நிகமும் என்ற சொல் காணப்படுகிறது. நிகமம் என்பது நகரம் அல்லது வாணிகக் குழுவைக் குறிக்கும் சொல்லாகும். இங்கு நகரம் என்பதை நிகமம் என்ற சொல் குறிக்கிறது.
7. கொட்டுபித்த அ என்ற சொல்லுக்கு கொடுப்பித்த என்ற பொருள்படும் என்று மகாதேவன் கருதுகிறார் கொட்டுதல் என்றால் சம்மட்டியால் அடித்தல் அல்லது செதுக்குதல் என்று பொருள்படும் எனவே இந்த சொல் இங்கு பாறையைச் செதுக்கி படுக்கையாக அமைத்ததைக் குறிக்கிறது.
8. இந்தக் கல்வெட்டில் வரும் இளஞ்சடிகன் தந்தை சடிகன் என வரும் தொடரால் இளம் என்ற அடைமொழி மகன் என்ற உறவு முறையை உணர்த்துவதாக அறியப்படுகிறது. ஆனால் சங்க நூல்களில் வருகிற இளங்குமணன், இளவிச்சிகோ போன்ற பெயர்களில் வந்துள்ள இளம்

என்ற அடைமொழி தம்பி என்ற உறவு முறையை உணர்த்துவதாக சொல்லப்பட்டு வருகிறது.

இக்கல்வெட்டில் குறிக்கப்படும் நெடுஞ்செழியன் கடல் என்றும் வழுதி என்றும், பணவன் என்றும் குறிக்கப்படுகிறான். இவை பாண்டியர்களுடைய குலப் பெயர்கள் ஆகும். எனவே இந்த மன்னன் பாண்டிய மன்னன் என்பது தெளிவாகிறது.

சங்க இலக்கியங்களில் நெடுங்செழியன் என்ற பெயரில் மூவர் காணப்படுகின்றனர். முதலாமவன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன். இவன் சேரன் செங்குட்டுவனுக்குச் சமகாலத்தில் இருந்தவன். எனவே இந்த நெடுஞ்செழியனின் காலம் கி.பி. 2ஆம் நூற்றாண்டாகும். இரண்டாமவன் தலையாலங்கானத்து செரு வென்ற நெடுஞ்செழியன் ஆவான். இவன் மாந்தரஞ்சோலிரும்பொறை முதலிய எழுவரை வென்றவன். இந்த இரும்பொறை செங்குட்டுவனுக்குப் பிற்பட்டவன் இவன் காலமும் கி.பி 2ம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். மூன்றாமவன் நம்பி நெடுஞ்செழியன் இவன் பேரெயின் முறுவலரால் பாடப்பெற்றவன். இவன் காலமும் பிற்காலமாகவே தெரிகிறது.

மாங்குளம் கல்வெட்டிலுள்ள எழுத்துக்கள் கி.மு இரண்டாம் அல்லது மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று தெரிவதால் இக்கல்வெட்டில் குறிக்கப்பட்ட நெடுஞ்செழியன் சங்க இலக்கியங்களில் காணப்படும் மூன்று பேருக்கும் மிகவும் முற்பட்டவன் என்று தெரிகிறது.

மாங்குளம் கல்வெட்டு தமிழ் பிராமி கல்வெட்டுகளில் மிகவும் சிறப்பானதாகக் கருதப்படுகிறது.

**2. சித்தன்ன வாசல் கல்வெட்டு:**

சித்தன்னவாசல் புதுக்கோட்டையிலிருந்து பத்து மைல் தொலைவில் உள்ளது. இந்த ஊர் தமிழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த ஊராகும். இங்கு மலையைக் குடைந்து தோற்றுவிக்கப்பட்ட குகைக் கோவில் ஒன்று உள்ளது. இதில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஓவியங்கள் இருக்கின்றன. இந்த ஓவியங்கள் கி.பி.எட்டாம் நூற்றாண்டில் ஆட்சி செய்த ஸ்ரீ மரா ஸ்ரீவல்லவன் என்ற பாண்டிய மன்னன் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டவையாகும். இது ஒரு சமணக்குகை ஆகும். இதே மலையில் சற்று தொலைவில் மறுபுறத்தில்

ஏழடிப்பட்டம் என்ற ஒரு பகுதி உள்ளது. அங்கு இயற்கையாக அமைந்த ஒரு குகைத்தளம் உள்ளது. அங்கு சில கற்படுக்கைகள் இருக்கின்றன. ஒரு கற்படுக்கையின் பக்கவாட்டில் இந்த கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

**கல்வெட்டின் வாசகங்கள்:**

சித்தனவாசல் கல்வெட்டு தமிழ் (தமிழ் பிராமி) எழுத்தில் அமைந்துள்ளன. இதிலுள்ள எழுத்துக்கள் சற்று வளர்ச்சி பெற்றுள்ளமையால் இதன் காலம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டு என்று கருதப்படுகிறது. இந்த கல்வெட்டு 1914-ம் ஆண்டு படியெடுக்கப்பட்டு கல்வெட்டு தொகுதியில் 388-ம் எண்ணில் வெளியிடப்பட்டது. இந்த சித்தன்ன வாசல் கல்வெட்டில் இரண்டு வரிகளே உள்ளன.

“எருமிநாடு குமிழ் ஊர் பிறந்த காவுடி ஈதேன்கு சிறுபோவில்

இளயர் செய்த அதிட்சனம்’

‘எருமை நாட்டுக்குமிழூரில் பிறந்த காவிதி ஈதேனுக்குச் சிறுபோவில் இளையர் செய்த அதிட்டானம்’ என்பது இதன் திருத்தமான வடிவமாகும்.

இந்தக் கல்வெட்டின் வாசகங்களை பலர் பலவிதமாகப் படித்துள்ளனர். ஆனால் சமீபத்தில் ஐ.மகாதேவன் அவர்கள் படித்துள்ளது தான் சிறப்பாக அமைந்துள்ளது.

**கல்வெட்டு செய்தி:**

எருமை நாட்டில் குமிழூரில் பிறந்த காவிதி ஈதேன் என்ற சமணத் துறவிக்குச் சிறுபோ என்ற ஊரில் அவனது தம்பிமார்கள் ஒரு கற்படுக்கை செய்து கொடுத்தனர் என்பது இக்கல்வெட்டில் கூறப்பட்ட செய்தியாகும்.

எருமை நாடு என்பது தற்போது மைசூர் நாடு என்று வழங்கப்படுகிறது. காவிதி என்பது வணிகருக்கு உரிய பட்டமாகும். சிறுபோ என்பது தற்போது சித்தன்ன வாசல் என்று வழங்கப்படுகிறது. குளையர் என்பது தம்பிமார் என்றும், அதிட்டானம் என்பது இடம் என்றும் பொருள்படும். இங்கு அதிட்டானம் என்பது கற்படுக்கையைக் குறிக்கிறது.

இந்தக் கல்வெட்டில் குமிழூர், ஈதேனுக்கு, அதிட்டானம் போன்ற சொற்கள் குமிழ் ஊர், ஈதேனுக்கு, அதிட் அனம் என்று பிரித்து

எழுதப்பட்டிருக்கும் முறை காலப் பழமையைக் குறிக்கிறது. மேலும் எருமை, காவிதி என்ற சொற்கள் எருமி, காவுடி எனச் சிதைந்து சொல்லுருவங்களாக அமைந்துள்ளன.

இவை தவிர சித்தன்ன வாசலில் பிற்காலத்தைச் சேர்ந்த அதாவது கி.பி. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த எழுத்துக்களில் தொழுக் குன்றத்துக் கடவுளன், திருநீலன், திருப்பூரணன், ஸ்ரீபூரண சந்திரன், நியத்தகரன், பட்டகாளி போன்ற பெயர்களும் பொறித்து வைக்கப்பட்டுள்ளன.

### 3. அழகர் மலைக் கல்வெட்டுகள்

அழகர் மலை பழமுதிர்ச்சோலை என்றும் புகழப்படுகிறது. இந்த மலையின் ஒரு பகுதியில் இயற்கையாக அமைந்த குகைத்தளம் உள்ளது. இதைக் கிரிட்டாபட்டி என்ற ஊரில் இருந்து சுமார் மூன்று மைல் தொலைவு நடந்து சென்று தான் அடையமுடியும். மலையில் ஏறிச் சென்று பார்ப்பதற்கு வசதியாக படிகள் அமைத்திருக்கிறார்கள். இந்த இயற்கைக் குகைத் தளத்தில் கற்படுக்கைகள் காணப்படுகின்றன. இங்கு நல்ல அணை ஒன்றும் உள்ளது. படுக்கை இருக்கும் தளத்திற்கும் பாறை முகப்பிற்கும் உயரம் மிக அதிகம். முகப்பின் புறத்தே நீண்ட பண்டையக் கல்வெட்டு ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. படுக்கையின் ஓரத்திலும் ஒரு கல்வெட்டு உள்ளது. மேலே உள்ள கல்வெட்டுகள் மிகவும் உயரத்தில் இருப்பதால் படிப்பது மிகவும் கடினம். இந்தக் கல்வெட்டுகள் தமிழ் பிராமியில் எழுதப்பட்டுள்ளன. இவை கி.மு 2ம் நூற்றாண்டு அல்லது முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகக் கருதப்படுகிறது.

### கல்வெட்டு எழுத்துக்கள்:

1. மாத்திரைய் பொன் கொலவன் ஆதன் அதான
2. ………………. அனாகன் த………………
3. கணி நாதன் கணீய் நதன்
4. மாத்தினரைய் கே
5. ஊபு வணிகன் வியகன் கணிதிகன்
6. கனக அதன் மகன் அதன் அதான
7. ஸபமதி இன் போ மித்தி

8. பணித வணிகன் நெடுமலன்

9. கொளு வணிகன் என சந்தன்

10. ஞ்சி கழுமாறன் தான

11. தார அணி இ கொடுபித அவன்

12. காஸபன் அதவிர

13. ………………. அவரும் குடுபிதோ …………………

14. வெண் பனிய் அறுசுவை வணிகன் என அ அடன்

15. ………….. தியன் சந்தன்

இந்தக் கல்வெட்டுகளில் இடையில் பல பகுதிகள் தேய்ந்து போய்விட்டன. எனவே மேலே குறிப்பிட்டவை தற்காலிகமாகப் படிக்கப்பட்டவையே ஆகும். ஆனாலும் இந்தக் கல்வெட்டுகளிலிருந்து பல செய்திகள் கிடைக்கின்றன.

மதுரையைச் சேர்ந்த பல வணிகர்கள் இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றனர். பொற்சொல்லன், உப்பு வணிகன், அறுவை வணிகன். பனரித வாணிகன், கொழு வணிகன் முதலியோர் குறிக்கப்படுகின்றனர். இதிலிருந்து மதுரையைச் சேர்ந்த பல செல்வந்தர்கள் சமண சமயத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிகிறது.

அழகர் மலைக் கல்வெட்டிலிருந்து அக்காலத்திலேயே பொற்கொல்லர், உப்பு வணிகர், சர்க்கரை வணிகர், துணி வணிகர் போன்ற பல தரப்பட்ட பிரிவினர் சமுதாயத்தில் வாழ்ந்து வந்தனர் என்று தெரிய வருகிறது. சந்நியாசிகளான பெண் துறவிகளும் இருந்தனர். தானங்கள் பலரால் இணைந்து தரப்பட்டது. துறவிகள் தங்குமிடங்களில் நீர் ஒதுக்கிச் சென்று ஒரே இடத்தை அடைய வசதி செய்து கொடுத்தனர். இது அக்காலத்திய மக்களின் அறிவியல் மேம்பாட்டுச் சான்றாகும். மேலும் பல தொழில்களில் மக்கள் தனித்தனியாக ஈடுபட்டு வந்தனர் என்றும் தெரிகிறது.

இந்த அழகர் மலைக் கல்வெட்டுகளுக்கு அருகில் உள்ள பாறையில் தீர்ததகரன் சிலை ஒன்றும் கி.பி.எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்றும் உள்ளன. அருகர் மலை என்பதே அழகர் மலை என்று மாறி இருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.

**4. புகளூர் கல்வெட்டு**

திருச்சி மாவட்டம் கருவூரிலிருந்து பத்து மைல் தூரத்தில் உள்ள புகளூரில் ஆறு நாட்டார் மலை என்ற மலை ஒன்று உள்ளது. மலையடி வாரத்தில் வேலாயுதபாளையம் என்ற ஊர் உள்ளது. மலையின் மீது முருகப்பெருமான் கோவில் ஒன்று உள்ளது. மலையின் தென்புறத்திலும் வடபுறத்திலும் இயற்கைக் குகைத் தளங்கள் அமைந்திருக்கிறது. இந்த குகைத் தளங்களில் கற்படுக்கைகளும் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. இவை வரலாற்றுப் புகழ் மிக்கவை ஆகும். வடபுறம் உள்ள குகைத்தளத்தில் ஒரே ஒரு கல்வெட்டு மட்டுமே உள்ளது. தென்புறக் குகைத்தளத்திலிருந்து வடபுறக் குகைத்தளம் செல்லும் வழியிலும் பல கற்படுக்கைகள் உள்ளன. ஆனால் அவைகளில் கல்வெட்டு எதுவும் காணப்படவில்லை. இக்கல்வெட்டுகள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதி அல்லது மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்ததாகும்.

1**. ணா கன் மகன் ளங்கீரன்**

அதாவது அங்குள்ள கற்படுக்கை நாகன் என்பவனின் மகனான இளங்கீரன் என்பவனால் செய்து கொடுக்கப்பட்டது என்ற செய்தி தெரிய வருகிறது.

**தென்புறம் உள்ள கல்வெட்டு**:

தென்புறக் குகைத்தளத்தில் பல கல்வெட்டுகள் உள்ளன. பக்க வாட்டிலும் மேலே உள்ள பாறையின் முகப்பிலும் உள்ள இரு கல்வெட்டுகள் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவைகளாக உள்ளன. தமிழகத்தின் சங்க கால வரலாற்றிக்கு இவை மிகவும் இன்றியமையாத கல்வெட்டுகளாகும்.

1. மூதா அமண்ணன் யாற்றூா் செங்கோயபன்
   கோ.ஆ – ல்லிரும் பொறை மகன் பெருங்
   கடுங்கோன் மகன் கடுங்கோன் ளங்கடுங
   கோளங்கோ ஆக அறுபித கல்
2. ….. தா அண்ணன் யாற்றூா் செங்காய பன் உயைற்
   கோ ஆதன் சொல்லிரும் பொறை மகன்
   பெருங்கடுங்கோன் மகன் ளங்
   கடுங்கோ எங்கோ ஆகி அறுத்த கல்

மூத்த அமணனாகிய யாற்றூர்ச் செங்காயபன் என்ற துறவி உறைவதற்காகக் கோ ஆதன் சோல் இரும்பொறையின் பேரனும் பெருங்கடுங்கோவின் மகனும் ஆகிய இளங்கடுங்கோன் என்பவன் தான் இளங்கோ ஆவதற்காக பெருங்கற்படுக்கை செய்து கொடுத்தான் என்று ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது.

மேலும் அதே இளங்கடுங்கோன் தான் இளங்கோ ஆன பிறகு ஒரு கற்படுக்கை செய்து கொடுத்தான் என்று தெரிவிக்கிறது.

**கல்வெட்டுகளைப் பற்றிய விளக்கம்:**

புகளூர்க் கல்வெட்டுகளில் சேர மன்னர்களுடைய மூன்று தலைமுறைகள் குறிக்கப்பட்டுள்ளது.

1. கோ ஆதன் சொல்லிரும் பொறை
2. பெருங்கடுங்கோன்
3. இளங்கடுங்கோன்

இவர்கள் தந்தை மகன் என்ற உறவில் குறிக்கப்படுகின்றனர். இவற்றில் கோ, இரும்பொறை, ஆதன் என்ற பெயர்கள் வருவதால் இதில் குறிக்கப்பட்டுள்ளவர்கள் சேரர் குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதில் ஐயமில்லை.

**புகளூர் கல்வெட்டுகளில் காணப்படும் எழுத்து மற்றம் சொல் :**

புகளூர்க் கல்வெட்டுகளில் எழுத்துக்கள் வளர்ச்சி பெற்றவைகளாகக் காணப்படுகின்றன. ‘அ’ எழுத்து இடைவெளியின்றி சேர்த்து எழுதப்பட்டிருக்கிறது. உயிர்மெய்யில் சிகரத்தைக் குறிக்கும் குறி வளையத் தொடங்குகிறது. ‘ந’ வளர்ச்சி பெற்றுக் காணப்படுகிறது. மூன்று போன்ற சொற்களில் மெய்யைக் குறிக்க புள்ளி காணப்படுகிறது.

இந்தக் கல்வெட்டில் மூத்த என்ற பொருளில் மூதா என்ற சொல் வழங்கப்பட்டுள்ளது. அமணன் என்பது அமணணன் என்று எழுதப்பட்டுள்ளது. ஒரு கல்வெட்டில் இரும்பொறை என்பது மற்றொரு கல்வெட்டில் இரும்புறை என்று எழுதப்பட்டுள்ளது.

மேலும் சொல்லின் இறுதியில் ‘ன்’ வருமொழியில் ‘இ’ ஆகியவை வரும் இடங்களில் ‘இ’ மறைந்துள்ளது.

**உதாரணம் :**

மகன் + இளங்கடுங்கோ = மகன் ளங்கடுங்கோ

கடுங்கோன் + இளங்கடுங்கோ = கடுங்கோன்ளங்கடுங்கோ

சில இடங்களில் ‘ன்’ ‘இ’ ஆகிய இரண்டுமே மறைந்து காணப்படுகிறது.

**உதாரணம்:**

கடுங்கோன் + இளங்கோ = கடுங்கோளங்கோ

இவ்வாறு புகளூர் கல்வெட்டு பலவழிகளில் சிறப்புடையதாகக் கருதப்படுகிறது. மூன்று தலைமுறை சேர மன்னர்களைப் பற்றிய குறிப்பு தமிழக வரலாற்றுக்குப் பெரிதும் பயன்படுகிறது. அதிலும் இந்த மன்னர்கள் சேரர் பரம்பரையில் இரும்பொறை வழியினரையே குறிப்பிடுகிறது. மேலும் இந்தக் கல்வெட்டில் கருவூர் பொன் வணிகன் என்று குறிப்பிடுவதால் சேரர்களுடைய தலை நகரமாக கருவூர் இருந்திருக்க வேண்டும் என்ற இராகவ ஐயங்கார் குறிப்பிட்டுள்ளார். இக்கல்வெட்டிலிருந்து ஒரு அரசன் தனக்குப் பிறகு தனது மகனை ஆட்சியாளராக நியமிக்கும் பழக்கம் இருந்ததாகவும் அறியமுடிகிறது. புதிதாக அரசன் ஆட்சிப் பொறுப்பேற்கும் போது தானம் வழங்கும் பழக்கம் இருந்தது. சமணத் துறவிக்கு தானம் வழங்கியதன் மூலம் இரும்பொறை பிரிவினர் சமணப் பற்றுடையவர்களாக இருந்தனர் என்று கருதலாம். மேலும் இங்கு சமண மதம் செல்வாக்குப் பெற்றிருந்தது என்பதை இக்கல்வெட்டுகள் மூலம் நாம் அறிய முடிகிறது.

**பயிற்சி வினாக்கள் :**

**ஒரு பக்க வினா :**

1) வட்டெழுத்து குறிப்பு வரைக.
2) பிராமி எழுத்தின் ஒலிவடிவம் பற்றி எழுதுக.
3) பிராமி எழுத்துக்களை வாசிப்பதில் ஏற்படும் இடர்பாடுகள் யாவை?
4) நடுகற்களின் வகைகள் யாவை?

**மூன்று பக்க வினா :**

1) மருகால்தலை பிராமி எழுத்துப் பற்றி விவரிக்க.

2) தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்கள் குறித்து விளக்குக.
3) மாங்குளம் கல்வெட்டில் காணப்படும் சொல் அமைதி பற்றிக் கூறுக.
4) புகளூர் கல்வெட்டு பற்றிய கட்டுரைகள்.

# அலகு 2

## தமிழ் கல்வெட்டுகளின் பொதுவான அமைப்பு

பண்டைத் தமிழர் தம் வரலாறு, பழக்க வழக்கம், பண்பாடு, நாகரிகம், வாழ்வியில் நெறிகள் ஆகியவற்றை அறிய தொல்லியல் ஆய்வு, நாணயம், ஓவியம், சிற்பம், இலக்கியம் போன்றவற்றின் பயன்பாட்டைப் போலக் கல்வெட்டுகளும் இப்பயன்பாட்டில் பெரிதும் இடம் பெற்றுள்ளன. அவை வாழ்வியில் நெறிகளை வழிநடத்திச் செல்லும் சட்டங்களாகவும், சான்றுகளாகவும் உள்ளன; வரலாற்றுப் பெட்டகங்களாக திகழ்கின்றன; கலைகளின் கருவூலமாக அமைந்துள்ளன. பண்பாட்டின் படையல்களாக மிளிர்கின்றன; நாகரீகச் சின்னங்களாகச் சிறக்கின்றன. அரசியல் நெறிமுறைகளை விளக்கும் அறிவுக் களஞ்சியமாக அணி செய்கின்றன. தொல்லியல் துறையில் முக்கிய அங்கம் வகிக்கும் ஒரு பிரிவு கல்வெட்டியல் ஆகும். கி.மு. 3ம் நூற்றாண்டிலிருந்து பாறைகளிலும், குகைகளிலும் குறியீடுகளையும், எழுத்துக்களையும் பொறிக்க நம் முன்னோர்கள் ஆர்வம் காட்டினர். எழுத்துக்கள் மனிதன் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் ஒரு அற்புதப் படைப்பாகும். மொழிகள், நாடுகள், காலங்கள், இனங்கள் என மாற்றங்கள் பல இருப்பினும், உலகம் முழுவதும் முன்னோர்கள் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்த குறியீடுகளையும், எழுத்துக்களையும் பயன்படுத்தினர். கல்லில் எழுத்துக்களைப் பொறிக்கும் பழக்கம் மிகப் பழங்காலம் தொட்டே தமிழகத்தில் நிலவி வந்துள்ளது. கல்லில் செதுக்கி வரையப்பட்ட எழுத்துக்கள் கல்லெழுத்துக்கள் எனப்பட்டன. கல்லில் வெட்டி வெட்டி பொறிக்கப்பட்டதால் கல்வெட்டு என்று அழைக்கப்பட்டது. கல்வெட்டு என்ற சொல்லுக்கு அழியாத சொல், ஓர் பிரபந்தம், சிலாசாசனம், புகழ்ச்சிச் செய்யுள், கல்லெழுத்து, முன்னோர் இறந்த நாள் முதலியவற்றைக் குறிக்கும் புகழ்ச்சிச் செய்யுள், கல்லறைப் பாடல் (சமரகவி Elegy) மாற்ற முடியாத வார்த்தை என்பன போன்ற பல பொருட்களை அகராதிகள் உணர்த்துகின்றன.

கல்வெட்டுகளில் கற்பனைக்கோ, புனைந்துரைக்கோ கட்டுக் கதைகளுக்கோ, உணர்ச்சியான நடைக்கோ, உன்னதமான வடிவமைப்புக்கோ இடமில்லை. உள்ளதை உள்ளவாறு உணர்த்துகின்ற உண்மைக்கு மட்டுமே இடமுண்டு.

**கல்வெட்டின் அமைப்பு :**

கல்வெட்டுகள் ஒவ்வொன்றையும் அவற்றின் அமைப்பு முறையையொட்டி ஐந்து பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. மங்கலச்சொல்
2. கல்வெட்டின் காலம்
3. கல்வெட்டுச் செய்தி
4. கையொப்பப் பகுதி
5. ஓம்படைக் கிளவி

**மங்கலச் சொல் :**

எழுத ஆரம்பிக்கும் போது மங்கலச் சொல்லுடன் ஆரம்பிப்பது நமது மரபு ஆகும். உதாரணமாக எல்லா விதமான நல்ல காரியங்களையும் தொடங்கும் போதும் அவரவர்களுடைய கடவுள்களின் அடையாளங்களைப் போட்டு ஆரம்பிப்பது பழக்கம். இதன் அடிப்படையில் மக்கள் தங்கள் கடவுள்களைக் குறிக்கும் விதமாக பல குறிப்புகளைப் பயன்படுத்தினர். அதன்படி மங்கலச் சொல் கல்வெட்டின் தொடக்கத்தில் பொறிக்கப்பட்டிருக்கும். இதுவே கல்வெட்டின் அமைந்திருக்கும் முதல் சொல் ஆகும்.

பெரும்பாலான கல்வெட்டுகளின் ‘ஸ்வஸ்திஸ்ரீ’ என்ற சொல்தான் காணப்படுகிறது. இதற்கு மங்கலம் உண்டாகட்டும் என்று பொருள்படும். பல்லவர் காலச் செப்பேடுகள் சிலவற்றில் ‘ஜிதம் பகவதா’ என்ற சொல் காணப்படுகிறது. ஆய் மன்னன் அளித்த திருப்பரப்பு செப்பேடு ‘நமோ நாராயணாய’ என்று ஆரம்பிக்கிறது. மற்றொரு ஆய் மன்னரின் பாலியத்து சாசனம் ‘ஓம் ஸவஸ்திஸ்ரீ’ என்று ஆரம்பிக்கிறது.

கி.பி. பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து வேறு சில சொற்களும் மங்கலச் சொல்லாக உபயோகப்படுத்தப்பட்டன. அவை சிவமயம், அருளிச்செயல், ஹரி நன்றாக குருவே துணை, ஹரி சுபமஸ்து, ஹரிஸ்ரீ கணபதயே நம போன்றவையாகும். செப்பேடுகளில் உள்ள சமஸ்கிருதப் பகுதிகளில் மங்கலத் தொடரை அடுத்து ஆண்டவனது அருளை வேண்டும் சுலோகங்கள் சிலவும் காணப்படுகின்றன. அதன் பின்னர் எந்த மன்னன் கொடையளிக்கிறானோ அந்த மன்னரின் முன்னோர்களைப் பற்றியும் புராண மரபையும், உண்மை வரலாறுகளையும் காணலாம்.

**கல்வெட்டின் காலம் :**

மங்கலச் சொல்லை அடுத்து சாசனம் தோன்றிய காலம் குறிக்கப்பட்டிருக்கும். அந்தப் பகுதியில் அப்போது நாட்டில் அரசாண்ட முடிவேந்தனது ஆட்சியாண்டும் நாளும் குறிக்கப்பட்டிருக்கும். அவ்வாறு ஆட்சியாண்டு குறிப்பதுதான் பழைய பழக்கம். சிற்சில சாசனங்களில் அரசானது ஆட்சியாண்டோடு சக ஆண்டு, கலி ஆண்டு, கொல்லம் ஆண்டு குறிக்கப்பட்டிருக்கின்றன. அரசின் ஆட்சியாண்டிற்கு முன்பு அவனது வீரச்செயல் உணர்த்தும் அடை மொழிகளும், சிறப்புப் பெயர்களும், இயற் பெயரும் பொறிக்கப்பட்டிருக்கும்.

உதாரணமாக

''மதுரையும் ஈழமும் கொண்ட கோப்புர கேசரிவர்மர்க்கு
யாண்டு நாற்பது''

''பாண்டியனை சுரம் இறக்கின பெருமாள் ஸ்ரீசுந்தர சோழர்
தேவர்க்கு யாண்டு ஏழாவது''

தந்தனூர்ச் சாலை கலமறுத்த கோ இராசராசகேசரி வர்மர்க்கு
யாண்டு பத்தாவது''

ஸ்ரீ கோமாற வர்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் சோனாடு கொண்டு முடி கொண்ட சோழபுரத்து வீராபிஷேகம் பண்ணியருளிய ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவர்க்கு யாண்டு பதினேழாவது'' ஆகிய சொற்றொடர்களால் அறியலாம். அரசனின் பெயரைக் குறிக்கும் இந்த இடத்தில் அவனது மெய்கீர்த்தியை இணைத்துக் கூறுவதும் உண்டு. மெய்கீர்த்தி அமைத்து ஆட்சியாண்டு வரையும் முறை முதலாம் இராஜராஜ சோழனால் கி.பி. 993-ம் ஆண்டில் முதன் முதலில் தொடங்கப்பட்டது. அவனைப் பின்பற்றி தமிழ்நாட்டிலிருந்து மற்ற அரசர்களும் மெய்கீர்த்தி அமைத்து சாசனங்கள் எழுதத் தொடங்கினர். அந்த மெய் கீர்த்திகளில் அந்த மன்னர்களின் வீரச்செயல்களும் புகழுக்குரிய பிற செயல்களும், ஆட்சியின் சிறப்பும் பட்டத்தரசிகளின் பெருமையும் கூறப்பட்டுள்ளன.

அரசனது ஆட்சியாண்டு ஏற ஏற மெய்கீர்த்தியும் புதிய புதிய செய்திகளுடன் வளர்ந்து கொண்டே போகும். அதன் துணை கொண்டு ஒவ்வொரு வேந்தனுடைய ஆட்சியிலும் எந்தெந்த ஆண்டில் எந்தெந்த

நிகழ்ச்சிகள் நடைபெற்றன என்பதை ஆராய்ந்துணர்ந்து கொள்ளலாம். மேலும் மெய்கீர்த்தியின் தொடக்கத்தைக் கொண்டே இது இன்ன அரசனைச் சார்ந்த கல்வெட்டு என்று கண்டுபிடித்து விடலாம்.

**கல்வெட்டு செய்தி :**

சாசனத்தின் நோக்கமே செய்தி எனப்படும் இது காலம் என்ற பகுதிக்குப் பின்னர் பொறிக்கப்படும். இப்பகுதியே கல்வெட்டின் நீண்ட பெரும் பகுதியாகும். இன்ன நாட்டில் இன்ன ஊரிலுள்ள இன்னார் இன்ன அறம் என்றும் நடைபெற்று வருமாறு இவ்வளவு நிலமும், பொன்னும் பிற பொருட்களும் இன்னாரிடத்தில் அளித்தனர் என்பதையும் அதனைப் பற்றிய மற்ற செய்திகளையும் இப்பகுதியில் விளக்கமாகக் காணலாம்.

கோவில்களில் நந்தா விளக்கு அமைப்பதற்கு ‘சாவா’ மூவாப் பேராடு, பசு அல்லது எருமை கொடுத்ததைக் குறிக்கின்றன. நிலம் கோவிலுக்கு விற்கும் பொழுதும், பிறறொருவருக்கு விற்கும் போதும் சரி அந்த நிலத்தின் பரப்பளவு அதன் நான்கு பக்க எல்லைகள், அந்த நிலத்தைச் சார்ந்திருக்கும் பிற பொருட்கள் அந்த நிலத்திற்கு நீர் பாய்ச்சும் வாய்க்கால் ஆகியவையும் விரிவாகக் குறிக்கப்பட்டுள்ளன. ‘‘இந்நாற்பாற் கெல்லைக்குட்பட்ட உண்ணிலம் ஒழிவின்றி’’ ‘‘உரும்பொடி ஆமை தவழும் இடம் அனைத்தும் கீழ் நோக்கிய கிணரும், மேல் நோக்கிய மரமும், மீன் படு பள்ளமும், தேன்படு பொதும்பும், புற்றும் தெற்றியும் ஆகிய எல்லாம் விற்கப்பட்டன’’ என்று குறிக்கப்பட்டிருக்கும்.

சில இடங்களில் நிலத்தின் பெயர் கூடக் குறிக்கப்பட்டுள்ளது. சிவன் கோவிலுக்கு நிலம் விற்கப்பட்டபோதெல்லாம் சண்டேசுவரர் பெயரால் விற்கப்பட்டன. மற்ற பொருட்களைக் கொடையாக கோவிலுக்கு அளித்தால் அவைகள் நன்கு விளங்கும் வண்ணம் சொல்லப்பட்டுள்ளன. ஒரு சில காசை ஒருவனிடம் தந்து, கொடுத்தவரின் நன்மைக்காக கொடை அளித்தவரின் நன்மைக்காகக் கொடை அளி என்று கூறும்போது கொடுத்த முதல் கொடாது போலி ஊட்டாகக் கொண்டு வந்து போலியில் (வட்டியில்) கொடையளிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கும். அத்துடன் வட்டி விகிதமும் குறிக்கப்பட்டிருக்கும். மேலும் அவ்வாறு அளிக்கப்பட்ட கொடை சந்தரன் சூரியன் உள்ளளவும் நிலை பெற்றிருக்கும் என்றும் குறிக்கப் பட்டிருக்கம். இது கல்வெட்டின் மிக முக்கிய பகுதியாகும்.

**கையொப்பப் பகுதி :**

கல்வெட்டின் செய்திப்பகுதிக்குப் பிறகு அமைவது கையெழுத்துப் பகுதியாகும். இந்தப் பகுதியில் கொடையளித்தவரின் கையெழுத்தும், கொடை அளித்தவன் சொல்லை அதை எழுதிய ஊர்க்கணக்கரின் கையெழுத்தும் காணப்படும். மேலும் சில கல்வெட்டுகளில் அதைக் கல்லில் பொறித்த தச்சனின் கையெழுத்து, சாட்சிகளின் கையெழுத்து, நான்கெல்லை கண்டோரின் கையெழுத்து ஆகியவையும் இடம்பெறும். கல்வெட்டைப் பொறித்தவர்கள் லெக்காரர், லிபிகாரர், ராஜலிபிகாரர், சுபாகித கோதி புதன் என்றழைக்கப்பட்டனர். தமிழில் இவர்கள் கல் தச்சர்கள் என்றழைக்கப்பட்டனர். பிரகஸ்தியை எழுதியவர், அதனைச் செப்பேட்டில் பொறித்தவர் ஆகியோரின் பெயர்களும் காணப்படும். தானத்தில் அவர்களுடைய பங்கும் அறிவிக்கப்பட்டிருக்கும்.

சோழர்களின் கல்வெட்டுகளில் புறவு வரித்திணைக்களம், முகாவட்டி, திருவாய் கேள்வி போன்றோரின் கையெழுத்துக்கள் காணப்படுகிறது. சில கல்வெட்டுக் குறிப்பிட்ட ஊர்சபையோருக்கு இடைப்பட்ட ஆணையாக அமையும். எனவே அதில் எவ்வித கையொப்பமும் காணப்படுவதில்லை.

**ஓம்படைக் கிளவி :**

இது கல்வெட்டின் இறுதிப் பகுதியாகும். ஒரு சில கல்வெட்டுகளில் கையெழுத்துக்களுக்கு முன்பும் அமையும். கல்வெட்டுகளின் இறுதிப் பகுதிகளில் பலவகைப்பட்ட மாறுபட்ட முறைகள் பின்பற்றப்படுகின்றன. பெரும்பாலும் தானங்கள் வழங்கப்படுவதன் மூலம் கிடைக்கும் நற்பலன்கள் பேறுகள் ஆகியவை குறிக்கப்படும். அந்த தானத்தை மீறியவர்கள், மதியாதவர்கள் ஆகியோரைச் சென்றடையும் பாவங்கள் பற்றியும் தெரிவிக்கப்படும். இதுவே ஓம்படைக் கிழவியாகும். அதாவது தர்மம் நிலையாக நடைபெற வேண்டும் என்பதற்காகக் கூறப்படும் பாதுகாவற்சொல் ஓம்படைக் கிளவியாகும்.

மேற்கண்டவாறு அக்காலக் கல்வெட்டுகள் அமைந்திருக்கும். இக்கல்வெட்டுகள் கூறும் செய்திகளை அறிஞர்கள் ஆராய்ந்து அவற்றை இனம் பிரித்து வகைப்படுத்தியுள்ளனர்.

அவை

1. இலக்கியக் கல்வெட்டுகள்

2. வரலாற்றுக் கல்வெட்டுகள்
3. சமயத் தொடர்புடைய கல்வெட்டுகள்
4. கொடை நிகழ்வைக் கூறும் கல்வெட்டுகள்
5. வாழ்வியல் முறைகளை விளக்கும் கல்வெட்டுகள்
6. பொய்யும் கற்பனையும் கலந்த கல்வெட்டுகள்

**இலக்கியக் கல்வெட்டுகள் :**

இலக்கியச் சுவையுடன் இலக்கண விதிகளுக்குப் பொருந்த அமைந்துள்ள பாடல் கல்வெட்டுகளாகும். பாண்டியரின் தளவாய்புரச் செப்பேடுகள் சிவகாசிச் செப்பேடுகள், சோழரின் லெய்டன் செப்பேடுகள், அறச்சலூர் இசைக் கல்வெட்டு, பழமங்கலம் நடுகல், நந்திவர்மனின் திருவெள்ளறைப் பாடல் கல்வெட்டு, பதினாறு தூண் கொண்ட பட்டினப்பாலை மண்டபக் கல்வெட்டு, அபராசித வர்மனின் திருத்தனிப் பாடல் கல்வெட்டு, நரலோக வீரனின் தில்லைத் திருப்பணிப்பாடல் கல்வெட்டு, பொன் பரப்பிய மகதைப் பெருமாளின் இராசகண்ட கோபாலன் திருவண்ணாமலைக் கல்வெட்டு, திருப்பதி இராச கண்ட கோபாலன் கல்வெட்டு, திருக்கோவிலூர் காடவர்கோன் பாவைக் கல்வெட்டு, கம்பன் மூவேந்தவேளானின் கல்வெட்டு, பராக்கிராம பாண்டியனின் தென்காசிக் கல்வெட்டு, சோழ பாண்டியர் தம் மெய்கீர்த்திகள் முதலியன இலக்கியச் சுவை பொருந்திய இனிய பாடல் கல்வெட்டுகளில் சிலவாகும்.

‘‘ஓங்குதிரை வியன்பரப்பில் உததிஆ லயமாகத்
தேங்கமழ் மலர்நெடுங் கட்டிசை மகளிர் மெய்காப்ப’’
‘‘சந்திரனது வழித்தோன்றிஇத் தராமண்டல முழுதாண்டு
பண்டிந்திரன் முடிவளை யுடைத்தும் இமயத்துக் கல்லெழுதியும்’’

‘‘வெறியார் தளவத் தொடைச்செய மாறன் வெகுண்ட தொன்றும்
அறியாத செம்பியன் காவிரி நாட்டி லரமியத்துப்
பறியாத தூணில்லை கண்ணன்செய் பட்டினப் பாலைக்கன்று
நெறியால் விடுந்தூண் பதினாறு மேயங்கு நின்றனவே’’

''வாய்த்த புகழ் மங்கலத்து வந்தெதிர்ந்த மாற்றலரை
சாய்த்தமருள் வென்ற சயம்பெருக – சீர்த்தபுகழ்
நிக்குவணம் கற்பொறிக்கப் பட்டான் கரையகுலச்
சொக்கனேந்த லேவுலகில் தான்''

''கண்டார் காணா உலகத்தில் காதல் செய்து நில்லாதேய்
பண்டேய் பரமன் படைத்தநாள் பார்த்து நின்று நைய்யாதேய்
தண்டார் மூப்பு வந்துன்னைத் தளரச் செய்து நில்லாமுன்
உண்டே லுண்டு மிக்கது உலகம் அறிய வைம்மினேய்''

''வண்டறைதார் மன்னர் மலைபடைத்தென் தெவ்வரைவெந்
கண்டதிறல் காங்கேயன் கண்சிவப்பப் - பண்டே
மலைகடாம் பாட்டுண்ட மால்வரை செஞ்சோரி
அலைகடாம் பாட்டுண் டது''

''தென்னர் முதலா வுலகாண்ட செம்பொன்முடி
மன்னர் பெருவாழ்வும் வாள்வலியு – மின்னு
முருவத் திகிரி யுயர்நெடுந்தேர் வாணன்
புருவக் கடைவளையப் போம்''

''மாறுபடு மன்னவர்தம் கைபூண்ட வாளிரும்பு
வேறுமவர் கால்பூண்டு விட்டதே – சீறிமிக
வேட்டத் திரிகளிற்று விக்கிரம பாண்டியன்த
னாட்டங் கடைசிவந்த நாள்''

''எத்தலமும் ஏத்து மிராசகண்ட கோபாலன்
கைத்தலத்தின் கீழோர்க் கையில்லை - இத்தலத்தி
லுண்ணாதா ரில்லைஇவன் சோறுணு மிவன்புகழை
எண்ணாதா ரில்லை யினி''

''புலியைப் பயந்த பொன்மான் கலியைக்
கரந்து கரவாக் காரிகை சுரந்த''

இப்பாடல்கள் அனைத்தும் இலக்கியச் சுவை கொண்டவை.

**வரலாற்றுக் கல்வெட்டுகள் :**

கல்வெட்டுகள் பொதுவாக அரசர் பற்றிய வரலாறும், சமயம் பற்றிய வரலாறும் அறிய உதவுகின்றன. கி.பி. நான்காம் நூற்றாண்டு தொடங்கி பதினேழாம் நூற்றாண்டு முடிய உள்ள காலத்துத் தமிழ்நாட்டு வரலாறு பெரும்பாலும் கல்வெட்டுகளை அடிப்படையாக வைத்தே எழுத வேண்டியுள்ளது. பொதுவாக இந்தியாவின் பிற பகுதிகளின் வரலாறுகளுக்கும் இது பொருந்தும். அக்காலத்தைப் பற்றிய எந்த வரலாற்று நூலை எடுத்துப் பார்த்தாலும் இது விளங்கும். அதற்கு இலக்கியங்கள் ஓரளவே மூலச்சான்றுகளைத் தந்துள்ளன. மேலும் பல இலக்கியங்களின் காலங்களே கல்வெட்டுச் செய்திகளைத் துணைக் கொண்டு தான் நிறுவப் பெற்றுள்ளன என்பதையும் நினைவு கூற வேண்டும். மற்ற வரலாற்று மூலங்களை விட கல்வெட்டுகள் நம்பத் தகுந்தவை. ஏனெனில் இவை பொறிக்கப்பட்ட காலத்திற்குப் பின் பெரும்பாலும் எந்த மாற்றமும் அடைவதில்லை என்று டாக்டர் எ.சுப்பராயலு கூறுகிறார்.

வரலாற்றைப் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டுகளில் வயலூர்க் கல்வெட்டு முதன்மை இடத்தைப் பெறுகிறது. இதில் பல்லவ மன்னர்தம் வழிமுறை தெளிவுபடுத்தப் பெற்றுள்ளது. கன்னியாகுமரியில் உள்ள வீர ராஜேந்திரனின் கல்வெட்டு சோழ மன்னர் தம் வழிமுறை மரபை வரலாற்று வழியில் கூறுகிறது. சிறப்பாக, பராந்தக வீர நாராயணனின் தளவாய்புரச் செப்பேடுகள் வாயிலாக அவனுடைய வெற்றிச் சிறப்புகளை அறியலாம். இராசராசன் மெய்க்கீர்த்தியின் வாயிலாக அவன் வெற்றிச் சிறப்புகளையும், சடையவர்மன் சுந்தர பாண்டியன் மெய்க்கீர்த்தி வாயிலாக அவன் வீரச் சிறப்பையும் அறியலாம். முதலாம் மகேந்திரவர்மனின் ஆட்சிக்காலம் கி.பி. 600 முதல் 630 வரை முப்பது ஆண்டுகள் என வரலாற்று ஆய்வாளர்கள் எழுதி வந்தனர். ஆனால் முதலாம் மகேந்திரவர்மனின் மோத்தக்கல் நடுகல் அவ்வரசனுடைய முப்பத்திரண்டாம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பெற்றுள்ளது. இதனின்று அவன் முப்பத்திரண்டு ஆண்டுகளுக்குக் குறையாமல் ஆட்சிபுரிந்த வரலாற்று உண்மையை அறியலாம்.

நெடுஞ்சடையன் பராந்தகனின் செப்பேடு ‘‘தென் மதுரா புரஞ்செய்தும் அங்கதனில் அருந்தமிழ் நற்சங்கம் இரீஇத் தமிழ் வளர்த்தும்’’ எனக் குறிப்பிடுகிறது. சின்னமனூர்ச் செப்பேடு ‘மதுராபுரிச் சங்கம் வைத்தும்

மாபாரதம் தமிழ்ப் படுத்தியும்' ஆற்றிய அரும்பணிகளைக் கூறுகிறது. ஈண்டு குறிப்பிடப் பெற்றுள்ள பாரதம் பெருந் தேவனாரால் பாடப் பெற்றதாக இருத்தல் வேண்டும். இக்கல்வெட்டுச் சான்றுகள் 'சங்கம்' இருந்ததைத் தெளிவுபடுத்துகின்றன.

சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும், சேரமான் யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறையும், வேளிர் ஐவரும் ஒன்றுகூடி மதுரையைச் சூழ்ந்தனர். பாண்டியன் நெடுஞ்செழியன் நகுதக்கனரே எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலைப் பாடி வஞ்சினம் மொழிந்தான். எழுவரையும் புறங்கண்டான்; பகைவரைக் கொன்றான்; பகைநாடு கொண்டான்; இச்செய்தியைப் புறநானூறு, நெடுநல்வாடை முதலிய சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. இவனுடைய தலையாலங்கானத்துப் போரில் சேரன், சோழன் என்னும் இரு பெரு வேந்தரையும் கொன்றதனைத்

'தலையாலங் கானத்தில் தன்னொக்கும் இருவேந்தரைக்
கொலைவாளில் தலைதுமித்துக் குறைத் தலையின் கூத்தொழித்தும்
என மூன்றாம் இராசசிம்மனின் சின்னமனூர்ச் செப்பேடு குறிப்பிடுகிறது.

பொய்யா வாய்மொழிக் கபிலன் எனப் புகழ்ந்துரைக்கப் பெறும் கபிலர் பாரியின் காலத்தவர். 'பாரி இறந்த பின் பாரி மகளிரை விச்சிக்கோ, இருங்கோவேள் ஆகியோரிடம் அழைத்துச் சென்று மணம் புரிந்து கொள்ள வேண்டினார்; அவர்கள் மறுத்தனர். பின் பாரி மகளிரைப் பார்ப்பார் படுத்து மாய்ந்தார்' என்று புறநானூறு (200, 202, 239) கூறும். பாரி மகளிருள் ஒருத்தியை மலையமானுக்கு மணம் கொடுத்து அனல் புக்கு மாய்ந்ததாக இராசராசன் காலக் கல்வெட்டு விளக்குகிறது. திருக்கோவலூரில் கபிலர் அனல் புக்க இடம் 'கபிலக்கல்' என இராசராசன் காலத்தும் வழங்கப் பெற்றமை அறியலாம்.

மொய்வைத் தியலு முத்தமிழ் நான்மைத்
தெய்வக் கவிதைச் செஞ்சொற் கபிலன்
மூரிவண் தடக்கைப் பாரிதன் அடைக்கலம்
பெண்ணை மலையற் குதவிப் பெண்ணை

அலை புனல் அழுவத் தந்தரிஷஞ் செல
மினல்புகும் விசும்பின் வீடுபே றெண்ணிக்
கனல்புகும் கபிலன் கல்லது''

என்பது அவ்வரலாற்று நிகழ்வினை விளக்கும் கல்வெட்டுப் பகுதியாகும். இத்தகைய சங்ககால வரலாற்றுச் செய்திகளுக்கு உறுதுணையாகக் கல்வெட்டுக்கள் துணை நின்று அவற்றை மெய்ப்பித்துக் காட்டுவதைக் காணலாம்.

**சமயத் தொடர்புடைய கல்வெட்டுகள் :**

சமய வளர்ச்சிக்குத் தமிழகத்தில் பல்வேறு மன்னர்கள் பல்வேறு காலங்களில் உதவி வந்தனர். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் மகேந்திரவர்ம பல்லவன் 'குடவரைக் கோயில்கள்' பலவற்றை உருவாக்கினான். இம்மன்னனுடைய கல்வெட்டொன்று சீயமங்கலச் சிவன் கோவிலில் காணப் பெறுகிறது. மூன்றாம் நந்திவர்மன் திருகாட்டுப் பள்ளியில் ஒரு சிவன் கோவிலைக் கட்டிச் சிற்றூர் ஒன்றை தேவதானமாக அளித்தான். திருவல்லம் சிவபெருமானுக்குப் பல அறங்களைச் செய்தான். அபராசிதன் காலத்தில் சிவன் கோவிலில் திருப்பணிகள் பல நிகழ்ந்தன. அபராசிதனின் மனைவி மாதேவடிகள் திருவொற்றியூரில் உள்ள சிவன் கோவிலில் திருவிளக்கு வைக்க முப்பது கழஞ்சுப் பொன் கொடுத்தாள். இவன் காலத்தில் நம்பியப்பி என்பவன் திருத்தணிகையில் ஒரு சிவன் கோவிலைக் கட்டினான். அவனுடைய அரிய செயல்களைப் பாராட்டு முகத்தான் அபராசிதன் பாடிய

'திருந்து திருத்தணியிற் செஞ்சடையீ சற்குக்
கருங்கல்லாற் கற்றளியா நிற்க – விரும்பியே
நற்கலைக ளெல்லாம் நவின்றசீர் நம்பியப்பி
பொற்ப மையச் செய்தான் புரிந்து''

என்னும் வெண்பா கல்வெட்டில் இடம் பெற்றுள்ளது.

முதலாம் இராசராசன் தஞ்சாவூரில் இராசராசேச்சுரம் என்னும் கற்கோவிலை எடுப்பித்து அளித்த அளவிறந்த கொடைகளைப் பற்றி இக்கோவில் கல்வெட்டுகள் பறைசாற்றிக் கொண்டுள்ளன. கோவில் வழிபாட்டின் பொருட்டு ஐம்பதுக்கும் மேற்பட்ட ஊர்கள், ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைச் செல்வங்கள், எண்ணற்ற இறைவன் திருமேனிகள்,

திருப்பதியம் விண்ணப்பம் செய்ய ஓதுவார்கள் நாற்பத்தெண்மர், உடுக்கை கொட்டி மத்தளம் வாசிக்க இருவர் உரிய கோவில் பணி செய்ய நானூறு தளிச்சேரிப் பெண்டிர், அவர்களுக்கு நடனம் கற்பிக்க நட்டுவனார் கணக்கர் முதலான நிவந்தக்காரர்கள், கருவூலம் காக்கும் பண்டாரிகள், திருமேனிகளைக் காக்க மெய்க்காப்பாளர்கள் ஆகிய இத்துணை விலை மதிப்பிலாப் பொருள்களையும், பணியாளர்களையும் இராசராசன் அளித்தான்.

முதலாம் பராந்தக சோழன் காலத்தில் மதுரையை அடுத்த ஆனைமலையிலுள்ள நரசிங்கப் பெருமாள் கோவிலில் ஒரு கல்வெட்டு பொறிக்கப் பெற்றுள்ளது. அக்கோவிலுக்குக் ‘கீழ் இரணிய முட்டம்’ என்ற பகுதி தேவதானமாக விடப் பெற்றிருந்தது. அப்பகுதியில் அமைந்த பிரம்மதேயம் நரசிங்க மங்கலம் ஆகும். முதலாம் பராந்தகனின் அரசியல் அலுவலர்களில் ஒருவரான ‘மருதூருடையான் அருணிதிக்கலியன் என்பவனுக்கு ஊர்ச்சபையார் கல்வெட்டிக் கொடுத்த செய்தி இடம் பெற்றுள்ளது. இத்திருக்கோவிலிலிருந்து ஊர்ச்சபையார் தேவை நேரிட்ட போது வட்டிக்குக் காசு பெற்றதைக் குறிப்பிடுகிறது. ‘மணிமங்கலம்’ என்ற மற்றோர் ஊர்க்கல்வெட்டும் இச்செய்தியை உறுதி செய்கிறது.

திருமால் கோவில்களில் ‘திருவாய்மொழி’ விண்ணப்பம் செய்ய நிவந்தங்கள் அளிக்கப்பெற்றன. முதலாம் இராசராசனுடைய முப்பதாம் ஆட்சியாண்டின் திருபுவனிக் கல்வெட்டு இச்செய்தியை விளக்குகிறது. ‘உம்பள நாட்டு மூவேந்த வேளான்’ இராசேந்திரன் திருப்பெயரில் எடுப்பித்த மண்டபத்தில் அவ்வூர்ச் சபையார் கூடினர். படைத்தளபதி இராசேந்திர சோழ மாவலிவாணராயர் சில அறங்களை நடத்துவதற்காகக் கொடுத்த 72 வேலி நிலத்தைப் பெற்றுக் கொண்டனர். நிலத்தின் வருவாய் 12000 கலம் நெல். இதில் திருவிழாக்கள் நடத்தவும், வைணவர்களுக்கு உணவு படைக்கவும், திருவாய்மொழி விண்ணப்பம் செய்யவும் 2475 கலம் நெல் பயன்படுத்தப் பெற்ற செய்தியை விளக்குகிறது.

தமிழ் நாட்டில் இயற்கையாக அமைந்த குகைத் தலங்களைச் சமணத் துறவியர் தங்கள் வாழ்விடங்களாகக் கொண்டிருந்தனர். மதுரையருகேயுள்ள மீனாட்சிபுரம், புதுக்கோட்டை அருகேயுள்ள சித்தன்னவாசல், திருச்சி

மாவட்டத்திலுள்ள புகழுர் ஆகிய இடங்களிலுள்ள கல்வெட்டுக்கள் சமண முனிவர்களுக்குப் படுக்கைகள் அமைத்துக் கொடுத்த செய்தியைத் தெரிவிக்கின்றன. அங்குச் சமணத் துறவியர் உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்தமை அறியலாம். இச்செய்தியை செஞ்சியின் அருகிலுள்ள திருநாதர் குன்றில் காணப்பெறும் கல்வெட்டில்

“ஐம்பத் தேழ னசனந் தோற்ற
சந்திர நந்தி ஆசிகர்
நிசீதி கை’

என்று பொறிக்கப் பெற்றுள்ளது. ‘சந்திரநந்தி என்னும் சமணப் பெரியார் ஐம்பத்தேழு நாட்கள் உண்ணா நோன்பு இருந்து உயிர் நீத்த இடம்’ என்பது இதன் பொருளாகும்.

இவற்றால் பண்டைத் தமிழர்கள் மேற்கொண்ட சமய வாழ்வின் முறைகளை அறியலாம்.

**கொடை பற்றிக் கூறும் கல்வெட்டுகள் :**

கல்வெட்டுகள் கொடைச் செய்திகளையே மிகுதியாக வலியுறுத்துகின்றன. அறச்செயலைப் பரப்புதலே கல்வெட்டின் நோக்கமாக அமைந்தது எனலாம். அக்கொடைகள், நிலமாகவும், பொன்னாகவும், பொருளாகவும் அறவோர் பலரால் அளிக்கப்பெற்றன. அவற்றின் வருவாய் கோவிலைப் பேணிக் காக்கவும், பூஜை வழிபாடுகள் தொடர்ந்து நடைமுறைப் படுத்தவும் பயன்படுத்தப்பெற்றன. கோவிலுக்கும், தனிப்பட்டவர்க்கும் கொடையாக நிலத்தை உரிமையாக்கிய போது நில உரிமைகளைப் பல்வேறு பெயர்களில் உரிமையாக்கினர். அவை தேவதான இறையிலி, ஊரமை இறையிலிப் பட்டயம் குடி நீங்காத் தேவதானம் திருவிடையாட்ட இறையிலி நிலம், திருநாமத்துக்காணி, சர்வமான்ய இறையிலி, ஸ்தானமானிய இறையிலி, அருச்சனாவிபவகாணி, காணியாட்சி சாசனப் பட்டயம் உதிரப்பட்டி போன்ற பெயர்களில் நில உரிமையாக்கப் பெற்றுள்ளன.

கொல்லி மலையிலுள்ள அறப்பள்ளி ஈசுவரர் கோவிலில் உத்தம சோழனின் பத்தாம் ஆட்சியாண்டில் (கி.பி. 980) பொறிக்கப் பெற்றுள்ள பல கல்வெட்டுகளில் அக்கோவிலில் கார்த்திகை விழா நிகழ்த்த சாலைப்புற நிலம்

கொடையாக அளித்த செய்தி காணப்பெறுகிறது. மேலும் பன்னிரண்டு ஊராரிடம் நூறு கழஞ்சுப் பொன் கொடுத்து அதன் வட்டி வருவாயைக் கொண்டு அக்கோவில் பூசை நடத்தப்பெற்றுள்ள செய்தியைப் பல கல்வெட்டுக்கள் விளக்குகின்றன. அக்கோவிலுக்கு நான்கு கல நெல் விதைப்பு அளவிலான நில வருவாயை உரிமையாக்கியுள்ள செய்தியும் குறிப்பிடப் பெற்றுள்ளது. சேலம் சுகவனேசுவரர் கோவிலில் கொடையாளர் பலர் போதிகை, தூண், நிலைகால் ஆகியவற்றை அமைத்துக் கொடுத்த செய்தி இடம் பெற்றுள்ளது.

திருச்செங்கோட்டுக் கோவில் திரு ஏகாதசிக் கணப்பெருமக்கள், திருவாதிரைக் கணப்பெருமக்கள், திருவோணக் கணப்பெரு மக்கள், துவாதசிக் கணப்பெருமக்கள் ஆகியோர் குறிப்பிடப் பெற்றள்ளனர். இக்கணப் பெருமக்களிடம் 'காசெட்டாங்கல்' என்னும் அளவினால் நிறுக்கப் பெற்ற பொன்னைக் கொடுத்து அதனின்றும் வந்த வட்டியால் கோவில் பிராமணர்களுக்கு உணவு படைத்துள்ள செய்தி குறிப்பிடப் பெற்றுள்ளது. இவ்வறச் செயலுக்குப் பலர் கொடை அளித்துள்ளனர். இத்தகைய கொடைகள் பிற்காலத்திலும் அருளுள்ளம் கொண்ட அறவோர் பலரால் தொடர்ந்து அளிக்கப் பெற்றுள்ளன. வாழ்வு பற்றிய செய்திகள் இந்நூலில் பரந்து காணப்பெறுகின்றன.

இவ்வாறு கல்வெட்டுகள் வெற்றி வேந்தரின் சிறப்புகள், புரவலர்கள், அரசியல் அலுவலர்கள் ஆகியோரின் வரலாற்றைத் தெளிவாக விளக்குகின்றன. நாகரிக மேம்பாடுகள், பண்பாட்டு நிலைக்களன்கள், சமுதாய நிலைகள், பொருளியல் வளர்ச்சி சமயத்தாக்கம் போன்றவற்றையறியப் பெரிதும் துணை செய்கின்றன.

கல்வெட்டுகள் வரலாற்றுக்குப் பெரிதும் பயன்படுவதுடன் அவ்வக்கால மொழிநிலையை அறிந்து கொள்ளவும் பயன்படுகின்றன. அக்காலத்தில் நிலவிய வட்டார வழக்குச் சொற்களை அறியவும் பயன்படுகின்றன. இலக்கண மரபுக்கு எடுத்துக்காட்டாகச் சில கல்வெட்டுக்கள் அமைந்துள்ளன. சில கல்வெட்டுகளில் பிறமொழிச் சொற்கள் கலந்துள்ளன. சில கல்வெட்டுகள் பாடல்களாக இடம் பெற்றுள்ளன. சில மணிப்பிரவாள நடையில் அமைந்துள்ளன. சில தூய தமிழ் நடையில் இடம் பெற்றுள்ளன.

## மெய்க்கீர்த்தி

கல்வெட்டுகளில் மன்னனது உண்மையான புகழை எடுத்துக் கூறுவது மெய்க்கீர்த்தி எனப்படுகிறது. உண்மையான புகழுக்குக் காரணமான குணங்களையும் செய்கைகளையும் எடுத்துக் கூறும் இலக்கியம் இது.

'மெய்ப்பெயர் மருங்கின் வைத்தனர் வழியே'

என்ற தொல்காப்பியக் கூற்றில் மெய்ப் பொருள் என்பதற்கு ''பாட்டுடைத் தலைவர் பெயரும் நாடும் ஊரும் முதலியனவாம்'' என்று நச்சினார்க்கினியர் பொருள் கூறுகிறார். மன்னனுக்கு உரிய உண்மைப் புகழினை எடுத்துக் கூறும் கல்வெட்டில் காணப்படும் செய்யுள் இலக்கியப் பகுதியே மெய்க்கீர்த்தி ஆகும். மெய்க்கீர்த்தி என்ற தொடரைப் பாட்டியல் நூல்களே அறிமுகப்படுத்தப் படுகின்றன. அவை 'மெய்க்கீர்த்தி மாலை' என்ற ஓர் இலக்கியம் இருந்ததாகச் சுட்டுகின்றன. 'கீர்த்தி' என்ற வடசொல் பல்லவர் காலத்திலேயே தமிழி மொழியில் பெருவழக்காகி இருக்க வேண்டும் என்பர்.

**மெய்க்கீர்த்தியின் தோற்றமும், வளர்ச்சியும் :**

மன்னர் புகழுக்குரிய குணங்களையும், செயல்களையும் எடுத்துக்கூறி நிலை நிறுத்த வேண்டும் என்ற மரபு தமிழ் முன்னோர்களாலும், புலவர்களாலும் தோற்றுவிக்கப்பட்டது.

நாடுகள் பலவென்று தம்நாட்டு எல்லையை விரிவுபடுத்த மன்னர் விரும்பினார். வெற்றி விழாக்கள் கொண்டாடினார். வெற்றித்தூண்களை ஆங்காங்கே நாட்டிப் புகழை நிலை நிறுத்தினர். வெற்றிப் புகழ் பாடும் புலவர்களைப் பரிசு நல்கி ஆதரித்தனர். சங்க காலத்தில் போரில் காட்டிய வீரச்செயல்கள் புகழப்பட்டன.

வருவிசைப் புனலைக் கற்சிறை போல்
ஒருவன் தாங்கிய பெருமை

வஞ்சித்திணையில் பேசப்பட்டது.

மைந்து பொருளாக வந்த வேந்தனைச்
சென்றுதலை அழிக்கும் சிறப்பு

தும்பைத் திணையில் கூறப்பட்டது.

கொடுப்போர் ஏத்திய இயன்மொழி வாழ்த்தும், பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவறீஇச் சென்று பயன்எதிரச் சொன்ன ஆற்றுப்படையும் பாடாண் திணையாயின. புகழைப் பெறுதலையும், புலவரால் புகழப்படுதலையும் வாழ்க்கையின் விழுமியங்களாகக் கொண்டனர். மன்னர் புகழ்பாட அவைக்களப் புலவரும் பின்னர் தோன்றினர். பேரரசரும், மன்னரும், வள்ளல்களும் புகழ்ந்து பாடப்பட்டனர். இத்தகைய புகழ் நிலைத்து நிற்கக் கற்களில் பொறித்து வைக்கும் செயலாக வடிவெடுத்தது. அவையே கல்வெட்டுக்கள் மெய்க்கீர்த்திகளாக தோன்றின.

**நடுகல் (இலக்கண இலக்கியத்தில்) :**

நாடு காக்கும் பணியில் வீரமரணம் அடைந்த பெருவீரர்க்கு நடுகல் நடப்பட்டது. அவ்வீரனின் வீடும் புகழும் அதில் பொறிக்கப்பட்டன. வீர வணக்கமாக இது வளர்ச்சி பெற்றதற்கு இலக்கியச்சான்று உண்டு.

‘காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்,
சீர்த்தகு சிறப்பில் பெரும்படை வாழ்த்தல்’

என்ற மரபு தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது.

‘மன் அட்டவென்றி மறவோன் பெயர்பொறித்துக்
கல்நட்டார் கல்சூழ் பொறித்து…..
காண்தக நாட்டினர் கல்’

சங்கர குட்டியாரும் நாகந்தை சிறு குட்டியாரும் தகடூரில் போரில் மாண்டு நடுகல்லான வரலாற்றுச் செய்தி ஒன்று.

‘‘தகடூர் புகுந்து நுளம்பன் பலத்தோடே துணிந்து
நாடு பாவினார் சங்கர சூட்டியார்
அவரோடு உடன் புகுந்து தகடூரில் பட்டார்
நாகந்தை சிறுகுட்டியார் கல்நாடு’’

நடுகல்லில் குறிக்கப்பட்டுள்ளது.

**மெய்க்கீர்த்தி :**

நடுகல்லில் பொறிக்கப்பட்டுள்ள வீரர் தம் பெயரும் வீடும் நாளடைவில் விரிவாக வரையப்பட்டன. இவை கல்வெட்டுகள் ஒழுங்காக முறைப்படுத்தப் பட்ட காலத்தில் மெய்க்கீர்த்தி என்று பெயர் பெற்றன.

**அ. பல்லவர் மெய்க்கீர்த்தி :**

பல்லவர் காலக் கல்வெட்டுக்கள் பல தமிழில் காணப்படுகின்றன. அவற்றில் மெய்க்கீர்த்தி போன்ற சிறப்புப் பகுதி வடமொழியிலேயே அமைந்துள்ளது.

**ஆ. பாண்டிய மெய்க்கீர்த்தி :**

கி.பி. 768 முதல் பாண்டி பராந்தன் நெடுஞ்செழியன் அளித்த வேள்விக்குடி, சின்னமனூர் சீவரமங்கலம் ஆகிய செப்பேடுகளில் காணப்படும் மெய்க்கீர்த்திகள் முதலில் தோன்றிய மெய்க்கீர்த்திகளாகப் பெறப்படுகின்றன. வேள்விக்குடிச் செப்பேட்டில் காணப்படும் மெய்க்கீர்த்திப் பகுதியில்,

பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி முதலாக ஆண்டு வந்த பாண்டிய குலத்தை அழித்துத் தமது ஆட்சியை நிறுவியவர் களப்பிரர். அக்களப்பிரை அழித்துப் பாண்டிய நாட்டை மீட்டவன் கடுங்கோன். அவனது சிறப்பினை முதலில் கூறித் தொடர்ந்து கடுங்கோன் மகள் அவனி சூளாமணி முதலாகச் செழியன் சேந்தன், சிரீமாறவர்மன், கோச்சடையன், தேர்மாறன் போன்ற பாண்டிய மன்னர் அறுவரின் செயல்களும், புகழும் முறையாகக் கூறப் படுகின்றன. அவர்தம் படை, படைத்திறன், வீரம், வெற்றி, சிறப்புப் பெயர்கள் போன்றவை முறையாகக் கூறப்படுகின்றன.

பராந்தக வீர நாராயணனின் தளவாய்புரச் செப்பேடு, ஓங்கு திரைவியன் பரப்பில்' என்ற இலக்கியத் தொடரோடு தொடங்குகிறது. பாண்டியர் குல மரபு திருமால் பிரம்மன், அத்திரி ஆகியோரின் சிறப்புகளை முதலில் கூறி அதில் மகன் சந்திரன் என்றும், அவள் வழிவந்த புதன், புரூவரன் ஆகிய பாண்டிய மன்னர் நாடாண்டனர் என்றும் விளக்கிப் பாண்டியர் சந்திரகுலம் என்பதை நிறுவுகிறது. சிறப்புச் செயல்களாகத் திருவிளையாடற் புராணச் செய்திகள் பலவற்றைத் தொகுத்து உணர்த்திப் புராணச் செய்திகளைக் கூறுகிறது. இறுதியாக மெய்க்கீர்த்திக்கு உரியவனான வீர நாராயணனின் பிறப்பு, போர்ச்செயல், வெற்றி, அறச்செயல்கள் ஆகியன மெய்க்கீர்த்தியுள் விளக்கப் படுகின்றன.

பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றிய மெய்க்கீர்த்திகள் முன்னோர் செய்திகள் அனைத்தையும் சுருக்கிய வடிவில் கூறின. முன் 50 வரிகள் கூறப்பட்ட செய்தி 10 வரிகளில் சுருக்கமாகத் தரப்பட்டன என்பதைக் காண்கிறோம்.

**இ. சோழர் மெய்க்கீர்த்தி :**

பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் பிற்காலச் சோழர் காலத்தில் மெய்க்கீர்த்திகள் வளர்ச்சி வடிவம் பெற்றன. முதலாம் இராசராசன் காலத்திலிருந்துதான் அரசனது போர் வெற்றிகள், ஆட்சிச் சிறப்பு, கொடை முதலியவற்றைக் கூறும் மெய்க்கீர்த்திகள் விரிவாகக் கூறப்பட்டு வந்தன. முதலாம் இராசராசன் பகை மன்னர்களாகிய சேரர் மீது பாடப்பெற்ற பதிற்றுப் பத்தின் பதிகங்களைக் கண்டு முதன் முதலில் தனக்கும் கல்வெட்டில் மெய்க்கீர்த்தி அமைத்துக் கொண்டான் என்பர். பதிற்றுப் பத்து நான்காம் பத்துப் பதிகம்

'பூமி நாட்டைப் படையெடுத்துத் தமீஇ
உருள்பூங் கடம்பின் பெருவாயில் நன்னனை
நிலைச் செருவினால் தலை அறுத்து'

கூறுவது போன்று

'இரட்ட பாடி ஏழரை இலக்கமும்
முந்நீர்ப்பழந்தீவு பன்னீராயிரமும்
திண்திறல் வென்றித் தண்டாற் கொண்டு'

என முதலாம் இராசராசன் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது இதற்குச் சான்றாகும்.

இராசராசன் வென்ற நாடுகள் வரலாறு போலத் தெளிவாக

'வேங்கை நாடும் கங்க பாடியும்
தடிகை பாடியும் நுளம்ப பாடியும்......'

என அடைமொழி இன்றி இராசராசன் கல்வெட்டில் மெய்க்கீர்த்தியில் கூறப்பட்டுள்ளது. மகன் இராஜேந்திரன் காலக் கல்வெட்டில்,

''சுள்ளிச் சூழ்மதில் கொள்ளிப் பாக்கை
நண்ணற்கு அரும்அரண் மண்ணைக் கடக்கம்''

என ஊர்ப்பெயர்கள் அடைமொழியோடு கூறப்பட்டுள்ள மாற்றத்தினைக் காண முடிகிறது. பல மன்னர்களின் மெய்க்கீர்த்தித் தொடக்க அடிகள் (மங்கலச் சொல்) வேறுபட்டுக் காணப்படுகின்றன. சோழர்களின் போர்ச் செயல்களைக் கூறும் மெய்க்கீர்த்திகள் குலோத்துங்கன் காலக் கல்வெட்டுக்களோடு முடிவடைகின்றன. இரண்டாம் குலோத்துங்கச் சோழன் கால முதல் போர் தவிர்த்த பிற சிறப்புகள் கூறப்பட்ட மெய்க்கீர்த்திகளே மிகுதியாக உள்ளன. இவை இலக்கியம் போலவே மாறிவிட்டன என்பதை, பொறிப்புகள்

கூறுகின்றன. செய்திகளும் பல கற்பனைக் கதைகளும், உயர்வு நவிற்சியும் கலந்தவை’ என கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார் கூறுகின்றார்.

**பாண்டியர் மெய்க்கீர்த்திகளின் மாற்றம் :**

1. புராண அடிப்படையில் கடவுளைக் கூறி, புராண அடிப்படையில் மன்னர் முன்னோர் சிறப்புக் கூறி, இறுதியில் மன்னர் புகழ் கூறுவதாக முதலில் அமைந்தது.
2. முன்னோர் சிறப்பினைத் தொகுத்துக் கூறி மன்னர் புகழ் கூறும் நிலைக்கு மாறியுள்ளது.
3. மன்னர் புகழ் மட்டும் கூறும் மூன்றாம் நிலைக்கு வளர்ந்துள்ளது.

**மொழி நிலை :**

நடுகற்கள், வட்டெழுத்து, தமிழி, தமிழ் ஆகிய எழுத்துக்களாலேயே அமைந்துள்ளன. பல்லவர் கால மெய்க்கீர்த்திகள் வடமொழி, பிராகிருத மொழிகளில் பிராமி, கிரந்த எழுத்துக்களில் அமைந்துள்ளன. இரு மொழி அமைப்பு முறை ஏற்பட்ட பிறகு கொடைகள் நில எல்லைகள் போன்ற சிறப்புச் செய்திகளை விரிவாக எழுதத் தாய்மொழியாகிய தமிழே பயன்படுத்தப் பட்டுள்ளது.

தமிழில் எழுதப்பட்ட மெய்க்கீர்த்தித் தொடர்களில் பல சொற்கள் வடமொழிச் சொற்களாக அமைந்துள்ளன. அவை வடமொழி எழுத்துக்களால் (கிரந்த எழுத்துக்களால்) எழுதப்பட்டுள்ளன என்பதை அறிய முடிகிறது.

## மெய்க்கீர்த்தியின் இலக்கணம்

நான்கு முதலான சீர்களைக் கொண்ட அளவடியால் ஆகிய தொடையால் அமைய மன்னனின் உண்மையான புகழ் யாவற்றையும் சொல்லியும், இறுதியில் அவன் வரலாறு கூறியும், பேரரசியரான துணைவியுடன் வாழ்க என்று வாழ்த்தியும், சிறப்புப் பெயருக்குப்பின் இயற் பெயரைக் கூறியும் அவனுடைய ஆட்சியாண்டுகள் என வகைப்படுத்திக் கூறுவது சிறந்த மெய்க்கீர்த்தியாகும் என்ற கருத்தைப் பன்னிரு பாட்டில் கூறுகிறது.

சீர்நான்கு ஆதி இரண்டடித் தொடையாய்
வேந்தன் மெய்ப்புகழ் எல்லாம் சொல்லியும்
அந்தத்து அவன்வர லாறு சொல்லியும்
அவளுடன் வாழ்கெனச் சொல்லியும் மற்றவன்
இயற்பெயர்ப் பின்னர்ச் சிறக்க யாண்டுளனத்
திறம்பட உரைப்பது சீர்மெய்க்கீர்த்தி (பன்னிரு பா 198)

மெய்க்கீர்த்தியின் இறுதி உரைநடையாய் அமைவதும் உண்டு என்பர். ஆசிரியம் விரவிய சொற் சீரடிகளால் அமைவதும் உண்டு. பெரும்பான்மை அகவல் ஓசையால் அமையும். துள்ளல் ஓசை வருவதும் உண்டு.

முன்னோர் வரலாறு முதலியவற்றோடு கூறப்படும் பாண்டியர் மெய்க்கீர்த்தி முன் மூன்று தலைமுறைகளோடு மட்டும் அமையாமல் அந்த வம்சம் நிறுவப்பட்ட காலத்திலிருந்து ஆண்ட அரசர்களால் எல்லோரையும் கூறுகிறது. எனவே இது ‘பிருதமுலு’ என்ற தெலுங்கு மெய்க்கீர்த்திகளுக்கு ஏற்றவாறு அமைந்துள்ளது என்பர்.

**மெய்க்கீர்த்தி இலக்கியமா?**

மெய்க்கீர்த்தி என்பது ஒருவகைச் சிறுநூல். விருந்து என்னும் வனப்பு வகையைச் சார்ந்தது எனக் கலைக் களஞ்சியம் கூறுகிறது. சாசனச் செய்யுள்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க பகுதி மெய்க்கீர்த்தி என்னும் இலக்கிய வகையாகும். தமிழிலுள்ள தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் மெய்க்கீர்த்தி மாலை ஒரு பிரபந்தம் குலமுறையில் செய்த கீர்த்தியைக் கூறுவது எனத் தமிழ்மொழி அகராதி குறிக்கிறது.

**காரணங்கள் :**

1. மெய்க்கீர்த்தி என்பது இலக்கிய வகைகளுள் ஒன்று என்பதால் மெய்க்கீர்த்தி, மெய்க்கீர்த்தி மாலை என்னும் தலைப்புகளில் பாட்டியல் நூல்கள் இலக்கணம் வகுத்துள்ளன.
2. மெய்க்கீர்த்தியின் இலக்கணத்திற்கு ஏற்ப அமைந்துள்ள உண்மைப் புகழ் முதலிய ஏழுவகைத் தன்மைகளும் எல்லா மெய்க்கீர்த்திகளிலும் அமைந்துள்ளன.

3. வரலாறு இலக்கியமாக முதலில் அமைந்த காலம் மாறி இராஜேந்திரன் காலம் முதல் அடைமொழித் தொடர்களில் தொடங்கி நல்ல இலக்கிய நடையில் வளர்ந்து விட்டது.
4. முதற் குலோத்துங்கன் மெய்க்கீர்த்திக்குப்பிறகு அது முழு இலக்கியமாகவே மாறிவிடுவதையும் காண முடிகிறது.
5. பலவகை கற்பனைகள் இடம் பெற்று விடுகின்றன. உவகை, உருவகம், எதுகை, மோனைத் தொடைகள் நிரல், நிறை அணிகள் முதலான அணிகள் உள்ளன. மிகைப்படுத்தப்பட்ட இடங்கள் உள்ளன. இவை அனைத்தும் இலக்கிய நெறியில் அமைந்தவை.
6. வாழ்த்து, வணக்கம் இல்லையென்றாலும் இலக்கியங்களுக்குரிய மங்கலத் தொடர்களோடு தொடங்குகின்றன.
7. தமிழறிந்த, தமிழுணர்ந்த, தமிழ் வளர்த்த, தமிழிலக்கியச் சுவையுணர்ந்த மன்னர் தம் புகழைக் கூறும் மெய்க்கீர்த்தி இலக்கியமாகவே பாடப்பட்டுள்ளன.
8. இலக்கிய அடிகளும், புராண உவகைச் செய்திகளும் இலக்கியங்களில் போலவே அமைந்துள்ளன.
9. போர்க்களச் செயல்கள் பல பரணி இலக்கியங்களாகவே அமைகின்றன.
10. மன்னர்களின் தோல்விகள் கூறாமல் மறைக்கப்பட்டு அவர்களின் வெற்றி முதலிய சிறப்புக்களே கூறப்படுவது இலக்கிய அடிப்படையில் அமைந்ததேயாகும்.

இவற்றால் மெய்க்கீர்த்திகள் இலக்கியமே எனலாம். அணி நலம், மன்னர் சிறப்பு, இயற்கை வளமும், ஆட்சி முறையும், தொடக்கம், குறிப்புச் சொல், இலக்கண அமைதி, புராணக் கருத்து, மொழி நடை, முடிவுரை என்ற பொதுவான இலக்கியக் கருத்துக்கள் அமைவதனால் மெயக்கீர்த்திகள் இலக்கியம் ஆகும் எனலாம் என்கிறார் பூ. சுப்பிரமணியம்.

**மெய்க்கீர்த்திகள் கூறும் செய்திகள் :**

1. ஸ்வஸ்தி ஸ்ரீ என்ற தொடக்கத்தை உடையன இம் மெய்க்கீர்த்திகள் இராஜேந்திரனுடைய வடக்கே கங்கையையும், தெற்கே இலங்கையையும், மேற்கே கடலையும், கிழக்கே கடாரத்தையும் படைகளால் கைக்கொண்டு நாட்டைத் தன் குடைக்கீழ் செங்கோலாட்சி புரிந்து புகழ் பெற்றவன் முதலாம் இராசாதிராசன். கிளர்ச்சி செய்த பாண்டிய நாட்டோடு போரிட்டுப் பாண்டியன்

மானாபரணன் என்பவனின் மணிமுடி அணிந்த தலையை அரிந்து பாண்டி நாட்டைக் கைக் கொண்டான். திருவாங்கூர் பகுதியான வேணாட்டோடு போர்த்தொடுத்து மன்னனைக் கொன்றான். வேணாட்டுப் போரில் சேரர்க்கு உதவிய கூவக நாட்டு மன்னனைத் தோற்கடித்து ஓடச் செய்தான். கடலால் சூழப்பட்ட காந்தழூர்ச் சாலையில் கப்பற்படையினை அழித்தான். பின் தம் முன்னோர் ஆண்ட முறையிலேயே செங்கோலாட்சி புரிந்தான். தன் ஆட்சிக்கு உட்பட்ட சேரர், பாண்டியர், சாளுக்கியர், பல்லவர் முதலான மன்னர் தன்னடிபயிண, செயங்கொண்ட சோழன் எனப் புனைப்பெயர் மாற்றி இராசகேசரி என்ற பட்டப்பெயர் புனைந்து ஆண்டான். ஆட்சியாண்டு 26ம் வயதில் இம்மெய்க்கீர்த்தி அமைக்கப்பட்டது.

2. இராசாதிராசனின் வெண்கொற்றக் குடை நிலவு போல் அழகும், குளிர்ச்சியும் உடையது. இவன் செங்கோல் செலுத்திய நாடு பரந்த நிலப்பரப்பையும், மிகுந்த செல்வத்தையும் உடையது. கொடிய துன்பங்களை நாட்டை விட்டு ஓட்டினான் மன்னன்.

சிறிய தந்தை உத்தம சோழன் வழியில் தோன்றிய எறிவலி கங்கை கொண்ட சோழன், இராசாதிராசனின் தமையன் சுந்தர சோழ பாண்டியன், தம்பியர் இரண்டாம் இராசேந்திரன், வீரமகேந்திரன், வீரராசேந்திரன் ஆகியவர்களுக்குத் தான் பெற்ற நாடுகளைக் கொடுத்து முடிசூட்டி ஒவ்வொரு பகுதியையும் ஆளச் செய்தான். இவர்களுக்கு வானவன், வில்லவன், மீனவன், கங்கன் இலங்கையர்க்கிறைவன், பல்லவன், கன்னக் குச்சிக்காவலன் என்ற பட்டப் பெயர்களை வென்ற மன்னர் பெயரால் சூட்டினான்.

தந்தை பட்டம் பெற்ற ஐந்தாம் ஆண்டில் இளவரசும் பட்டம் பெற்றதால் தன் தந்தையோடு 26 ஆண்டுகள் பல மன்னரைப் போரில் வென்றான். இவன் 36 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். போர் தொடுத்து மானாபரணன் என்னும் பாண்டியனின் முடியணிந்த தலையை வெட்டினான். வீரகேளன் என்னும் பாண்டியனைப் போர்க்களத்தில் பிடித்துத் தன் அத்திவாரணம் என்னும் யானையால் இடறச் செய்தான். புகழ்பெற்ற சுந்தர பாண்டியனையும் சிங்காசனம், மணிமுடி ஆகியவற்றை இழக்கச் செய்தான். வேணாட்டு மன்னனை வென்றார். இராம குடநாட்டில் காரிவர்மன் என்னும் மூஷிக வமிச மன்னனையும் அழித்தான்.

இராசசிம்மன் என்னும் சேரமன்னன் வென்றான். காந்தளூர்ச் சாலையில் இருந்த கப்பற்படையையும் அழித்தான்.

**ஆகவ மல்லன் :**

1. மேலை சாளுக்கிய மன்னர் சோமேசுவரன் ஆகவமல்லன் எனப்பட்டான். இவன் சோழர் வழிவந்த வேந்தை நாட்டு மன்னன் இராசராச நரேந்திரனுடன் போருக்கு வந்தான். இவன் தன் மாமனாகிய இராஜேந்திர சோழனின் உதவியை நாடினான். இவன் மகனாகிய முதலாம் ராசாதிராசன் போரிட்டுக் கண்டப்பய்யன், கங்காதரன் என்னும் படைத் தலைவர்களை வென்றான். ஆகவமல்லர் – மக்கள் விக்கியும் விசாயதித்தனும் ஓடி ஒளிந்தனர். யானைப் படை கைப்பற்றப்பட்டது. பின் கொள்ளிக் பாக்கைக்கு எரியூட்டினாள்.

சிங்களத்தை ஆண்ட காசிபன் விக்கிரபாகு என்ற பெயருடன் ஆண்டான். இராசாதிராசன் அவனைக் கொன்று மணி முடியைக் கவர்ந்து வந்தான். விக்கிரம பாண்டியனையும் ஈழத்தில் வென்றான். கன்ன குச்சி நாட்டை ஆண்ட வீரசலாமேகன் ஈழத்தில் ஒரு பகுதியை ஆண்டான். இவன் போரில் தப்பி ஓடி ஒளிந்தான். வீரசலா மேகனின் மனைவி, தமக்கை ஆகியோரைச் சிறை செய்தான். மீண்டும் போரிட வந்தபோது அவனைக் கொன்றான். கன்னர மரபில் தோன்றி ஈழத்தின் ஒரு பகுதியை ஆண்டு வந்த சீவல்லபன் மதனராசனையும் வென்றான்.

2. மேலைச் சாளுக்கியரைக் கம்பிலி நகரத்தில் போரிட்டு வென்றான். குறுநில மன்னரான கண்டரன, தினகரன், நாராயணன், கணபதி, மதுசூதனன் ஆகியோரை அழித்தான். பின் ‘கம்பிலியில் சயத்தம்பம்’ நாட்டினான்.

அனைத்து அரசர்களும் இராசாதிராசனுக்குத் திறை செலுத்தி வந்தனர். தன் நாட்டின் ஆறில் ஒரு கடமையாக வரி வசூலிக்கப்பட்டது.

உகந்து நான் மறைவர் முகந்து கொளக் கொடுத்தான். மனு நெறி நின்றான் அசுவ மேத யாகம் செய்தான்.

3. மூன்று ஆண்டுகளுக்குப் பின் மேலைச் சாளுக்கியத் தலைவனான விச்சயமனைக் கிருஷ்ணா நதிக்கரையிலுள்ள பூண்டுரில் ஆஞ்சி ஓடச்

செய்தான். ஆகவமல்லன் அனுப்பிய ஒற்றரைப் பிடித்து அவர் மார்பில் ஆகவமல்லன் அஞ்சி ஓடிய நிலைமை அழகாக எழுதித் துரத்தி விட்டான். மேலைச் சாளுக்கியரின் சிறுதுறை, பெருந்துறை, தெய்வ வீரமாசி ஆகிய நீர்த்துறைகளில் தன் பட்டத்து யானையைக் குளிப்பாட்டினான். வராகக் குன்றில் புலி முத்திரை பொறித்தாள். மீண்டும் ஆகமவல்லன் சோழரை எதிர்த்தான். அவன் தலைவனான நுளம்பன், காளிதாசன், சாமுண்டன், கொம்மய்யன், வில்லவராசன் புறங்காட்டி ஓடினர். கூர்ச்சரமன்னன் கொல்லப்பட்டான். உப்பளர் தோற்றனர். அடைக்கலம் புகுந்தவர்க்கு அரசினை நல்கினான். இரட்டபாடிக்கு எரியூட்டினான். ஆகவமல்லனால் அனுப்பப்பட்டுச் சோழர் புகழ்பாடி வந்த இருவருள் ஒருவனுக்குப் பெண்ணுடை உடுத்தி ஆகவமல்லி என்று பெயர் சூட்டினான். மற்றவனுக்கு ஐங்குடுமி வைத்து ஆகவமல்லன் எனப் பெயர் சூட்டி அவமானப்படுத்தினான். மீண்டும் படையெடுத்து வந்த ஆகவமல்லனைத் தலைநகர் கலியாணபுரம் வரைச் சென்று தாக்கினான். அழித்துப் புலிப்பொறி நாட்டினான். இவ்வெற்றியால் விஜய ராசேந்திரன் என்றும் சிறப்புப் பெயரோடு வீராபிஷேகம் செய்து கொண்டான். இறுதியில் அசுவமேதயாகம் செய்தான். இதுவே மெய்க்கீர்த்திகள் கூறும் செய்திகளாகும்.

**ஓம்படைக் கிளவி :**

இது முடிவாக அமைந்திருக்கும் பகுதியாகும். கடவுள் நினைவோடு கடவுள் காக்க வேண்டும் என்று கூறப்படுகின்ற சொற்களே ஓம்படைக்கிளவி எனப்படுகிறது. அவற்றுள் சில

''இங்கே ஸ்ரீமாஹேச்வர ரசைக்ஷ''

''இது ஸ்ரீ வைஷ்ணவ ரக்ஷை''

இவ்வறம் காத்தார் அடிஎன் தலைமேலது

''அறம் மறவற்க''

''அறமல்லது துணையில்லை''

ஓம்படைக்கிளவிக்கு மறு தலையாகச் ''சாசனத்தின் தன்மைக்குப் புறம்பாக நடப்பவர்க்குப் பழிசேரும்'' என்று அச்சுருத்தும் தொடர்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

(எ.கா.)

இதற்குத் தீங்கு செய்வோன் வழி அறுக''

‘‘இது விலக்குவான் கங்கையிடை குமரியிடை

குரால் பசு (காராம்பசு) கொன்றாம் செய்த பாவம் கொள்வான்;

அறம் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்பதற்கு நயந்தும், அச்சுறுத்தியும் ஓம்படைக் கிளவிகள் அமைந்துள்ளன.

கல்வெட்டின் இறுதிப் பகுதியில் அமையும். அப்பகுதியில் காப்புச் சொல்லாக ‘‘இவ்வறம் காத்தார் திருப்பாதம் என் தலை மேலன’ என்றும் ‘அறம் மறவற்க’ என்றும்; அறமல்லது துணை இல்லை என்றும் பல்வகைத் தொடர்களைக் காணலாம்.

இவையேயன்றி ஒருவர் செய்யக் கூடிய அறச் செயலைத் தடுப்பவர்களும், அவ்வறத்துக்குத் தீங்கு நினைப்பவர்களும் அடையும் பழி பாவங்களையும் இக்கல்வெட்டுகளில் பொறித்துள்ளனர்.

அ. ஒருவனுக்கும் ஒருத்திக்கும் பிறந்தானும் அல்லாதானாய்;

ஒருவர் செய்யும் அறச் செயலைத் தடுப்பவன் நல்ல தந்தைக்கும், தாய்க்கும் மகனாகப் பிறந்திருக்க மாட்டான் என்றும்,

ஆ. மாறுவான் சிவத்துரோகியுமாய் கோமாங்சத்தைத் தின்னானுமாய்

சிவபெருமானுக்கு எதிரியானவன் (இறைவன் செயலுக்கே எதிரானவன்) என்றும், நாள்தோறும் பசுவின் இறைச்சியை உணவாக உண்பவன் ஆவான் என்றும்

இ. கெங்கையிடை குமரியிடை குரால் பசுவைக் கொன்றான் பாவங் கொள்வான்:

கங்கை நதிக்கும், கன்னியாகுமரிக்கும் இடைப்பட்ட புண்ணிய பூமியில் கன்று ஈனும் நிலையில் உள்ள பசுவைக் கொன்ற பாவத்தை அடைவான் என்றும் ஓம்படைக் கிளவித் தொடர்கள் விளக்குகின்றன.

**பயிற்சி வினாக்கள் :**

**ஒரு பக்க வினாக்கள் :**

1. மங்கலச் சொல் என்றால் என்ன?
2. ஓம்படைக் கிளவி என்றால் என்ன?
3. கொடை பற்றிக் கூறும் கல்வெட்டுக்கள் யாவை?

4. மெய்க்கீர்த்தி – குறிப்பு வரைக.

**மூன்று பக்க வினாக்கள் :**

1. வரலாற்றுக் கல்வெட்டுக்களை விவரிக்க.
2. கொடை பற்றிக் கூறும் கல்வெட்டுச் செய்திகளை விளக்குக.
3. மெய்க்கீர்த்தியின் தோற்றமும், வளர்ச்சியும் குறித்து ஒரு கட்டுரை வரைக.

## அலகு 3
## செப்பேடுகள்

பழங்காலத்தில் கற்களில் எழுத்துக்களைப் பொறித்தது போல உலோகத் தகடுகளிலும் எழுத்துக்களைப் பொறித்துள்ளார்கள். பித்தளை, செம்பு, வெள்ளி போன்ற பலவகையான உலோகத் தகடுகள் பயன்பட்ட போதிலும் செப்புத் தகடுகளே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதால் இவைகள் செப்பேடுகள் என்ற பெயரால் குறிக்கப்படுகின்றன. அரசனது ஆணையையோ அல்லது இரு தரப்பினருக்குள் ஏற்படுகின்ற ஒரு உடன்பாட்டையோ பழங்கால மக்கள் செப்பேடுகளில் எழுதி வைத்துள்ளனர். அவர்கள் செப்பேடுகளில் எழுதியதன் காரணம் அது நீண்ட காலம் நிலைத்திருக்கும் என்று கருதியதேயாகும்.

உத்திரபிரதேசத்திலுள்ள சோகௌரா என்ற இடத்தில் கிடைத்துள்ள பித்தளைத் தகட்டின் எழுத்துக்கள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று கூறப்படுகிறது. சங்க காலத்தில் இறையனார் செய்த அகப்பொருளின் அறுபது சூத்திரங்கள் மூன்று செப்பேடுகளில் எழுதப்பட்டு ஆலவாய் கோவிலில் இருந்தது என்று அந்த நூலின் உரை கூறுகிறது. இதிலிருந்து செப்பேட்டில் எழுதப்படும் பழக்கம் பழங்காலத்திலேயே ஏற்பட்டு விட்டது என்று தெரிகிறது.

ஒரு சில கல்வெட்டுகளில் ஒரு கொடையைப் பற்றிக் குறிப்பிட்டுவிட்டு அதைச் ‘‘செம்பிலும், சிலையிலும் வெட்டுவித்துக் கொள்க’’ என்ற தொடர் காணப்படுகிறது. இதனால் கல்வெட்டின் பிரதிகள் செப்பேட்டிலும் பொறிக்கப்பட்டிருந்தன என்று தெரிகிறது. ஷெர்கம் என்ற இடத்திலுள்ள கல்வெட்டும், உதயாதித்தனின் செப்பேடும் ஒன்றாக அமைந்திருப்பது இச்செய்தியை உறுதி செய்கிறது.

செப்பேடுகள் பெரும்பாலும் பனை ஓலையின் வடிவில் நீண்ட சதுர வடிவில் காணப்படுகின்றன. அதன் இடது புறத்தில் துளையிட்டு செப்பு வளையத்தில் கோர்க்கப்பட்டுள்ளன.

**பல்லவர் செப்பேடுகள் :**

தமிழக வரலாற்றில் சங்க காலத்தை அடுத்து பல்லவர் காலம் இடம் பெறுகிறது. இக்காலம் கி.பி. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு வரை எனலாம். பல்லவர்களை அவர்கள் வெளியிட்டுள்ள செப்பேடுகளில் காணப்படுகின்ற மொழியைக் கருத்திற் கொண்டு மூன்று வகையாகப் பிரிப்பர். வரலாற்றாசிரியர்கள், பிராகிருத மொழியைச் செப்பேடுகளில் கையாண்ட பல்லவர்கள் என்றும், சமஸ்கிருத மொழியைக் கையாண்ட பல்லவர்கள் என்றும், சமஸ்கிருதத்தையும், தமிழையும் கலந்து கையாண்ட பல்லவர்கள் என்றும் அவர்களைக் கூறுவர். பிராகிருத மொழியையும், சமஸ்கிருத மொழியையும் தங்களது செப்பேடுகளில் கையாண்ட பல்லவர்கள் கி.பி. 3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 6 ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி புரிந்தோராவர். சமஸ்கிருதத்தையும், தமிழையும் செப்பேடுகளில் கையாண்ட பல்லவ மன்னர்கள் கி.பி. 6 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு வரை ஆண்டிருக்கின்றனர்.

**செப்பேடும், மொழியும் :**

பிராகிருத மொழியில் வெளியிட்ட செப்பேடுகள் மூன்று கிடைத்துள்ளன. இவைகளில் மிகவும் பழமையானது மயிதவோலு செப்பேடு மற்ற இரண்டு ஹிரஹடகல்லி குணபதேயம் ஆகிய செப்பேடுகள் ஆகும். இந்த மூன்று செப்பேடுகளுள்ளும் மயிதவோலு செப்பேடு மட்டும்தான் முழுவதுமாகப் பிராகிருத மொழியில் எழுதப்பட்டிருக்கிறது. மற்ற இரண்டு செப்பேடுகளிலும், பிற்பகுதியில் உள்ள மங்கல வாசகம் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டுள்ளது.

முழுவதும் சமஸ்கிருத மொழியில் எழுதப் பெற்ற செப்பேடுகள் மொத்தம் 17 உள்ளன. முற்பகுதியில் சமஸ்கிருதமும், பிற்பகுதியில் தமிழும் கலந்து எழுதப் பெற்ற செப்பேடுகள் 9 கிடைத்திருக்கின்றன.

**பிராகிருத மொழிச் செப்பேடுகள் :**

பிராகிருத மொழியில் உள்ள மூன்று செப்பேடுகளுமே சிவஸ்கந்தவர்மனைச் சேர்ந்தவை என்று ஒரு சாரார் கருதுகின்றனர். திரு.டி.என். சுப்பிரமணியம் அவர்கள் பிராகிருத மொழியில் உள்ள குணபதேயச் செப்பேட்டை பிற்காலத்தில் ஆண்ட வேறொரு ஸ்கந்தவர்மன்

காலத்தில் வெளியிடப்பட்டிருக்கலாம் என்று கருதுகிறார். அவர் அவ்வாறு கருதுவதற்கு அச்செப்பேட்டின் பிற்பகுதியில் சமஸ்கிருத மொழி கையாளப்பட்டிருப்பதும், எழுத்தமைப்பில் வளர்ச்சியேற்பட்டிருப்பதும் காரணங்களாகும் என்று கூறுகிறார்.

இம்மூன்று செப்பேடுகளுமே பல்லவர்களுடைய காலத்தைக் கணிப்பதற்கு உதவுபவனவாக அமையவில்லை. மயிதவோலு செப்பேடு வெளியிடும் போது சிவஸ்கந்தவர்மன் யுவ மஹாராஜனாக இருந்தான் என்பதும், காஞ்சிபுரத்திலிருந்து அச்செப்பேட்டை வெளியிட்டான் என்பதும், பாரத் வாஜ கோத்ரத்தில் பிறந்தவன் என்பதும் பெறப்படுகிறது. அச்சாசனம் தான்ய கட்டத்திலுள்ள அதிகாரிகளுக்கு வெளியிட்டுள்ள கட்டளையை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கிறது.

ஹிரஹடஹல்லிச் செப்பேடு சிவஸ்கந்தவர்மனை ராஜாதி ராஜன் என்றும், பாரத்வாஜ கோத்ரத்தில் பிறந்தவன் என்றும், அக்னிஷ்டோம, வாஜபேய, அச்வமேத யாகங்களைச் செய்தவன் என்றும் தெரிவிக்கிறது. சிவஸ்கந்தவர்மன் காஞ்சிபுரத்தில் இருந்து கொண்டு தன்னுடைய அதிகாரிகளுக்குக் கட்டளை இடுவதாக அமைந்திருக்கிறது.

குணபதேயச் செப்பேடு விஜயஸ்கந்தவர்ம மஹாராஜாவின் காலத்தில் யுவமஹாராஜன் ஸ்ரீ விஜயபுத்தவர்மனின் மனைவியும், அங்குதன் என்று முடியும் பெயரைக் கொண்ட ஒருவனின் தாயுமான சாருதேவி நிலக்கொடை அளித்ததாகத் தெரிகிறது.

இம்மூன்று செப்பேடுகளும் அவைகளை வெளியிட்ட மன்னர்களின் சிறப்பையோ அல்லது அவர்களின் முன்னோர்களின் சிறப்பையோ தெரிவிக்கவில்லை. ஆனால் அக்காலத்தில் நிலவிய ஒரு சில அரசியல், சமுதாய சூழ்நிலைகளைக் கூறுகின்றன.

**பிராகிருதச் செப்பேடுகளின் எழுத்து :**

இம்மூன்று செப்பேடுகளும், ஓரளவு வளர்ச்சியுற்ற பிராமி எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன. இந்த எழுத்துக்கள் நாகார்ஜுன கொண்டாவில் காணப்படும் எழுத்துக்களைப் பெரும்பாலும் ஒத்துள்ளன என்று கூறுவர்.

மயிதவேலு செப்பேட்டையும், ஹரிஹடஹல்லிச் செப்பேட்டையும் வெளியிட்ட மன்னன் ஒருவனே என்றும், அவன் சிவஸ்கந்தவர்மன்தான் என்றும் அறுதியிடுவர் குணபதேயச் செப்பேட்டில் குறிக்கப்பெறும் விஜயஸ்கந்தவர்மனும், சிவஸ்கந்தவர்மனும் ஒருவன்தான் என்பர் ஒரு சாரார். திரு. டி.என். சுப்பிரமணியம் அவர்கள் குணபதேயச் செப்பேட்டில் உள்ள எழுத்தமைதியைக் கருத்திற் கொண்டு விஜயஸ்கந்தவர்மன், சிவஸ்கந்தவர்மனின்றும் வேறானவன் என்றும், அவன் பிற்காலத்தில் ஆட்சி செய்தவனாக இருத்தல் வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். திரு.டி.சி. சர்க்கார், இவ்விஜயஸ்கந்தவர்மனும் முதலாம் ஓங்கோடுச் செப்பேட்டில் குறிக்கப்படும் ஸ்கந்தவர்மனும் ஒருவனாக இருக்கலாம் என்று கருதுகிறார்.

**சமஸ்கிருத மொழிச் செப்பேடுகள் :**

சமீபத்தில் கிடைத்துள்ள சிக்மகலூர் செப்பேடும் சமஸ்கிருத மொழியைக் கையாண்ட பல்லவர்கள் காலத்தில் வெளியிடப்பட்டவையாகும். சமஸ்கிருத மொழிச் செப்பேடுகளில் காணப்பெறும் எழுத்து வடிவம் சிலவற்றில் வளர்ச்சியடைந்த பிராமி எழுத்தாகவும், பலவற்றில் பல்லவ கிரந்த எழுத்தாகவும் காணப்படுகின்றன.

வீரவர்மனின் மகனான விஜயஸ்கந்தவர்மனைச் சேர்ந்ததாக ஒரு செப்பேட்டையும் (ஓங்கோடு) விஜயஸ்கந்தவர்மனின் மகனான சிம்மவர்மனைச் சேர்ந்ததாக மூன்று செப்பேடுகளையும் (வசந்தம், நெடுங்காரயம், உருவப்பள்ளி) யுவமஹராஜா விஷ்ணு கோபவர்மனின் மகனான சிம்மவர்மனைச் சார்ந்ததாக ஆறு செப்பேடுகளையும் (தர்சி, சிக்மகலூர், பீசிரம், மாங்களுர், விழவெட்டி, ஓங்கோடு) பிற்காலத்தைச் சார்ந்ததாக மூன்று செப்பேடுகளையும் (சரா, சேந்தலூர், ஹெஸக்கோட்டை) கூறலாம்.

இச்செப்பேடுகளில் பெரும்பாலானவற்றில் செப்பேட்டை வெளியிட்ட மன்னரது பெயரையும் அவனது தந்தை, பாட்டன், கொள்ளுப்பாட்டன் ஆகியோர்களுடைய பெயர்களையும் காண முடிகின்றன. ஆதலால் ஓரளவுக்குப் பல்லவர்களின் பரம்பரையை உணர முடிகிறது. மேலும் அரசியல், சமுதாயச் சூழ்நிலைகளைப் பற்றி ஓரளவு விரிவாகப் புலப்படுத்துகின்றன. அக்காலத்தில் நிலவிய நாட்டுப் பிரிவு, அரசியல், அதிகாரிகள், பொருட்களுக்கும், மற்றவற்றுக்கும் விதிக்கப்பட்டிருந்த வரி

வகைகள் மக்களின் பழக்க வழக்கங்கள் ஆகியவை பற்றித் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது.

**ஆரியமும், தமிழும் அமைந்த செப்பேடுகள் :**

சமஸ்கிருதத்தில் முற்பகுதியும், தமிழில் பிற்பகுதியும் கலந்து எழுதப் பெற்ற செப்பேடுகள் கி.பி. 5 ஆம் நூற்றாண்டின் இறுதியில் கிடைக்கின்றன. இவைகளில் மிகவும் பழமையானது சிம்மவர்மன் காலத்திய பள்ளங்கோயில் செப்பேடு. இதற்கடுத்து முதலாம் பரமேஸ்வரவர்மனின் கூரம் செப்பேட்டைக் கூற வேண்டும். அடுத்து நந்திவர்மப் பல்லவ மன்னனின் காலத்தில் வெளியிடப்பட்ட காசாக்குடி புல்லூர், தண்டந்தோட்டம், கொற்றங்குடி ஆகியவைகளையும், மூன்றாம் நந்திவர்மனின் காலத்தில் வெளியிடப்பட்ட வேலூர் பாளையம் செப்பேட்டையும் கூறலாம். முதலாம் பரமேஸ்வரவர்மனின் உன்னகுரவயம் செப்பேடும் இரண்டாம் நரசிம்மனின் ரேயூருச் செப்பேடும், நந்திவர்மப் பல்லவ மன்னனின் உதயேந்திரம் செப்பேடும் சமஸ்கிருதத்தில் மட்டும் எழுதப் பெற்றிருந்த போதிலும் அவை மேற்கூறிய மற்ற சமஸ்கிருத - தமிழ்ச் செப்பேடுகளின் காலத்தைச் சார்ந்தவை என்ற காரணத்தினால் அவற்றையும் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. ஸ்கந்த சிஷ்யனின் ராயக்கோட்டைச் செப்பேடு சமஸ்கிருதம், தமிழ் ஆகிய பகுதிகளைக் கொண்டதாக உள்ளது. இந்த ஸ்கந்தசிஷ்யன் யாரென்று இன்றும் முடிவாகவில்லை. திரு. டி. என். சுப்பிரமணியம் அவர்கள் இவன் சித்ரமாயன் காலத்திலிருந்த வேறொரு பல்லவனாக இருக்கலாம் என்று கூறினார்.

**பல்லவ செப்பேடும், இலக்கியமும் :**

மேற்குறிப்பிட்ட சமஸ்கிருதம் - தமிழ் மொழிகளால் எழுதப் பெற்றுள்ள செப்பேடுகளால்தான் பல்லவர்களின் வரலாற்றைத் தெள்ளத் தெளிவாகஅறிய முடிகிறது. சிம்மவர்மனின் காலம் முதல் தொடர்ச்சியாகப் பல்லவர்களின் பரம்பரையை நன்றாக அறுதியிட்டுக் கூறக்கூடிய செய்திகளை இச்செப்பேடுகளின் சமஸ்கிருதப் பகுதி தெரிவிக்கின்றன. மூன்றாம் நந்திவர்மனின் வேலூர் பாளையச் செப்பேடு பல்லவ வம்சத்தின் வரன்முறையைக் கூறுகையில் "அசோகவர்மன் போன்ற மன்னர்களுக்குப் பிறகு அந்த வம்சத்திலே காலபர்துரு பிறந்தான். அவன் மகன் சூதபல்லவன் அவனுக்குப் பிறந்தவன் வீரக்கூர்ச்சன். அவன் நாகராஜன் மகளுடைய கைத்தலத்தோடு அரசையும் பற்றினான் என்று தெரிவிக்கிறது. இந்த

செய்தியும் தமிழ் இலக்கியங்களிலே காணப்படும் ‘‘சோழ அரசனான கிள்ளி நாகலோகம் சென்று, நாகக் கன்னிகை ஒருத்தியை மணந்து, சிறிது காலம் அங்கேயே வாழ்ந்தான். அவள் தனக்குப் பிறந்த பிள்ளைக்குத் தொண்டைக் கொடி ஒன்றை அடையாளமாகக் கட்டி அவளை, தந்தையான சோழ அரசனிடம் சேர்ப்பிப்பதற்குக் கப்பல் மூலம் அனுப்பி வைத்தான். நடுக்கடலில் கப்பல் மூழ்கியதால் கரை சேர்ந்த அந்தக் குழந்தையைத் தொண்டைக் கொடியின் அடையாளம் கொண்டு சோழ மன்னன் எடுத்து வளர்த்துத் தன் இராச்சியத்தின் ஒரு பகுதிக்கு அரசனாக முடிசூட்டி வைத்தான்’’ என்ற செய்தியும் ஒத்து வருவதை எடுத்துக் காட்டாகக் கொண்டு பல்லவர்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று ஒரு சாரார் கூறுவர். கல்வெட்டுகள் பற்றி விவரிக்கும் இடத்தில் இது பற்றி விரிவாகக் காணலாம்.

**செப்பேடு கிடைத்த பகுதிகள் :**

பிராகிருத மொழியில் உள்ள செப்பேடுகள் மூன்றும், மஞ்சிக் கல்லு தூண் கல்வெட்டும் தமிழகத்துக்கு வடக்கேயுள்ள ஆந்திர, கர்நாடகப் பகுதியிலேயே கிடைத்திருக்கின்றன. ஆனால் இந்தச் செப்பேடுகள் அனைத்தும் அரசன் காஞ்சிபுரத்திலிருந்தே ஆணையிட்டான் என்று தெரிவிக்கின்றன. ஆகவே இச்செப்பேடுகள் ஆந்திர கர்நாடகப் பகுதியில் கிடைப்பதற்குக் காரணம். அவை கொடையைப் பெற்றுக் கொண்டோர்கள் வைத்திருந்த செப்பேட்டுப் பிரதிகளாக இருக்கலாம். இதிலிருந்து ஒன்று புரிகிறது. அதாவது சிம்மவர்மன், சிவஸ்கந்தவர்மன் ஆகியவர்களின் ஆட்சிப் பகுதியில் ஆந்திரம், கர்நாடகப் பகுதிகளில் சில பகுதிகள் அடங்கியிருந்தன என்பதாகும்.

சமஸ்கிருத மொழியில் கிடைத்துள்ள பெரும்பாலான செப்பேடுகளும் ஆந்திரப் பகுதியிலிருந்தே கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாகத் திரு.ஆராவமுதன் என்பவர் காஞ்சிபுரம் என்னும் ஊர், ஆந்திரப் பகுதியில் காணப்படும் ஊராகும் என்றும் அங்குதான் முற்காலப் பல்லவர்கள் தங்கியிருந்து ஆணைகளை வெளியிட்டார்கள் என்றும் கருத்துத் தெரிவித்தார். ஆனால் இக்கருத்து ஏற்புடையதாக யாரும் ஒப்புக் கொள்ளவில்லை. முற்காலப் பல்லவர்கள் ஆந்திர, கர்நாடகப் பகுதிகளில் தென் பகுதியையும், தொண்டை மண்டலத்தையும் ஆண்டிருந்தவர்களாகக் கருதப்படல் வேண்டும்.

**தமிழ் எழுத்தில் எழுதக் காரணம் :**

முற்பகுதியில் சமஸ்கிருதத்திலும், பிற்பகுதியில் தமிழ் மொழியிலும் எழுதப் பெற்ற செப்பேடுகள் அனைத்தும் தமிழகத்திலேயே கிடைத்துள்ளன. பல்லவர்களது ஆட்சி எல்லை தமிழகத்தின் தெற்குப் பக்கத்திற்கு விரிவடைய விரிவடைய செப்புப் பட்டயங்களில் தமிழ் மொழியில் கொடை பற்றிய செய்தியை எழுத வேண்டுவது இன்றியமையாததாயிருக்கும் போன்று தெரிகிறது.

**செப்பேடுகளில் சில வேறுபாடுகள் :**

தமிழ் நாட்டில் கிடைத்துள்ள பல்லவர் செப்பேடுகளுக்கும், ஆந்திர, கர்நாடகப் பகுதியில் கிடைத்துள்ள செப்பேடுகளுக்கும் சில வகையில் வேறுபாடுகள் காண முடிகின்றன. ஆந்திரப் பகுதியிலே கிடைக்கின்ற சாசனங்கள் கொடை அளித்த மன்னனையும் சேர்த்து நான்கு தலைமுறையினரைத்தான் தெரிவிக்கின்றன. தமிழகத்தில் கிடைத்துள்ள செப்பேடுகளில் கொடையளித்த மன்னனையும், அவனது முன்னோர்களையும், புராண பரம்பரையையும் கூறப்பட்டிருக்கும்.

செப்பேடுகளின் முத்திரைகளிலும் சில வேறுபாடுகளைக் காணக் கூடும். ஆந்திரப் பகுதியில் கிடைத்துள்ள செப்பேடுகளின் முத்திரைகளில் அஷ்ட மங்கலங்களின் உருவங்கள் காணப்படுவதில்லை. நந்தியைத் தவிர பிறைச் சந்திரன் சூரியன் அல்லது நட்சத்திரம், ஸ்ரீவத்ஸம் போன்ற உருவம் பெரும்பாலும் காணப்படும். பெரும்பாலானவற்றில் கொடையளித்த மன்னனின் பெயர் எழுதப்பட்டிராது. அவ்வாறு எழுதப் பெற்றிருந்தாலும், முத்திரையின் நடுவில் ஒரு வரியில் அரசனின் பெயர் மட்டும் பொறிக்கப்பட்டிருக்கும். தமிழகத்தில் கிடைத்துள்ள செப்பேடுகளின் முத்திரைகளில் படுத்திருக்கும் நந்தியின் உருவத்தோடு எண்மங்கலப் பொருட்களின் உருவங்களும், சூரியர், சந்திரர் உருவங்களும் புடைப்புச் சித்திரங்களாகக் காணப்படும். அவ்வுருவங்களைச் சுற்றி விளிம்பின் உட்புறமாக அரசனின் முத்திரை வாசகம் ஒரு வரியில் எழுதப் பெற்றிருக்கும்.

இவ்வாறு சில வேறுபாடுகளைக் கண்டுணர்ந்த திரு. டி.என். சுப்பிரமணியம் அவர்கள் ஆந்திரப் பகுதியில் கிடைத்துள்ள செப்பேடுகளைப் பற்றி கீழ் வருமாறு குறித்துள்ளார். ‘‘ஜிதம் பகவதா’’ என்று ஆரம்பித்து,

தானத்தை வழங்கிய அரசனுடைய முப்பாட்டன், பாட்டன், தந்தை ஆகிய மூவரையும் சேர்த்து நான்கு தலைமுறைகளைப் பற்றியே கொடுக்கப் பட்டிருக்கும். அவர்களுடைய புகழும், ஒரே முறையில் குறிப்பிட்ட சில சொற்றொடர் கொண்டு அமைந்திருக்கும். கடைசியிலேயே காணும் பல அருதி சுலோகங்களைத் தவிர மற்றப் பகுதி உரைநடையாகவே காணப்படும். அதை நோக்கினால், முன்னதாகவே அமைக்கப்பட்ட ஒரு வாசகத்தில் சந்தர்ப்பத்தையொட்டி, அரசனுடைய பெயரையும், அவன் முன்னோர்களுடைய பெயரையும் அந்தந்த இடங்களில் இட்டு நிரப்பி அதைப் பூர்த்தி செய்து எழுதப் பட்டது என்பது தெளிவாக விளங்கும்.

**கொடை பற்றிக் கூறும் பகுதி :**

விஷ்ணு புராணத்தில் கோடிட்டுக் காட்டியுள்ள விதிகளை நன்கு கடைப்பிடித்து எழுதியுள்ள செப்பேடுகள் இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் அதிகமாக கிடைக்கின்றன. தமிழகத்தில் கிடைத்துள்ள பல்லவர்களின் செப்பேடுகளில் சமஸ்கிருதம், தமிழ் ஆகிய இரு பகுதிகள் உள்ளன என்று முன்னறே குறிப்பிடப்பட்டது. இருப்பினும் தமிழ்ப் பகுதியில்தான் கொடையைப் பற்றிய செய்தி காணப்படுகிறது. தமிழ்ப் பகுதியை முன்னர் எழுதிக் கொண்டு, பின் அதையொட்டி சமஸ்கிருதம் பகுதி தனியாக இயற்றப் பட்டிருக்கலாம் என்று தெரிகிறது.

**ஸமஸ்கிருதப் பகுதி அமைப்பு முறை :**

ஸமஸ்கிருதப் பகுதி கடவுள் வாழ்த்தோடு ஆரம்பித்து கொடை அளிப்பவரின் குலத்தோற்றம், முன்னோர்களின் பட்டியல், அவர்களது வீரச்செயல்கள் ஆகியவற்றை தந்து விட்டு, கொடை அளிப்பவரின் சிறப்பு, அவனது இருப்பிடம், ஆட்சியாண்டு ஆகியவற்றைக் கூறி, கொடை, பெறுபவனின் இருப்பிடம், அவனது குலம், கோத்திரம் ஆகியவை தெரிவித்து கொடையளிக்கப்பட்ட பொருளை விவரிக்கும் தன்மையில் அமைந்திருக்கும். இப்பகுதியின் உதவியால்தான் மன்னனின் பரம்பரையையும், அவர்கள் காலத்தில் ஆண்ட மன்னர்களையும் அவர்கள் புரிந்த போர்ச் செயல்கள், அவர்கள் செய்த அறக்கொடைகள் ஆகியவற்றையும் உணர்ந்து கொள்ள முடிகிறது.

**ஸமஸ்கிருத பகுதியின் சிறப்பு :**

இப்பகுதியில் மன்னர்கள் பல தெய்வங்களோடு ஒப்பிட்டு பேசப்படுவர். அவ்வாறு பேசப்படும் போது மன்னர்களுடைய குணநலன்களையும், மன்னர்களின் தேவியர்களையும் தெரிந்து கொள்ள முடிகிறது. தேவிமார்கள் எந்த வம்சத்தைச் சேர்ந்தவர்கள், எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற செய்திகளையும் புரிந்து கொள்ளலாம்.

**தமிழ்ப் பகுதியின் தன்மை :**

தமிழ்ப் பகுதியில் எந்த மன்னர் கொடை அளிக்கிறானோ அவனைக் குறிப்பிட்டு, அவனது இத்தனாவது ஆட்சியாண்டில், இந்தப் பகுதியில் அடங்கிய, இந்த ஊர் இந்தப் பகுதியைச் சேர்ந்த இன்னாருக்குக் கொடை அளிக்கப்படுகிறது என்று குறிக்கப்பட்டிருக்கும். அவ்வாறு கொடை அளிக்கப் பெற்றது நிலமாக இருப்பின் அரசனுக்குச் செலுத்தப்பட வேண்டிய எல்லாவித வரிகளிலிருந்தும் விலக்குப் பெற்றதாகக் குறிக்கப்பட்டிருக்கும். அத்தோடு அந்நிலத்துக்கு எந்த வாய்க்காலின் மூலம் நீர் பாய்ச்சப் பெறுதல் வேண்டும் என்பதும் தெரிவிக்கப் பெற்றிருக்கும். ஆந்திரப் பகுதியில் கிடைத்துள்ள பல்லவர் செப்பேடுகளில் தமிழ்ப்பகுதி காணப்படவில்லை. ஆதலால் கொடையளிக்கப் பெற்ற நிலத்தின் எல்லை அவைகளில் தரப்பட வில்லை.

**செப்பேட்டில் மங்கலச் சொற்கள் :**

மயிதவோலு, ஹிரஹடஹல்லி, குணபதேயச் செப்பேடுகள், ‘சித்தம்’ என்ற மங்கலச் சொல்லைக் குறித்துவிட்டு மற்ற செய்தியைத் தெரிவிக்கின்றன. சித்தம் என்றால் ‘காரியத்தில் வெற்றி கிட்டட்டும்’ என்று பொருள். இந்தச் சொல் காத்யாயனம் காலத்தில் வழக்கிலிருந்ததாகத் தெரிகிறது. இந்தச் செப்பேடுகளுக்குக் காலத்தால் பிந்தியதான சமஸ்கிருதச் செப்பேடுகளில் ‘ஜிதம் பகவதா’ என்ற சொல்லோடு ‘ஸ்வஸ்திஸ்ரீ’ என்ற மங்கலச் சொல் காணப்படுகிறது. ‘ஸ்வஸ்திஸ்ரீ’ என்ற சொல்லுக்கு மங்களம் உண்டாகட்டும் என்று பொருள் கூறப்பட்டு வருகிறது.

இதைவிட மிகப்பொருத்தமான சொல் “அருளிச்செயல்” என்ற சொல் தமிழக் கல்வெட்டுகளில் காண முடிகிறது. வேலூர்ப் பாளையம் செப்பேட்டின் தமிழ்ப் பகுதியில் ஸ்வஸ்திஸ்ரீ நமஸ்ஸிவாய’ என்ற மங்கலச் சொல்

காணப்படுவது இந்த ஒரு செப்பேட்டில் தான். இச்செப்பேடுகளின் தமிழ்ப்பகுதி பெரும்பாலும் ‘கோவிசைய’ என்றே ஆரம்பமாகின்றன. ராயக்கோட்டை, புல்லூர் செப்பேடுகளில் ‘ஸ்வஸ்திஸ்ரீ கோவிசைய’ என்று ஆரம்பிக்கப்படுகிறது. காசாக்குடி செப்பேட்டின் தமிழ்ப்பகுதி ‘கோன் ஓலை’ என்று ஆரம்பமாகிறது. இம்முறை பிற்காலத்தில் கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் ‘சோழகோன் ஓலை’ என்று காணப்படுகிறது.

பல்லவர் காலச் செப்பேடுகளில் பள்ளன் கோவில் செப்பேடுகள், கூரம் செப்பேடுகள், உதயேந்திரம் செப்பேடுகள், கசக்குடி செப்பேடுகள், பாகூர் செப்பேடுகள், புல்லூர் செப்பேடுகள் போன்றவை பல்லவர்களால் அளிக்கப்பட்ட சில முக்கியச் செப்பேடுகளாகும். இவற்றில் கூரம் செப்பேடுகள் பற்றி விரிவாகக் காணலாம்.

**கூரம் செப்பேடுகள் கண்டுபிடிக்கப்படுதல் :**

செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சிபுரத்தின் பக்கத்திலுள்ள கூரம் என்ற ஊரில் உள்ள கிராம தர்மகர்த்தாவிடமிருந்து 19ம் நூற்றாண்டின் இறுதியில் கூரம் செப்பேடுகள் விலைக்கு வாங்கப்பட்டன. எனவே இது கிடைத்த இடத்தின் பெயரால் கூரம் செப்பேடுகள் என்று அழைக்கப்படுகிறது. இந்தச் செப்பேடுகள் தற்போது சென்னை அருங்காட்சி சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

கூரம் செப்பேடுகள் ஒரு வளையத்தில் கோர்க்கப்பட்ட ஏழு மெல்லிய செப்பேடுகளைக் கொண்டது. கடைசி ஏட்டில் ஒரு பாதியே நமக்குக் கிடைத்துள்ளது. முதல் ஏழு, ஐந்தாம், ஆறாம் ஏடுகள் பாசிபிடித்து அழுக்கடைந்திருப்பதால் அதில் சில பகுதிகளை சரியாக வாசிக்க முடியவில்லை. இந்த ஏழு ஏடுகளைக் கோர்த்திருந்த வளையத்தின் முத்திரை சுமார் 2 ½ அங்குலம் குறுக்களவு கொண்ட வட்ட வடிவமான முகப்பைக் கொண்டது. அதில் இடதுபுறம் நோக்கி ஒரு ஆசனத்திலே படுத்திருக்கும் ரிஷபத்தின் உருவம் காணப்படுகிறது. அதன் மேலே பிறை சந்திரனும், லிங்கமும் காணப்படுகின்றன. முத்திரை விளிம்பைச் சுற்றி வட்டமாக எழுத்துக்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

இந்த கூரம் செப்பேடுகளை பரிசோதித்து அதிலுள்ள வாசகங்களை ஆராய்ச்சி செய்தார் புகழ்பெற்ற கல்வெட்டாய்வாளர் டாக்டர் ஹீல்ட்ஸ். இந்த செப்பேடு சாசனம் தென்னிந்திய சாசனங்கள் என்ற நூலின் முதல் தொகுதியில் 144 – 145ம் பக்கங்களில் டாக்டர் ஹீல்ட்சால் வெளியிடப்பட்டது. அதன் மூன்றாம், நான்காம் ஏடுகளில் உள்ள பகுதி ‘எபிகிராபிய இந்திகா என்பதின் பதினேழாம் தொகுதியில் 340 – 344ம் பக்கங்களில் அவரால் மறுபடியும் திருத்தி பதிப்பிக்கப்பட்டது.

பல்லவ மன்னன் முதலாம் நரசிம்மவர்மனின் பேரனும், இரண்டாம் மகேந்திர வர்மனின் மகனும் ஆன முதலாம் பரமேசுவர மன்னனால் அளிக்கப்பட்ட ஆணையை கூரம் செப்பேடு கூறுகிறது. இந்தச் செப்பேட்டின் காலம் ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகும். அதாவது ஏறக்குறைய கி.பி. 675ம் வருடத்தைச் சார்ந்தது ஆகும். கூரம் செப்பேட்டின் முதற்பகுதி சமஸ்கிருதத்திலும், பிற்பகுதி தமிழ் மொழியிலும் பொறிக்கப்பட்டுள்ளன.

**கூரம் செப்பேட்டின் சமஸ்கிருத மொழிப் பகுதி :**

கூரம் செப்பேட்டின் சமஸ்கிருதம் பகுதியில் பல்லவர்களின் வரலாறு விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இந்த சமஸ்கிருதப் பகுதி சிவபெருமானுக்கு வணக்கம் கூறும் இரண்டு சுலோகங்களைக் கடவுள் வாழ்த்தாகக் கொண்டு ஆரம்பமாகிறது. அடுத்த சுலோகம் பல்லவ வம்சத்தின் புகழ்பாடுகிறது. பின்னர் அந்த வம்சத்தின் கால வரன்முறை காணப்படுகிறது. பிரம்மா, அங்கிரஸ், பிரகஸ்பதி, பரத்வாஜர், துரோணர், அசுவத்தாமன், பல்லவன் என்ற முறையில் அது கொடுக்கப்பட்டுள்ளது. அதன்பிறகு வரலாற்றில் இடம் பெற்ற மூவரைப் பற்றி சாசனம் விவரிக்கிறது. சாசனத்தின் கண்டதானம் வழங்கிய முதலாம் பரமேஸ்வரவர்மன், அவனது தந்தை இரண்டாம் மகேந்திரவர்மன், பாட்டன் முதலாம் நரசிம்மவர்மன் ஆகிய மூவரும் ஆவர்.

முதலாம் நரசிம்மவர்மன் உதயகிரியிலிருந்து வரும் சூரிய சந்திரருக்கு உவமானமாகக் கூறப்பட்டுள்ளான். அடுத்தபடியாக அவன் அவிநதன் முதலிய அரசர்களுடைய தலைகளின் கூட்டங்களுக்கு வச்சிராயுதம் போன்றவன் என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறான். இதில் குறிப்பிட்ட அவிநதன் கங்க மன்னனாவான். எனவே கங்க வம்சத்தவர்களில் ஒரு பிரிவினர் காஞ்சிபுரத்து பல்லவர்களை சார்ந்து நிற்கிறார்கள் என அறிந்து கொள்ளலாம்.

அடுத்தபடியாக நரசிம்மவர்மன் சோழர், சேரர், களப்பிரர் மற்றும் பாண்டியர்களை மீண்டும் மீண்டும் முறியடித்தான். சாளுக்கிய அரசன் இரண்டாம் புலிக்கேசியை பரியனம், மணிமங்கலம், சூரமாரம் முதலிய இடங்களில் புறமுதுகிட்டு ஓடச்செய்து ஒவ்வொரு தடவையும் அவன் முதுகான பட்டயத்திலே வெற்றியைக் குறிக்கும் எழுத்துக்களை எழுதினான் என்றும், வாதாபியை அழித்தான் என்றும் இச்சாசனம் விவரித்துக் கூறுகிறது.

முதலாம் நரசிம்மவர்மனின் மகனும், பரமேசுவரரின் தந்தையுமான இரண்டாம் மகேந்திரவர்மனைப் பற்றி வரலாற்று நிகழ்ச்சி எதுவும் சாசனத்தில் காணப்படவில்லை. அடுத்து சமஸ்கிருதப் பகுதியில் சாசனம் வழங்கிய பரமேசுவரவர்மன் மேலைச் சாளுக்கிய மன்னரான முதலாம் விக்கிரமாதித்தனுடன் நடத்திய போர் இருபது சுலோகங்களில் அழகாக வர்ணிக்கப்பட்டுள்ளது. இந்தப் போரின் இறுதியில் பல லட்சம் சேனையைக் கொண்ட விக்கிரமாதித்தன் ஒரு கந்தையால் தன் மானத்தை மறைத்துக் கொண்டு ஓடினான் என்று கூறுகிறது. பரமேசுவரனுடைய யானைக்கு மதிவாரணம் என்றும், குதிரைக்கு அதிசயம் என்னும் பெயர் தமிழ்ப் பகுதியில் விரிவாகவும், தெளிவாகவும் விவரிக்கப்பட்டுள்ளது.

**கூரம் செப்பேட்டின் தமிழ்ப்பகுதி :**

தமிழ்ப்பகுதியில் இரண்டு நிகழ்ச்சிகள் விவரிக்கப்பட்டுள்ளன. ஒன்று கூரத்தில் சிவாலயம் எடுத்தது. மற்றொன்று பரமேசுவர மங்கலம் கிராமத்தை பிரம்மதேயமாக்கியது ஆகும்.

முதலாம் பரமேசுவரவர்மனுக்கு கீழ்ப்படிந்த வித்யாவிநீத பல்லவராசன் என்ற சிற்றரசன் கூரம் என்ற கிராமத்தில் விச்சாவிநத பல்லவ பரமேச்சுரம் என்ற கோவில் கட்டினான். இதற்காகவும் இதனைக் கட்டுவதற்குத் தேவைப்படும் செங்கல் சூளை வைப்பதற்கும் சேர்த்து மொத்தம் ஐந்தே கால் பட்டி நிலம் விலை கொடுத்து வாங்கினான். இது மொத்தம் 6300 குழி நிலமாகும். கோவிலுடன் பாரதம் வாசிக்க ஒரு மண்டபமும் கட்டினான். கோவிலுக்கு அருகே ஒரு ஏரி தோண்டப்பட்டது. அதற்கு பரமேச்சுரதடாகம் என்று பெயர். இதற்கு நீர் கொண்டு வர பாலாற்றிலிருந்து ஒரு கால்வாய் தோண்டப்பட்டது. அதற்கு பெரும்பிடுகு கால் என்று பெயர். மேலும் கோவிலில் வழிபாடு செய்பவர்கள் தங்குவதற்கு மனையும் தோட்டமும்

ஒதுக்கப்பட்டது. மீதி நிலத்தை விளை நிலமாக்கி அவர்களுடைய அநுபோகத்துக்கு அளித்தான்.

இந்தக் கோவிலில் வழிபாடு செய்தவர்க்கும் அவ்வப்போது திருப்பணிகள் செய்வதற்கும் வேதம் ஓதுபவர்களுக்கும் பரமேசுவரவர்மனால் நிலம் கொடுக்கப்பட்டதை இச்செப்பேடு விவரிக்கிறது. மணர் கோட்டத்துப் பன்மா நாட்டு பரமேஸ்வர மங்கலம் என்ற ஊரை இக்கோவிலுக்கு வேண்டிய தேவகருமம், நவகருமம் செய்தவற்கும், பாரதம் வாசிப்பதற்கும், வேதம் ஓதுவதற்கும் பிரம்ம தேயமாக ஒதுக்கினான் பரமேசுவரவர்மன். அதாவது இந்த ஊரின் நிலத்தை இருபத்தைந்து பங்காக்கினான். இதில் கூரத்தில் எழுப்பிய இவன் கோவில் பூஜைத் திருப்பணிக்கு மூன்று பங்கும், கூரத்து மண்டபத்தில் பாரதம் வாசிக்கும் போது தேவைப்படும் தண்ணீருக்கும், விளக்கிற்கு ஒரு பங்கும், மண்டபத்தில் பாரதம் வாசிப்பவருக்கு ஒரு பங்கும், வேதம் ஓதும் பிராமணர்களுக்கு இருபது பங்கும் ஒதுக்கினான்.

**கூரம் செப்பேட்டில் காணப்படும் வரிகள் :**

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வழக்கிலிருந்த பல்லவர் கால வரிகளைப் பற்றி கூரம் செப்பேட்டின் மூலம் நாம் அறியலாம். நிலம் 25 பங்காகப் பிரிக்கப்பட்டதைப் போல அரசனுக்குச் சேர வேண்டிய கீழ்க்கண்ட அனைத்து வரிகளும் 25 பங்குகளாகப் பிரிக்கப்பட்டு அவரவர் பெறும்படி ஆணையிடப்பட்டது. அந்த வரிகள்

1. மனை – குடியிருக்கும் வீட்டு மனைக்காக வழங்கப்பட்ட வரி
2. மனைப்படைப்பு – வீட்டின் கொல்லைப்புறத் தோட்டத்துக்காக வாங்கப்பட்ட வரி
3. ஊராட்சி – ஊராட்சி நடத்துவதற்காக வாங்கப்பட்ட வரி
4. செக்கு – செக்காட்டும் வாணிபரிடம் வாங்கப்பட்ட வரி
5. தறி – தறியில் நெசவு செய்பவரிடம் வாங்கப்பட்ட வரி
6. கூலம் - தானியம் விற்பவரிடம் தானியமாக வாங்கப்பட்ட வரி
7. கத்திக்கானம் - கத்தி முதலான போர்க்கருவிகளை செய்வோரிடம் வாங்கப்பட்ட ஆயுத வரி

இறுதியாக இந்த சாசனத்தை வழங்கிய முதலாம் பரமேசுவர வர்மன் புகழைக் கூறும் சுலோகம் உள்ளது. அதில் அவன் பரதன் சகரன், கர்ணன், யயாதி ஆகிய நான்கு அரசர்களுடன் ஒப்பிடப்பட்டு இருக்கிறான். கூரம் செப்பேட்டில் குறிப்பிடப்படும் வித்தியாவிநீத பல்லவராசன் வேண்டிக் கொள்ள பல்லவ அரசன் பரமேசுவரவர்மன் இந்த ஆணையைப் பிறப்பித்தான் என்று அறிகிறோம். கூரம் ஊரில் அப்போது எடுக்கப்பட்ட கோவிலின் ஒரு பகுதி இன்றும் எஞ்சி உள்ளது. பரமேசுவர தடாகம் என்ற ஏரியையும் பலாற்றிலிருந்து இதற்கு நீர் கொண்டு வரும் கால்வாயையும் இன்றும் காணலாம்.

**பாண்டியர் செப்பேடுகள் :**

பாண்டிய மன்னர்களைச் சார்ந்ததாகக் கிடைத்துள்ள செப்பேடுகள் ஆறு ஆகும். இந்த ஆறு செப்பேடுகளும் பாண்டிய நாட்டு பகுதியிலேயே கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் மூன்று செப்பேடு (வேள்விக்குடி, சீவரமங்கலம், சின்னமனூர் சிறிய கல்வெட்டு) ஜடிலவர்மன் பராந்தக நெடுஞ்சடையனுடைய காலத்தையும், (தளவாய்புரம்) பராந்தக வீரநாராயணனுடைய காலத்தையும், (சின்னமனூர் பெரிய செப்பேடு) இராஜசிம்மன் காலத்தையும், (சிவகாசி) வீரபாண்டியனின் காலத்தையும் சேர்ந்ததாகும்.

**ஆரியமும், தமிழும் :**

இச்செப்பேடுகள் அனைத்திலும் முற்பகுதி சமஸ்கிருதத்திலும், பிற்பகுதி தமிழிலும் உள்ளன. சமஸ்கிருதம் பகுதி கிரந்த எழுத்திலும், தமிழப் பகுதி வட்டெழுத்திலும் எழுதப்பட்டுள்ளன. பல்லவர் செப்பேடுகளைப் போலவே சமஸ்கிருதப்பகுதியில் கடவுள் வாழ்த்தும், பாண்டியர் குலம் தோன்றிய முறையும், கொடை அளித்தோனுடைய முன்னோர்களின் வரன்முறையும், கொடை அளித்தவரின் சிறப்பும், கொடையைப் பற்றிய சிறு குறிப்பும், காணப்படும். தமிழ்ப்பகுதியில் பல்லவர் செப்பேடுகளுக்கும், பாண்டியர் செப்பேடுகளுக்கும் வேறுபாடு உணர முடிகிறது.

**தமிழ்ப்பகுதியில் மங்கலச் சொல் காணாமை:**

பாண்டியர் செப்பேடுகளின் தமிழ்ப்பகுதி எந்தவித மங்கலச் சொல்லும் இல்லாமல் தொடங்குகின்றது. இச்செப்பேடுகளின் சமஸ்கிருதப் பகுதியில்

கொடை அளிக்கும் முன்னோர்களைக் குறிப்பது போன்றே தமிழ்ப்பகுதியிலும் குறிக்கப்பெற்றிருப்பது பல்லவர் செப்பேடுகளில் காண முடியாத ஒன்றாகும். பாண்டியர் செப்பேடுகளின் தமிழ்ப்பகுதியில் ஒவ்வொரு மன்னனுடைய வெற்றிச் சிறப்புகளும் விரிவான முறையில் தரப்பட்டுள்ளன. இவைதான் பிற்காலத்தில் ஆண்ட சோழ மன்னர்களின் மெய்க்கீர்த்திப் பகுதிகளுக்கு உதாரணங்களாக அமைந்திருத்தல் வேண்டும்.

**ஆண்டு குறிப்பிடும் முறை :**

தமிழ்ப்பகுதியில் கொடை அளிக்கும் மன்னனின் ஆண்டு குறிப்பிடு முறையும் புதுமையாக உள்ளது. தளவாய்புரச் செப்பேட்டில் ‘‘தன் செங்கோல் யாண்டு நாற்பதின் மேல் மூன்றோமீர் யாண்டில்’’ என்று கூறப்பட்டுள்ளது. சின்னமனூர் பெரிய செப்பேடு ‘‘ராஜ்யவர்ஷம் இரண்டாவதனெதிர் பதினான்காம் யாண்டில்’’ என்று குறிக்கிறது.

**தமிழ்ப் பகுதி தரும் விளக்கம் :**

பாண்டியர் செப்பேடுகளின் தமிழ்ப் பகுதியில் அரசன் கொடையை (தானம்) அளிக்கும் போது எங்கு தங்கியிருந்தான், யார் வேண்ட அக்கொடை அளிக்கப்பட்டது. யார் ஆணத்தியாக இருந்தான், பிடியை நடத்திச் சென்றவர் யார், தமிழ்ப் பகுதியைப் பாடிய கவிஞர் யார், அதைச் செப்பேட்டில் எழுதிய சொல்லன் யார் போன்ற செய்திகள் தெளிவாகத் தரப்பட்டுள்ளன.

**கவிதை நடை :**

இத்தமிழ்ப் பகுதி பெரும்பாலும் கவிதை நடையிலேயே காணப்படுகிறது. இப்பகுதியைப் பாடிய கவிஞன் நிலக்கொடை போன்றவை அளிக்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டிருக்கிறான். வேள்விக்குடிச் செப்பேட்டில் தமிழ்ப் பகுதியைப் பாடியவன் ‘‘இப் ப்ரஸ்ஸ்தி பாடின சேனாதிபதி ஏனாதி ஆஇன சாத்தஞ் சாத்தற்கு’’ என வரும் தொடரால் சாத்தஞ்சாத்தன் என்பது அறியப்படுகிறது. அத்தோடு அவனுக்கு ‘‘மூன்று கூற்றாருமாய்த் தங்களோடொத்த நான்கு படாகாரங் கொடுத்தார்’’ என்ற செய்தியும் புலனாகிறது. தளவாய்புரச் செப்பேடு ‘‘சீரிய செழும் பணி இதற்குச் செப்பேடு ஆரியம் விராய்த் தமிழ் தொடுத்த மதியோராக’’ தேர்மிகுமாக கடற்றானைத் தென்னவர்கோன் திருவருளாற் சீர்மிகு செப்பேட்டுக்குச் செந்தமிழப் பாத்தொடை செய்தோன். அற்புதமெனும்

பாழிக்கன் அவிர் சடை முடி அரன் வேண்ட நற்பாக நிர்மித்தவனளிர் கடைமேலலங்கல் பெற்ற மாமுனி மறுவழி வந்தோன் பாமரு பண்டித தாஸன் பொன்வரன்றி, மணிவரன்றி, அகில் வரன்றிக் கரை பொரு புனற் றென் வையகை வளநாடன் செழுங்குண்டூர் நகர்த் தோன்றல் பாண்டித் தமிழர் பரண னென்றும் பல சிறப்புப் பெயரெய்திய பாண்டி பாராயப் பெருஞ்சொல்லனாகிய சிரீவல்லவன்'' என்று கூறுகிறது. இவனுக்கு இறையிலியாக நிலம் அளிக்கப்பட்ட செய்தியும் தெரிய வருகிறது.

**செப்பேட்டை எழுதியவர்கள் :**

இச்செப்பேடுகளில் தமிழ்ப் பகுதியில் அவற்றை எழுதிய கொல்லர்களின் பெயரும் காணப்படுகிறது. வேள்விக்குடி செப்பேட்டை யுத்தகேசரிப் பெரும்பணைகாரன் என்பவனும், சின்னமனூர்ச் சிறிய செப்பேட்டைப் பாண்டிப் பெரும்பணைகாரன் மகன் அரிகேசரி என்பவனும் தளவாய்புரச் செப்பேட்டை'' ''இச்சானத்திற்குச் செழுந்தமிழ்ப் பாடினோன் தந்தை நிருப சேகரப் பெருங்கொல்லன் நிறை பகழ் நக்சன்'' என்பானும் எழுதியுள்ளனர். ஸ்ரீவரமங்கலச் செப்பேட்டை எழுதியவனும், சின்னமனூர்ச் சிறிய செப்பேட்டை எழுதியவனும் ஒருவனாகக் காணப்படுவதால் இரண்டு செப்பேடுகளும் பராந்தக நெடுஞ்சடையனைச் சேர்ந்தவை என்பது ஐயமற புலனாகிறது. பெரும்பணைகாரன் என்பதற்குப் பெரிய சொல்லு பட்டறை உடைய கொல்லன் என்று பொருள் கொள்ளலாம்.

**சமஸ்கிருதப் பகுதியில் சில புதுமை :**

இச்செப்பேடுகளில் தளவாய்புரச் செப்பேடு, சின்ன மனூர் பெரிய செப்பேடு, சிவகாசிச் செப்பேடு ஆகியற்றில் சமஸ்கிருதப் பகுதியிலும் யாருக்குக் கொடையளிக்கப்பட்டது, கொடையளிக்கப்பட்ட நிலம் எங்கு அமைந்துள்ளது, யார் யார் அதிகாரிகளாக இருந்தார்கள் என்ற செய்திகள் தரப்பட்டுள்ளன. இது பல்லவர் செப்பேடுகளின் சமஸ்கிருதப் பகுதியில் காண முடியாதவை. பாண்டியன் செப்பேடுகளான வேள்விக்குடிச் செப்பேடு, ஸ்ரீவரமங்கலச் செப்பேடு, சின்னமனூர் சிறிய செப்பேடு ஆகியவற்றில் கூட காண முடியவில்லை. ஆகவே சமஸ்கிருதப் பகுதியில் கொடை அளிக்கப்பட்ட நிலம் பற்றிய செய்தி சேர்க்கப்பட்டது கி.பி. 9 ஆம் நூற்றாண்டிலிருந்து என்று கொள்ளலாம்.

**இலக்கியச் செய்திக்குச் செப்பேட்டுச் சான்று :**

இச்செப்பேடுகளின் தமிழ்ப்பகுதியில் சங்க காலப் பாண்டியர்கள் ஓரிருவர் குறிக்கப்படுகின்றனர். அத்தோடு அவர்களின் சிறப்பும் புகழப்பட்டுள்ளது. ‘‘கொல்யானை பலவோட்டிக் கூடா மன்னர் குழாந்தவிர்த்த பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பாண்ட்யாதி ராஜன்’’ என்று வேள்விக்குடிச் செப்பேடு பாண்டிய மன்னன் முதுகுடுமிப் பெருவழுதியைக் குறிக்கிறது. சின்னமனூர்ச் சிறிய செப்பேடு பாண்டிய மன்னருள் ஒருவன் ‘‘ஓராயிரம் க்ருது செய்தான்’’ என்று தெரிவிக்கிறது இச்செய்தி பாண்டியன் முதுகுடுமி வேள்வி செய்ததைத் தெரிவிப்பதாகவே கருத வேண்டியுள்ளது. சங்க இலக்கியங்களுள் ஒன்றான மதுரைக் காஞ்சி முதுகுடுமி பெருவழுதியை ‘‘பல் சாலை முதுகுடுமி’’ என்று பகர்கிறது. சாலை என்பது வேள்விச்சாலை ஆகும். எனவே இலக்கியம் வாயிலாகக் கேள்விப்பட்ட செய்தி செப்பேட்டு வாயிலாகவும், உறுதிப் படுத்தப்படுகிறது. அத்தோடு செப்பேடும் உண்மையான நிகழ்ச்சியைத் தெளிவுறுத்துகிறது என்பது தீர்மானிக்கப்படுகிறது.

**ஆலங்கானத்து அமர் :**

பாண்டியர்களின் முன்னோர் சிறப்புக்களை கூறுமிடத்தில் ‘‘ஆலங்கானத் தமர்வென்று ஞாலங் காவல் நன் கெய்தியும்’’ அன்று தளவாய்புரச் செப்பேடும், ‘‘தலை ஆலங்கானத்திற் றன்னொக்கு மிரு வேந்தரைக் கொலைவாளிற் றலைதுமித்துக் குறைத் தலையின் கூடத்தொழித்தும்’’ என்ற சின்னமனூர் பெரிய செப்பேடும் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பற்றிப் பேசுகின்றன.

**அருந்தமிழ் நற்சங்கம் :**

மதுரை மாநகர் ஏற்படுத்தப்பட்டதும் அங்கு சங்கம் அமைக்கப் பெற்றிருந்ததும், அச்சங்கத்தில் மாபாரதம் தமிழ்ப்படுத்தப்பட்டதும், ‘‘தென் மதுராபுரஞ் செய்தும் அங்கதனில்லருந்தமிழ் நற்சங்கம் இரீஇத் தமிழ் வளர்த்தும்’’ என்று தளவாய்புரச் செப்பேடும்; மஹ பாரதத் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்’’ என்று சின்னமனூர் பெரிய செப்பேடும் புலப்படுத்துகின்றன. மதுரையில் சங்கம் அமைக்கப் பட்டிருந்தது என்று கூறப்பட்டு வந்த இலக்கியச் செய்திகள் நிரூபிக்கப்படுகின்றன.

**மதுரைக் காஞ்சியும், தளவாய்புரச் செப்பேடும் :**

தளவாய்புரச் செப்பேட்டின் தமிழ்ப்பகுதியைப் பாடிய, ‘‘பாண்டித் தமிழா பரணனென்னும் பல சிறப்புப் பெயரெய்திய பாண்டிமாராயப் பெருங் கொல்லனாகிய சிரீவல்லவன்’’ பத்துப்பாட்டுள் ஒன்றாகிய மதுரைக் காஞ்சியைச் சுவைத்துச் சுவைத்துப் படித்திருப்பான் போல் தோன்றுகிறது. தமிழ்ப் பகுதியின் தொடக்கமே மதுரைக் காஞ்சியின் தொடக்க வரியாகிய ‘‘ஓங்குதிரை வியன் வரப்பில்’’ என்று ஆரம்பமாகிறது. இப்பகுதியின் இறுதி வரிகளிலும், மதுரைக் காஞ்சியின் முத்திரையை உணர முடிகிறது.

**பகல் செய்யும் வெண் ஞாயிறும், இரவுச் செய்யும் வெண் திங்களும் :**

கொடை அளிக்கின்றவன், தான் அளிக்கின்ற அக்கொடை ‘சந்திராதித்ய வரை’ நிலை பெற்றிருக்கும் என்று கூறி அளிப்பது தான் வழக்கமாகக் கல்வெட்டுகளில் காண முடிகிறது. அதையே கூறவந்த இக்கவிஞன் ‘‘சந்திராதித்யவரை’’ என்ற அச்சொல்லுக்குப் பதிலாகத் தம் மனத்தில் அலை மோதிக் கொண்டிருந்த மதுரைக் காஞ்சியின் வரிகளாகிய ‘‘பகற் செய்யும் வெண் ஞாயிறும் இரவுச் செய்யும் வெண் திங்களும்’’ என்ற பகுதியை அப்படியே ‘‘பகல் செய்யும் பகுதி ஞாயிறும் இரவுச் செய்யும் பனிமதி உம் ஞாலமும் உளவளவும்’’ என்று தந்திருக்கிறான். எனவே அவன் தன்னைத் ‘‘தமிழாபரணன்’’ என்று கூறிக் கொள்வது பொருத்தமுடையதுதான் என்பதைச் சொல்லாமல் சொல்லி விடுகிறான்.

**ஆரியம் விராய்த் தமிழ் :**

இத்தமிழ்ப் பகுதியில் ஆங்காங்கே வடமொழிச் சொற்கள் வருமிடங்களிலெல்லாம் கிரந்த எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதைத் தளவாய்புரச் செப்பேடு ‘‘ஆரியம் விராயத் தமிழ்’’ என்று கூறிச் செல்கிறது. இவ்வாறு எழுதுவது மிகவும் சிறந்தது என்று கருதப்பட்டது போன்று காணப்படுகிறது. இம்முறைதான் பிற்காலத்தில் (விஜய நகர் காலத்தில்) மணிப்பிரவாள நடை என்று வழங்கி வந்தது போலும்.

**பல்லவர் செப்பேடுகளில் தமிழ்ப் பகுதியில் பிரஸஸ்தி இருந்திருந்தால் :**

பாண்டியர் செப்பேடுகளில் காணப்படுவது போன்று பல்லவர் செப்பேடுகளிலும் ‘ப்ரஸஸ்திஸேஷம்’ பகுதி (தமிழ்ப் ப்ரஸஸ்தி)

இருந்திருந்தால் பல்லவர்களைப் பற்றிய தெளிந்த வரலாறு கிடைத்திருக்கும். பல்லவர் செப்பேடுகளின் தமிழ்ப்பகுதி தேர்ச்சி பெற்ற புலவர்களால் இயற்றப்பட வில்லை. காரணம் புலவர்கள் எழுதுமளவிற்கு செய்திகள் தமிழ்ப் பகுதியில் சேர்க்கப்படவில்லை. தமிழ்ப் பகுதி சாதாரணமாகக் கொடை அளிக்கப்பட்ட நிலத்தையும், அதன் எல்லைகளையும், யார் யாருக்கு எவ்வளவு பங்கு என்ற விவரத்தையும் தெரிவிப்பனவாகவே காணப்படுகிறது. அதே நேரத்தில் அவர்கள் செப்பேடுகளின் சமஸ்கிருதப் பகுதி சிறந்த கவிஞர்களால் இயற்றப்பட்டிருக்கிறது. ஆகவேதான் அப்பகுதியில் பல்லவர்களின் பரம்பரையை ஓரளவு தெரிந்து கொள்ள ஏதுவாகிறது. பல்லவர் செப்பேடுகளின் தமிழ்ப் பகுதியில், பாண்டியர் செப்பேடுகளில் காணப்படுவது போன்ற தமிழ்ப் பிரஸஸ்தி பகுதி சேர்க்கப்பட்டிருந்தால், பல்லவர்கள் யார், அவர்களுக்கும், தமிழ் நாட்டுக்கும் உள்ள உறவு என்ன, இலக்கியங்களில் கூறப்படும் கதைகளுக்கும், அவர்களுக்கும் உண்மையிலே தொடர்பு உண்டா என்ற கேள்விகளுக்கும் சிறந்த விளக்கம் கிடைத்திருக்கும்.

பாண்டியர் காலச் செப்பேடுகளில் வேள்விக்குடிச் செப்பேடுகள் பற்றிக் காணலாம்.

## வேள்விக்குடி செப்பேடுகள்

**வேள்விக்குடி செப்பேடுகள் வெளியிடுதல் :**

வேள்விக்குடி சாசனம் பத்து ஏடுகளைக் கொண்டது. இதன் மூலப் பிரதி லண்டனில் உள்ள பிரிட்டிஷ் மியூசியத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அது எப்போது எவ்விதம் அங்கு சென்றது என்ற விவரம் ஏதும் தெரியவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சர். வால்டர் எலியட் திரட்டிய மூலச் சான்றுகளில் இதுவும் ஒன்று ஆகும். வேள்விக்குடி சாசனத்தின் இரண்டு படிகளை டாக்டர் பிளீட் 1893-ல் இந்திய சாசன இலாகாவுக்கு அனுப்பி வைத்தார். ஆனால் அப்போது இந்த சாசனமும், அதன் விபரங்களும் வெளியாகவில்லை. 1908-ல் தான் திரு. வெங்கையா தனது ஆண்டு அறிக்கையில் (Epigraphical Report 1908, Part II Page 63) இந்த சாசனத்தை விரிவாக ஆய்வு செய்து வெளியிட்டார்.

இந்த சாசனத்தில் காணப்படும் வேள்விக்குடி என்ற ஊர் மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே இருந்ததாகக் கருதப்படுகிறது. தற்போது இந்த ஊர் இல்லை. பிரிட்டிஷ் மியூசியம் அதிகாரிகளுக்கு இந்த சாசனம்

எப்படி கிடைத்தது என்ற விபரம் தெரியவில்லை. எனவே தான் இதன் படிகளை இந்திய சாசன இலாகாவிற்கு அனுப்பி வைத்தார்கள். அதற்குப் பிறகு இந்த சாசனம் 1923ம் வருடத்து எபிகிராபியா இந்திகா 17-ம் தொகுதியில் 291-309ம் பக்கங்களில் திரு.எச். கிருஷ்ண சாஸ்திரியால் வெளியிடப்பட்டது. திருவாங்கூர் சமஸ்தானத்தில் புனித பொருள் ஆராய்ச்சித் துறையில் இருந்த து.அ. கோபிநாத ராயருக்கும் இந்த சாசனத்தின் ஒரு பிரதி கிடைத்தது. அதை திரு.கே.ஜி. சங்கன் என்பவர் வாசித்து ‘செந்தமிழ்’ என்பதின் 20ம் தொகுதியில் 205 – 216ம் பக்கங்களில் வெளியிட்டார்.

**வேள்விக்குடி சாசனத்தின் அமைப்பு :**

பத்து ஏடுகளைக் கொண்ட இந்தச் சாசனத்தில் முதல் ஏடும் கடைசி ஏடும் உட்புறம் மட்டுமே எழுதப்பட்டுள்ளன. மற்ற எட்டு ஏடுகளும் இருபுறமும் எழுதப்பட்டுள்ளன. இவ்வாறு 18 பக்கங்களில் பொறிக்கப்பட்டுள்ள இந்த சாசனம் மொத்தம் 155 வரிகளைக் கொண்டுள்ளது. முதல் ஏழு ஏடுகள் பின்புறத்திலே இடது பக்கத்து விளிம்பில் வரிசையாக ஒன்று முதல் ஏழு வரை முறையே எண்கள் இடப்பட்டுள்ளன. பின் மூன்று ஏடுகளில் எண் எதுவும் காணப்படவில்லை. இந்த ஏடுகள் மற்ற சாசன ஏடுகளைப் போல இடது புறத்தில் துளையிடப்படாமல் தலைப்பில் இடது புறமாகத் துளையிடப்பட்டுள்ளன. இதனால் இந்த செப்பேடுகளை ஓலைச் சுவடிகளைப் போல மேலும் கீழுமாகப் புரட்டிப் பார்க்க வேண்டி வரும்.

இந்த சாசனத்தின் சமஸ்கிருதப் பகுதி கிரந்த எழுத்திலும், தமிழ்ப் பகுதி வட்டெழுத்திலும் உள்ளன. தமிழ்ப்பகுதியில் மெய்யெழுத்துக்கள் பெரும்பாலும் புள்ளியிடப்பட்டுள்ளன. சமஸ்கிருதம், தமிழ் ஆகிய இரு பகுதிகளும் செய்யுள் நடையிலேயே அமைந்துள்ளன. (உ.ம்)

“பல்யாக முதுகுடுமிப் பெருவழுதியென்னும் பரமேச் வரனால்
வேள்விக்குடி யென்னப்பட்ட கேள்வியிற் றரப்பட்டதனைத்
துளக்கமில்லாக் கடற்றாணையாய் களப்பிரா லிறக்கப்பட்டது
என்று நின்றவன் விக்ஞாரியஞ் செய்ய நன்று நன்றென்று
மறுவலத்து நாட்டானின் பழமையாதல் காட்டி நீ கொள்க
வென்ன”

என்று மிக அழகான செய்யுள் நடையில் எழுதப்பட்டுள்ளது. இவ்வாறு எழுதுவதற்கு தமிழில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தால் மட்டுமே முடியும்.

**வேள்விக்குடி செப்பேட்டின் சமஸ்கிருதப் பகுதியில் பாண்டியர் வரலாறு :**

சிவபெருமானுக்கு வணக்கம் கூறி மங்கலத்துடன் ஆரம்பிக்கிறது. சமஸ்கிருதப்பகுதி, முதல் இரண்டு சுலோகங்கள் பாண்டிய வம்சத்தின் புகழ் பாடுகின்றன. இந்த வம்சத்தினர் பூ பாரத்தைத் தாங்குவதால் ஆதிசேசனுக்கு ஓய்வு ஏற்படுகிறது என்றும், இந்த வம்சம் அகத்திய முனிவரை புரோகிதராகக் கொண்டது என்றும் கூறுகிறது சுலோகம். பிரளய காலத்திலும் பாண்டிய வம்சம் அழிவதில்லை. இதன் பிறகு பாண்டிய வம்சத்தின் பழைய அரசர்கள் நிகழ்த்திய சாதனைகள் கூறப்பட்டுள்ளது.

மேருவின் உச்சியில் இரு மீன்களைப் பொறித்தது. இந்திரனுடைய சிம்மாசனத்தில் ஒரு பாதியையும், அவனுடைய மாலையையும் அடைந்தது. உலக மக்களுக்குப் புகலிடமான, தேவர்களைத் தூதர்களாகக் கொண்டது. அகத்தியரால் முடிசூடப்பட்டது. குடிமக்கள் அனைவரும் விரும்பியதைக் கொடுத்தது போன்ற புகழ் பெற்ற இத்தகைய வம்சத்தில் மூவுலகம் போற்றும் மாறவர்மன் தோன்றினான். இவன் போரில் பல எதிரிகளை வென்றான். துலாபாரம் நடத்தி அந்த பொன்னை அறிஞர் பலருக்கும் வழங்கினான்.. இவனது மகன் ரணதீரன் இளஞ்சூரியனோடு ஒப்பிடப்பட்டிருக்கிறான். ரணதீரன் மகன் ராஜ சிம்மனிடம் போரில் பல்லவ மன்னன் தோற்று அஞ்சி ஓடினான். ராஜசிம்மனின் மகனே இந்த சாசனத்தை வழங்கிய ஐடிலவர்மன் ஆவான். இவனுக்குப் பராந்தகன் என்ற பெயரும் உண்டு. இவ்வாறு சமஸ்கிருதப் பகுதியில் கூறப்பட்டுள்ளது.

**தமிழ்ப் பகுதியில் காணப்படும் பாண்டியர் வரலாறு :**

வேள்விக்குடி செப்பேட்டின் தமிழ்ப்பகுதி தனிச்சிறப்பு வாய்ந்தது. ஆரம்பத்தில் மங்கலச் சொல் ஏதும் இல்லை. ‘கொல்யானை’ என்றே ஆரம்பிக்கிறது. பாண்டியர்களின் வரலாறு கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ளது.

**1. பல்யாக முதுகுடுமி பெருவழுதி :**

வேள்குடி கிராமம் கொற்கை கிழான் நற்கொற்றன் என்ற அந்தணருக்கு சங்க கால பாண்டிய மன்னன் பல்யாக முதுகுடுமிப் பெருவழுதியினால் தானமாக வழங்கப்பட்டது. நற்கொற்றனைத் தலைவனாகக் கொண்ட வேதியர்கள் உதவியுடன் அரசனே யாகத்தை நடத்தி, அந்தயாக தட்ஷிணையாக வேள்விக் குடியைத் தானம் செய்தான். தானம் பெற்ற ஊரை

நற்கொற்றன் வழி வந்தோர் நீண்ட காலம் அனுபவித்து வந்தனர். பின்னர் களப்பிரர் ஆட்சிக் காலத்தில் இந்த தானம் பறிக்கப்பட்டது.

**2. கடுங்கோன் :**

அதன்பின் வந்த பாண்டிய மன்னன் கடுங்கோன் களப்பிரர் ஆட்சியை ஒழித்துக்கட்டி பாண்டிய குல ஆட்சியை மீண்டும் நிலை நிறுத்தினான். இந்தக் கடுங்கோன் 'மானம் பேர்த்த தானை வேந்தன்'' என்று புகழப்பட்டிருக்கிறான். இவ்வாறு பாண்டியர் ஆட்சியைக் கைப்பற்றிய களப்பிரரை வென்று மீண்டும் பாண்டிய ஆட்சியை நிறுவியவன் கடுங்கோன் என்று இச்சாசனம் தெளிவாகக் கூறுகிறது. கடுங்கோனுக்குப் பிறகு ஆட்சிபுரிந்த ஆறு பாண்டிய மன்னர்களைப் பற்றி வேள்விக்குடி சாசனம் விரிவாகக் கூறுகிறது.

**3. மாறவர்மன் மற்றும் சேந்தன் :**

கடுங்கோனுக்குப் பிறகு அவனது மகன் அவணி சூளாமணி என்ற பெயர் கொண்ட மாறவர்மன் அறியணை ஏறினான். இவன் மலர் மகளை திருமணம் செய்து கொண்டான். எதிரிகளையெல்லாம் அழித்தான் இவனுக்குப் பிறகு சேந்தன் என்பவன் அறியணை ஏறினான். சேந்தனுக்கு செழியன், வானவன் போன்ற சிறப்பு பெயர்கள் காணப்படுகின்றன.

**4. அரிகேசரி வர்மன் :**

சேந்தனுக்குப் பிறகு அவனது மகன் அரிகேசரிவர்மன் அறியணை ஏறினான். அரிகேசரிவர்மன் பாழிப்போர், நெய்வேலிப்போர் ஆகியவற்றில் வெற்றி கண்டான். பரவர் மற்றும் குருநாட்டவரை வென்றான். அடுத்தபடியாக செந்நிலத்துப் போரிலும் வென்றான். பின்னர் கேரளனை வென்று புலியூரைக் கைப்பற்றினான். இவன் ஹிரண்ய கர்ப்பம், துலாபாரம் போன்ற மகாதானங்களை நடத்தி அந்தப் பொன்னை அந்தணர்களுக்கும் அசக்தர்களுக்கும் வாரி வழங்கினான் என்று இந்த சாசனம் கூறுகிறது.

**5. சடையன் :**

பின்னர் அரிகேசரிவர்மனின் மகன் சடையன் அறியணை ஏறினான். இவர் மருதூரில் நடந்த போரில் வெற்றியடைந்து ஆய்வேளைக் கைப்பற்றினான். பின்னர் செங்கொடி, புதான் கோடு ஆகிய இரண்டு இடங்களிலும் வெற்றியடைந்தான். இந்த மன்னன் கொங்கர் கோன் என்றும், மதுர கருநாடகன் என்றும் சாசனத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறான். மேலும்

தென்னவானவன், செம்பியர் சோழன் என்றும் புழகப்பட்டுள்ளான். இந்த விருதுகள் எல்லாம் சேர, சோழ, பாண்டிய நாடுகள் மூன்றையும் ஒரு குடையின் கீழ் இவன் ஆட்சி புரிந்தான் என்று உணர்த்துகின்றன.

**6. மாறன் :**

சடையனுக்குப் பிறகு அவனது மகன் மாறன் அறியணை ஏறினான். இவனது வெற்றிகள் சாசனத்தில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. இவன் கையில் வேலேந்தி மிகவும் வேகத்தோடு வந்து எதிர்த்தவர்களை நெடுவயல் என்ற இடத்தில் அழித்தான். அதே போல் குறுமடை, மன்னிக்குறிச்சி, திருமங்கை, பூவலூர், கொடும்பனூர் ஆகிய இடங்களில் வெற்றி கொண்டு யானை, குதிரை பலவற்றைக் கைப்பற்றினான். குழும்பூர் என்ற இடத்தில் பல்லவனைத் தோற்கடித்தான். இவன் காவிரியைத் தாண்டி மழகொங்கத்தை அடிமைப்படுத்தினான். கங்கராஜனுடன் ஒப்பந்தம் செய்து கொண்டான். பசுபதியான சிவபெருமானை வணங்கினான். கோசஹஸ்ரம், ஹிரண்ய கர்ப்பம், துலாபாரம் போன்ற மகா தானங்களைப் பலமுறை செய்து அந்தப் பொருட்களை வேதம் வல்லார்க்கு வழங்கினான்.

**7. பராந்தக நெடுஞ்சடையன் :**

மாறனுக்குப் பிறகு அவனது மகன் நெடுஞ்சடையன் அரசனானான். அவனே இச்சாசனத்தை வழங்கிய பராந்தகன் ஆவான். இவன் பெண்ணாகடம் என்ற ஊரில் காடவனைத் (பல்லவனைத்) தோற்கடித்தான். பின்னர் ஆய்வேளையும், குரும்பரையும் வெற்றி கண்டான்.

வேள்விக்குடி சாசணம் பராந்தக நெடுஞ்சடையனின் மூன்றாம் ஆட்சியாண்டில் (கி.பி. 770) வழங்கப்பட்டது. இவனது ஆட்சியில் ஒரு நாள் வேள்விக் குடியைத் தானம் பெற்ற கொற்கை கிழானின் வழி வந்த நற்சிங்கன் என்பவர் மதுரை மாநகரில் மனம் கொதித்து கூச்சல் இட்டான். அதைக் கேட்ட அரசன் அவனை அழைத்து விசாரித்தான். விவரத்தை அறிந்த மன்னன் அவன் கூறியதை ஆதாரங்களோடு நிரூபித்துக் காட்டுமாறு கட்டளையிட்டான். நற்சிங்கன் தன்னிடமிருந்த ஆதாரங்களை எடுத்துக் காட்டினான். உடனே பாரந்தகன் தன் முன்னோரால் வழங்கப்பட்டதை தானும் வழங்குவதாக அப்போதே உத்தரவிட்டான்.

இந்த நற்சிங்கன் மீண்டும் தானம் பெற்ற அந்த ஊர் முழுவதையும் தனக்கே வைத்துக் கொள்ளாமல் மூன்றில் இரண்டு பகுதியை

அந்தணர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தான். சாசனத்தில் தானம் கொடுக்கப்பட்ட ஊரின் நான்கு எல்லைகளும் குறிக்கப்பட்டுள்ளன. இந்த தானத்தை நிறைவேற்றுவதற்கு கரந்தபுரத்து வாசியான மூவேந்த மங்கல பேரரையன் என்பான் நியமிக்கப்பட்ட செய்தியும் சாசனத்தில் காணப்படுகிறது.

இப்பிரசஸ்தி பாடினவன் சேனாதிபதி ஏனாதி ஆயின சாத்தஞ்சாத்தன் ஆவான் என்று சாசனம் கூறுகிறது. இந்த வேள்விக்குடி சாசனத்தை செப்பேட்டில் பொறித்தவன் சுத்தகேசரிப் பெரும் பண்ணைக்காரன் என்று கூறி சாசனம் முடிவு பெறுகிறது.

**சோழர் செப்பேடுகள் ஒரு பொதுவான அறிமுகம் :**

சோழர் காலச்செப்புப் பட்டயங்கள் இதுவரை 17 கிடைத்துள்ளன. இவற்றில் காலத்தில் மிகவும் பழமையானது உதயேந்திரத்தில் கிடைத்துள்ள முதலாம் பராந்தகனின் செப்பேடாகும். இச்செப்பேட்டை அண்மைக்காலம் வரை கங்க மன்னன் இரண்டாம் பிருதிவிபதியனுடையது என்றே குறித்து வந்தனர். ஆனால் தற்பொழுது இது முதலாம் பராந்தகனுடையது தான் என்பது உறுதியாகி விட்டது. இச்செப்பேடு பராந்தக சோழனின் 15ம் ஆண்டில் வெளியிடப்பட்டிருக்கிறது. இச்செப்பேட்டை அடுத்து இதே மன்னனின் வேலஞ்சேரி செப்பேட்டைக் குறிப்பிடுதல் வேண்டும். இது பராந்தக சோழனின் 25ம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கிறது. இதனையடுத்து சுந்தர சோழன் காலத்திய அன்பில் செப்பேட்டைக் குறிப்பிடுதல் வேண்டும். இச்செப்புப் பட்டயம் சுந்தர சோழனின் நான்காம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்டிருக்கிறது. இம்மன்னன் முதலாம் இராஜராஜனின் தந்தையாவான். அடுத்து வரிசையில் வைத்து எண்ணத்தக்கது பள்ளன் கோவில் செப்புப் பட்டயமாகும். இது சுந்தர சோழன் காலத்தியதாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. தற்பொழுது இச்செப்புப் பட்டயம் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறையில் உள்ளது. இது முழுமையாக இல்லை. பதின்மூன்றாம் ஏட்டின் முதல் பக்கத்திலிருந்து இருபத்து மூன்றாம் பக்கத்தின் இரண்டாம் பக்கம் வரை உள்ளன. சென்னை அருங்காட்சியகத்தில் உத்தம சோழன் காலத்திய செப்புப் பட்டயம் உள்ளது.

முதலாம் இராஜராஜன் காலத்தைச் சார்ந்த பெரிய லெயிடன் செப்பேடு என்னும் ஆனை மங்கலச் செப்பேட்டை அடுத்ததாக குறிப்பிடுதல் வேண்டும். இச்செப்பேடு ஹாலந்து நாட்டில் உள்ள லெய்டன் பல்கலைக் கழக அருங்காட்சியகத்தில் வைத்து பாதுகாக்கப்பட்டு வருகிறது. மொத்தம்

21 ஏடுகளைக் கொண்டதாக இது விளங்குகிறது. முதலாம் இராஜராஜனின் 21 ஆம் ஆட்சியாண்டில் எழுதப்பட்டுள்ளது.

இதனையடுத்து முதலாம் இராஜேந்திரன் காலத்திய திருவாலங்காட்டுச் செப்பேட்டைக் குறிப்பிடலாம். முதலாம் இராஜேந்திர சோழனுடைய ஆறாம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்டுள்ளது. இச்செப்பேட்டுக்கு அடுத்து வரிசை முறையில் வைத்துக் கருதத் தக்கது. கரந்தைத் தமிழ்ச் சங்கச் செப்பேடு ஆகும். இதுவும் முதலாம் இராஜேந்திரன் காலத்தில் வெளியிடப்பட்டது. இப்பட்டயம் 57 ஏடுகளைக் கொண்டது. இவ்வேடுகள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதல் மூன்று ஏடுகள் சமஸ்கிருதப் பகுதியையும், அடுத்த இருபத்திரண்டு ஏடுகள் அளிக்கப்பெறும் கொடையைப் பற்றிக் குறிப்பிடும் தமிழ்ப் பகுதியையும், அடுத்த முப்பத்திரண்டு ஏடுகளில் கொடையைப் பெறும் பிராமணர்கள், கோயில்கள், வழிபாடுகள் ஆகியவைகளைத் தெரிவிக்கும் பகுதியையும் காணமுடிகிறது. இம்மூன்று பகுதிகளுமே தனித்தனியாக எண்கள் இடம் பெற்றுள்ளன. இச்செப்பேட்டில் காணப்படும் ஒரு சிறப்பு அம்சம் தமிழ் எழுத்தில் காணப்பெறும் இரண்டாம் மற்றும் மூன்றாம் பகுதியில் உள்ள ஏடுகளில் முதற் பக்கத்தில் ‘த்ருபு’ அல்லது ‘திரிபு’ என்று எழுதப் பெற்றிருப்பதாகும். இச்சொல் திரிபுவனச் சதுர்வேதி மங்கலம் என்னும் ஊர் ஏற்படுத்தப்படுவதற்காக இச்செப்பேடு வெளியிடப்படுகிறது என்பதைத் தெரிவிப்பதாகும். அடுத்துக் கருதத்தக்கது இம்மன்னனது திருக்களர்ச் செப்பேடாகும். முதலாம் இராஜாதிராஜன் காலத்திய திருக்களர் செப்பேடு அடுத்து இடம் பெறுகிறது.

வீரராஜேந்திரன் காலத்தில் வெளியிடப்பெற்ற சராலா செப்புப் பட்டயத்தை இதற்கு அடுத்ததாகக் கூறலாம். இதனையடுத்து வருவது முதலாம் குலோத்துங்கன் காலத்தில் எழுதப்பெற்ற சிறிய லெய்டன் செப்பேடு. இம்மன்னன் காலத்திய மற்றொரு செப்பேடு திருக்களர்ச் செப்பேடாகும். காலக்கணக்கில் இச்செப்பேட்டை அடுத்ததாகத் திரிபுவனச் சக்கரவர்த்திகள் இராஜராஜதேவன் காலத்தில் வெளியிடப் பெற்ற திருக்களர்ச் செப்பேட்டைக் கூறலாம். இதற்கு அடுத்து மூன்றாம் குலோத்துங்கன் காலத்தைச் சார்ந்த திருக்களர்ச் செப்பேட்டையும் இதனையடுத்து இராஜ கேஸரிவர்மன் காலத்தைச் சேர்ந்த இரண்டு செப்பேடுகளையும் கூறலாம். கடைசியாகக் கூறப்பட்ட இரு செப்பேடுகளும் திருச்செங்கோட்டிலிருந்து கிடைக்கப் பெற்றவையாகும். ஆக மொத்தம் பதினேழு செப்பேடுகள் சோழர் காலத்தைச் சார்ந்ததாக இதுவரை கிடைத்துள்ளன.

**பயிற்சி வினாக்கள் :**

**I. ஒரு பக்க வினா :**

1. சமஸ்கிருத மொழிச் செப்பேடுகள் யாவை?
2. செப்பேடுகளில் காணப்படும் வேறுபாடுகள் யாவை?
3. ‘பகல் செய்யும் வெண் ஞாயிறும்’ ‘இரவுச் செய்யும் வெண் திங்களும் குறிப்பு வரைக.
4. பராந்தக நெடுஞ்செழியனின் செப்பேடுகள் குறித்து எழுதுக.

**II. மூன்று பக்க வினா :**

1. பல்லவர் கால செப்பேடுகளை விளக்குக.
2. வேள்விக்குடி செப்பேடுகள் பற்றி எழுதுக.
3. சோழர் காலச் செப்பேடுகள் ஓர் அறிமுகம் - விவரிக்க.

# அலகு 4

# கல்வெட்டுக் கூறும் நிறுவனங்கள்

**முன்னுரை :**

கோயில்கள் சமய சார்பில் பக்தி நெறிக்குரியதாக மட்டும் அமையவில்லை. அக்கால அரசர்களும், மக்களும், அறவோர்களும் கோயில்களைத் தெய்வ நெறிக் காட்சியகமாகவும், கலைக்கூடமாகவும், பொருட் கருவூலமாகவும், அறநெறி புகட்டும் கல்விச்சாலையாகவும், அறச்சாலையாகவும், ஆவணப் பொறிப்பிடமாகவும் இயங்கி வந்திருப்பதை அறிய முடிகிறது. சமுதாய வாழ்வியலுக்குரிய தலைமையிடமாகத் திகழ்ந்த கோயில்களில் அறநிவந்தங்கள், கிராம சபையோரின் நீதிநெறி முறைகள், நிலம் விற்பனை செய்தல், நிலம் வாங்குதல், மக்கள் வாழ்வியல் முறைகள், ஆட்சி வழி நிகழும் ஆணைகள், அளவைகள் ஆகியவை போன்ற செய்திகள் கல்வெட்டுக் கூறும் நிறுவனங்களாகும்.

சோழர் ஆட்சியில் கோயில் ஒரு முக்கிய நிறுவனமாகத் திகழ்ந்தது. மன்னருக்கும், மக்களுக்கும் மத்தியில் ஒரு பாலமாகச் செயல்பட்டது. சோழ மன்னர்கள் கோயில்களின் மூலமே சமுதாயத்தை ஒரு கட்டுக்கோப்பில் வைத்திருந்தனர். அவர்கள் கோயில்கள் மூலமே பொருளாதாரத்தை வளப்படுத்தினர். கோயில்கள் வெறும் வழிபாட்டுக் கூடங்களாக மட்டும் திகழவில்லை. அவை சமுதாயத்தின் முதுகெலும்பாகவும் திகழ்ந்தன. பலதரப்பட்ட மக்கள் கோயிலில் சேர்ந்து வழிபாடும், விழாவும் நடத்தினர். ஊரவை கூடி விவாதித்தல், கல்வி கற்பித்தல், புராண காப்பியங்கள், சொற்பொழிவு, நில விற்பனை சம்பந்தமான விவாதங்கள், ஊரவைத் தேர்தல்கள் முதலிய பல செயல்பாடுகளும் கோயில்களில் நடைபெற்றன.

## பிரம்ம தேயம்

அந்தணர்களின் இருக்கையான பிரம்ம தேயங்கள் வரலாற்றுக் காலத்திலிருந்தே உள்ளன. மூன்றாம் நூற்றாண்டிலிருந்தே பிரம்ம தேயங்கள் இருந்தன என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. கி.பி. 235ல் சாதவாசன அரசன் சாதகர்ணி தன்னுடைய ஆரோக்கியமும், செல்வமும் பெருக, மழவள்ளி என்ற கிராமத்தைக் கொண்டமான தக்கஞ்சி என்ற அந்தணனுக்கு அளித்தை இயம்புகிறது ஒரு கல்வெட்டு.

கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் எழுத்தமைதியில் பிராகிருத மொழியில் வரையப்பட்ட ஒரு செப்பேடு மஹாராஜா ஜெயவர்மன் என்பான் தன்னுடைய ஊரான கூதூரில் தங்கியிருக்கும் போது அதே நாட்டுப் பிரிவில் இருக்கும் பாண்டுரா என்ற கிராமத்தை எட்டு அந்தணர்களுக்கு அளித்தார் என்கிறது. பூலாங்குறிச்சி கல்வெட்டும், சங்க இலக்கியமான பதிற்றுப்பத்தும் கூட பிரம்மதேயங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

**பிரம்ம தேயங்கள் அளிக்கப்பட்டதன் காரணம் :**

பண்டைய அரசர்கள் கல்வி, கேள்விகளில் வல்ல அந்தணர்களைப் பெரிதும் போற்றினர். வடமொழி, வேதம், சாத்திரம், புராணம், இலக்கியம், இலக்கணங்களில் நன்கு தேர்ச்சி பெற்ற அந்தணர்களுக்கு எவ்வித கவலையுமின்றித் தங்களது ஆறு பணிகளான (ஷட் கருமம்) ஓதல், ஓதுவித்தல், வேள்விகள் இயற்றுதல், மற்றவர்களுக்காக வேள்வி இயற்றித் தருதல், ஈதல், கொடைகளைப் பெறுதல் போன்ற பணிகளைச் செவ்வனே ஆற்றுவதற்கு மன்னர் நிலங்களைப் பிரம்ம தேயமாக அளித்தனர். கீழைச்சாளுக்கியரின் செப்பேடு ஒன்று சாளுக்கிய மன்னன் விஜயாதித்தரின் கி.பி. (808 – 841) சூரிய கிரகணத்தின் போது வேத சாத்திரங்களில் வல்ல அந்தணர்கள் தங்கள் ஆறு கருமங்களை இனிது நடத்த கொற்றப்பற்று என்ற கிராமத்தை வரி விலக்கி அளித்தான் என்கிறது.

அரசர்கள் அந்தணர்களுக்குப் பிரம்மதேயம் அளிப்பதைப் பெருமையாகப் போற்றினர். பாண்டிய மன்னர் சேந்தன் (கி.பி. 630) அறம் பெருக்கி அக்ரகாரம் பல செய்து என்று புகழப்படுகிறான். மன்னர்கள், அந்தணர்களை இறைவனின் பிரதிநிதியாகக் கருதினர். அந்தணர்கள் நலமாக இருந்தால்தான் தங்கள் ஆட்சி செம்மையுறும் என்று கருதினர். அந்தணர்கள் தங்களது ஆட்சியை அங்கீகரித்தல் மட்டுமே தங்களது ஆட்சி நலமுறும் என்று நம்பினர்.

அந்தணர்களுக்கு நிலமளிப்பது, அக்ரகாரம் அமைத்துத் தருவது, கோயிலில் உணவிடுவது போன்ற செயல்கள் அறத்தைப் பெருக்கி இம்மையில் நல்வாழ்வு பெற்றுத்தரும் என்று மன்னர்களும், மற்றவர்களும் நம்பினர். இவ்வந்தணர்கள் அரசர்களுக்கு மதகுருமார்களாகவும், இளவரசர்களுக்குப் பாடம் கற்பிக்கும் உபாத்யர்களாகவும் திகழ்ந்தனர்.

இந்திய வரலாற்றில் சாதவாஹனர், குப்தர், கதம்பர், வாகடகர், சாளுக்கியர், இராட்டிரகூடர், பல்லவர், சோழர், பாண்டியர், ஹோய்சளர், சாளுக்கியர், காகதீயர் போன்ற அரச பரம்பரைகள் பல அக்ரகாரங்களை உருவாக்கின. இவை தமிழ் நாட்டில் பிரம்மதேயம் என்றழைக்கப்பட்டன.

பிரம்மதேயங்கள் பல வகைப்பட்டன. சில சமயம் ஏற்கனவே மக்கள் வசிக்கும் கிராமங்களை அக்ரகாரமாக அளிப்பதுண்டு. பல சமயங்களில் காடு கொன்று, நாடாக்கி, அதனைப் பிரம்ம தேயமாக மாற்றினர். பிரம்ம தேயத்தை எல்லா இடங்களிலும் உருவாக்க இயலாது. பல நியதிகள், விதிமுறைகளைக் கடைப்பித்தாக வேண்டும். நதி அல்லது ஆற்றின் கரையில்தான் இவை பெரும்பாலும் அமைந்திருக்கும். காவிரியின் வட கரையிலும், தென் கரையிலும் பல பிரம்மதேயங்கள் அமைந்திருந்ததைக் கல்வெட்டுகள் கழறுகின்றன. கல்வி, கேள்விகளில் வல்ல அந்தணர்கள் வறுமையில் வாடுபவர்கள் என்பதைச் செப்பேட்டில் பயின்றவரும் நல்கூர் நற்பார்ப்பார் என்ற தொடரினால் அறியலாம். இவர்களால் கல்வி புகட்டி வேத-சாத்திர-பூசனைகளை இயற்ற இயலுமே தவிர மெய் வருத்தம் போன்ற வேறு கடினமான பணிகளில் ஈடுபட இயலாது என்று கருதியே இவர்களுக்கு நிலக்கொடைகள் வழங்கப்பட்டன.

அரசன் - அரசியர் பிறந்த நாள்கள், இளவரசன் முடிசூடும் நாட்கள், போரில் வாகை சூடிய நாட்கள் மற்றும் சூரிய - சந்திர கிரகணங்களின் போது ஏற்படும் தீங்கைத் தடுக்கவும் அந்தணர்களுக்கு நிலபுலன்கள் அளிக்கப் பட்டன. இவ்வாறு அந்தணர்களுக்கு தானமாக வழங்கிய நிலங்களே பிரம்மதேயம் எனப்பட்டது.

**திருமடைப்பள்ளி :**

கோவிலுக்குள் அமைந்துள்ள நிறுவனங்களில் திருமடைப்பள்ளி நிறுவனமும் ஒன்று. சங்க காலத்தில் அறிமுகமான வடபுலத்தின் வைதீக சமயம் வளர்ச்சி பெறத் தொடங்கிய போது கோவில் என்ற அமைப்பு உருவாகி வளரத் தொடங்கியது. பல்லவர் காலத்தில் இது வளர்ச்சியுற்றுப் பின்னர் சோழர் ஆட்சிக் காலத்தில் ஒரு நிறுவனமாக மாறி நின்றது. இதன் பின்னர் சைவமும், வைணவமும் இறைவனின் உருவத்திற்கு முன் படைக்கும் பொருட்கள் எவை என்பதை வரையறுத்தன. அதன் பின்னர் இறைச்சியும்,

கள்ளும் விலக்கப்பட்ட படையல் பொருளாயின. சமைக்கப்பட்ட உணவு படையல் பொருளாக அனுமதிக்கப்பட்டது. ஆனால் வழிபடுவோர் தாமே உணவு சமைத்துக் கொண்டு வர அனுமதி மறுக்கப்பட்டது. கோவிலே இப்பணியை மேற்கொண்டது. மேலும் கோவிலின் ஊழியர்களுக்கும், பிராமணர்களுக்கும் நாள்தோறும் உணவளிக்கும் பொறுப்பும் கோவிலைச் சேர்ந்ததாயிற்று. இவ்வுணவுக்காகவும், செலவுக்காகவும் நிலங்கள் கொடையாக வழங்கப்பட்டன. பணமும், கொடையாகப் பெறப்பட்டு அதிலிருந்து பெரும் வட்டித் தொகையை உணவுச் செலவுக்காக வழங்கப் பட்டது. இதன் அடிப்படையில் நாள்தோறும் உணவு தயாரித்தல் என்பது நிறுவன சமயக் கோவில்களின் அன்றாடப் பணிகளில் ஒன்றாகியது. இப்பணியை நிறைவேற்ற கோவிலில் சமையலறை ஒன்றும் உருவானது. சமையல் நிகழும் இடத்தைக் குறிக்கும் 'மடைப்பள்ளி' என்ற பெயர் இதற்கு இடப்பட்டது. கோவில் தொடர்பான மடைப்பள்ளி என்பதால் திரு என்ற அடைமொழி இடப்பட்டு திருமடைப்பள்ளி என்று அழைக்கப்படலாயிற்று. இங்கு செயல்பட்ட ஊழியர்களின் பதவிப் பெயர்களும், பணிகளும் சோழர் காலக் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளன.

**பண்டாரம் :**

கோவில்களுக்கு அக்கால அரசர்கள் நிறைய கொடைகள் வழங்கினார்கள். நிலங்கள், அணிகலன்கள், பூசனைப் பொருட்கள், நிலவுடைமை பத்திரங்கள் போன்ற ஆவணங்களைப் பாதுகாக்கும் இடம் கருவூலம் எனப்பட்டது. பண்டாரம் என்றால் கருவூலம். பொக்கிஷம், அரசுக்குரிய மூலதனமாகும். பொன்னையும், மணிகளையும் பிற மதிப்புடைய பொருள்களையும் சேமித்துப் பாதுகாக்கும் இடம்.

"உடையார் ஸ்ரீராஜராஜீச்வரம் உடையார் பண்டாரத்துக்
காட்சி காட்டி நீக்கி உடையார் ஸ்ரீராஜராஜீச்வரம் உடையார்
பண்டாரத்துக் கூடி முதலான பொன்னும் ரத்னங்களும்

போன்ற பாடல் மூலம் கருவூலம் பற்றிய செய்தியை அறிய முடிகிறது.

**சரஸ்வதி பண்டாரம் :**

அக்கால மன்னர்கள் அந்தணர்களுக்கு அக்ரகாரம் அமைத்துக் கொடுப்பதில் அதிக கவனம் செலுத்தினார்கள். அக்ரகாரத்தைச் சுற்றியும் அந்தணர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து

கொடுத்தார்கள். வேதத்திலும், சாஸ்திரத்திலும் பண்டிதர்களாய்த் திகழும் நூற்றெட்டு சதுர்வேதி பட்டர்களுக்கும் (நான்கு வேதங்ளிலும் புலமை வாய்ந்தவர்கள்) இவ்வகரத்து நடுவே எழுந்தருளிவித்த விக்கிரம பாண்டிய ஈஸ்வரமுடையார்க்கும், சரஸ்வதி பண்டாரத்துக்கும் (நூலகத்திற்கும்), பணி மக்களுக்கும் உறைவிடம் ஒதுக்கப்பட்டது. அந்தணர்களுக்கு அருகிலேயே உள்ள ஓர் குளத்தில் தங்களது தினசரிப் பணியான சந்தியா வந்தனம் பண்ணிக் கொள்ளவும் வசதி செய்து தரப்பட்டது. சுருங்கக் கூறின் எல்லா வசதிகளும் உள்ள இடத்திலேயே அக்ரகாரம் அமைக்கப்பட்டது. சரஸ்வதி பண்டாரம் என்றால் நூலகம் என்று கல்வெட்டுச் செய்தி குறிப்பிடுகிறது.

இந்தியாவில் உள்ள மிகப்பழமையான நூலகங்களுள் சரஸ்வதி மகால் நூலகம் ஒன்றாகும். இந்நூலகம் கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்கள் காலத்தில் அரண்மனை நூலகமாக ஆரம்பிக்கப்பட்டு பின் வந்த மராட்டிய மன்னர்கள் தஞ்சையை கி.பி. 1535 ஆம் ஆண்டு முதலாக ஆட்சி செய்தனர். நாயக்க மன்னர்களுள் முக்கியமானவர்கள் ரகுநாத நாயக்கர் மற்றும் விஜயராகவ நாயக்கர் ஆவர். இவர்களது காலத்தில் இம்மன்னர்கள் இயற்றிய நூல்கள் மற்றும் அரண்மனைப் புலவர்கள் இயற்றிய நூல்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட நூலகம் சரஸ்வதி பண்டாரம் என அழைக்கப்பட்டது.

**ஆதுல சாலை :**

‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்’ என்பது தமிழர் தம் பட்டறிவால் முகிழ்த்த பழமொழியாகும்.

தமிழர் மருத்துவக் கலையில் சிறந்து விளங்கியிருந்தனர். அவர்களுடைய மருத்துவ அறிவுக்குத் திருக்குறளின் ‘மருந்து’ என்ற அதிகாரம் சான்றாக விளங்குகிறது. திரி கடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி முதலிய நூல்கள் மருத்துவ அறிவின் அடிப்படையில் இடம்பெற்ற பெயர்களாகும். மருத்துவன் தாமோதரனார் என்ற சங்கப் புலவர் சிறந்த மருத்துவராகத் திகழ்ந்திருந்தார் என்பதைச் சங்க இலக்கியம் காட்டுகிறது. கோவூர்கிழார் நிரையும் உணவையும் ‘இரு மருந்து’ என்றார்.

மருத்துவ அறிவில் சிறந்து விளங்கிய தமிழ் மக்களைக் குறித்தும் அவர்தம் மருத்துவத் தொண்டின் சிறப்பைக் குறித்தும் கல்வெட்டுகளில் பல செய்திகளை அறியலாம்.

மருத்துவர் பச்சிலைகளாலே பல நோய்களைத் தீர்த்தனர். 'மருந்தாகித் தப்பா மரத்தற்றால்' என்ற குறட்பகுதி மரங்களின் இலைகளும், பட்டையும் வேரும் மருந்தாகப் பயன்படுதலைத் தெரிவிக்கும்.

விக்கிரம சோழனின் மூன்றாம் ஆட்சியாண்டிற்குரிய (கி.பி. 1121) கல்வெட்டொன்று திருவாவடு துறையில் உள்ளது. ஒரு மருத்துவக் கல்லூரி இருந்ததைப் பற்றி அக்கல்வெட்டால் அறியலாம். சங்கர தேவன் அறச்சாலை என்று ஓர் உணவு விடுதியும் இருந்தது. அதில் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தங்கி உணவைப் பெற்றனர். முந்நூற்று நால்வர் (மருத்துவத்துறையினர், அறச்சாலையினர், இலக்கணம் படிப்பவர்) அவ்விடுதியில் தங்கியிருந்தனர். அம்மருத்துவமனை 'வீரசோழன்' என்னும் பெயரில் விளங்கியது. பதினைந்து படுக்கைகளைக் கொண்டிருந்தது. அம்மருத்துவமனைக்குத் தொடர்ந்து வழிவழியாக ஒரு மருத்துவரும், ஓர் அறுசைச் சிகிச்சை மருத்துவரும், இரு மருந்தாளுநர்களும், இரு செவிலியரும், ஒரு பொதுப்பணியாளரும் இருந்துள்ளனர். மருத்துவமனையில் பல பொருள்கள் அளிக்கப்பெற்றுள்ள செய்தியை அறியலாம். மருந்து தயாரிக்கப் பசுவின் நெய்யும் அளிக்கப்பெற்றுள்ளது. மூலிகை வேர்கள் கலந்த நன்னீர் மருத்துவத்திற்கு அளிக்கப் பெற்றுள்ளது.

கல்வெட்டுகளிலிருந்து அக்காலத்தில் மருத்துவச் சாலைகள் இருந்தனவென்றும், மன்னர்களும், மற்றவர்களும் கொடைகள் நல்கி அவற்றைப் புரந்தனர் என்றும் அறியலாம்.

இராசராச சோழனின் தமக்கையார் குந்தவை தனது தந்தையின் பெயரால் சுந்தர சோழர் விண்ணகர் 'ஆதுல சாலை" என்ற மருத்துவ விடுதியை நிறுவி மக்களின் பிணி தீர்க்க வகை செய்தார்.

## புரவுவரி திணைக்களம்

நில வரியில் ஆறில் ஒரு பகுதி மன்னனுக்கு அளிக்கப்பட்டது. சோளிங்கபுரத்துக் கல்வெட்டு ''அறு கூறினால் பரவும், ஆயதியும் பொன்னும்'' என்று குறிப்பிடுகின்றது. பல கல்வெட்டுகள் அறக்கட்டளைகளுக்கும்,

கோயில்களுக்கும் நிலங்களைக் கொடையாக அளிக்கப்பட்ட போது வரிகள் விலக்கப்பட்டதாகக் கூறுகின்றன.

வரிகளை ஊர் அவைகளே வசூலித்து அரசனுக்குச் செலுத்தின. ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள விளை நிலங்கள், தரிசு, காடு நிலங்கள் இவற்றின் அளவு. பெற வேண்டிய வரி போன்ற கணக்குகளைப் ''புரவு வரி திணைக் களம்'' என்ற அலுவலர் வைத்திருந்தார். மேலும் கிராம அவைகளும் நிலக்கணக்குகளை வைத்திருந்து அதன்படி வரி வசூலித்தன.

நிலத்தைக் கோயிலுக்குக் கொடையாக வழங்கும் போது நிலவரிக்கான தொகையை நிலத்தை அளித்த கொடையாளரே கிராம அவைக்குச் செலுத்த வேண்டும். கிராம அவை அத்தொகையைப் பெற்றுக் கொண்டு அதை வளர்ச்சித் திட்டங்களாக நிலத்தைத் திருத்துதல், ஏரி, குளங்களைச் சுத்தம் செய்து ஆழப்படுத்துதல், நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குதல் போன்ற ஆக்கப் பணிகளில் முதலீடு செய்து வரும் வருவாயில் (விளைச்சலில்) நிலவரி செலுத்துதல், நிவந்தங்களை நிறைவேற்றுதல் போன்றவற்றைச் செய்தனர்.

**பயிற்சி வினாக்கள் :**

**I. ஒரு பக்க வினா :**

1. திருமடைப்பள்ளி குறிப்பு வரைக.
2. சரஸ்வதி பண்டாரம் கூறும் செய்திகள் யாவை?
3. புரவுவரி திணைக்களம் என்றால் என்ன?

**II. மூன்று பக்க வினா :**

1. பிரம்மதேயம் குறித்து ஒரு கட்டுரை வரைக.
2. ஆதுல சாலை கூறும் செய்திகளை விளக்குக.
3. கல்வெட்டுக் கூறும் நிறுவனங்களை விவரிக்க.

# அலகு 5

## அறிய வேண்டிய கல்வெட்டுத் தொடர்களும், கலைச்சொற்களும்

**முன்னுரை :**

மக்கள் தம் அன்றாட வாழ்வில் இயல்பான முறையில் எளிமையான கருத்துக்களை வெளிப்படுத்த வாய்ப்பாக அமைந்த பேச்சு வழக்கு ஒரு வகை. குறிப்பிட்ட முறைப்படி அன்றைய வாய்மொழி ஆணைகளுக்கு அன்றே வடிவம் கொடுத்து மிகைப்படுத்தி எழுதப்பெற்ற கல்வெட்டு மொழியமைப்பு மற்றொரு வகை; கதைக்கருவை கற்பனைத் திறத்தோடு அமைத்து, படிப்போர் இன்புறும் வகையில் பாடல்களாக அமைந்த காவிய அமைப்புடைய இலக்கிய மொழியமைப்பு கொண்ட மெய்க்கீர்த்திகள் வேறொரு வகை; இவற்றுள் முன்னவை இரண்டும் சமூக வாழ்வுடன் நெருங்கிய தொடர்புடையவை. அன்றாட பேச்சு வழக்கிலும், வகைப்படுத்தி எழுதப் பெற்ற வாய்மொழி ஆணைகளிலும், கருத்தாழம் கொண்ட கவின் மிகு சொற்களை மக்கள் நாள்தோறும் பயன்படுத்தியுள்ளனர். நல்ல பல சொற்கள் அவர்தம் பேச்சு வழக்கில் நடனமாடியுள்ளன. அவற்றில் மக்களின் பண்பாட்டு இழைகள் ஊடுருவியுள்ளன.

அரசுப் பெருமக்கள், அரசின் ஆணைக்குட்பட்ட தலைவர்கள், அலுவலர்கள், குழுக்கள், பட்டப் பெயர்கள், திருவிழாக்கள், அளவுப் பெயர்கள் ஆகிய அனைத்திலும் ஆட்சிச் சொற்கள் அணி அணியாகத் திரண்டு நிற்கின்றன. இன்று ஆட்சிச் சொற்களாக விளங்கும் மண்டலம் (Region); கோட்டம் (Division); கருவூலம் (Treasury), வளாகம் (campus), வாரியம் (Board), கிடங்கு (Godown), பணி மூப்பு (Seniority) போன்ற பொருள் பொதிந்த சொற்களெல்லாம் கல்வெட்டுகளிலிருந்து கண்டெக்கப் பெற்றவையாகும். அவற்றுள் சில கலைச் சொற்களைப் பற்றிப் பாக்கலாம்.

**தேவதானம் :**

அக்காலத்தில் அரசர்கள் கோவில்களுக்குத் தானமாக நிலங்களை அளித்தனர். அவ்வாறு தானம் செய்தால் தங்கள் ஆட்சி சிறப்புறும் என்று நம்பினார்கள். சிவன் கோவில்களுக்கு தானமாக வழங்கிய நிலம் தேவதானம் எனப்பட்டது.

‘தேவதானம் திருச்சுழியல் - சுந்தர பாண்டிய ஈஸ்வரம்’

“தேவதானம் தென் திருமாலிருஞ்சோலை நின்றருளின் கரு மாணிக்க தேவர்க்கு”

போன்ற பாடல்கள் மூலம் தேவதானம் பற்றி அறிய முடிகிறது.

மூன்றாம் நந்திவர்மன் திருக்காட்டுப் பள்ளியில் ஒரு சிவன் கோவிலைக் கட்டிச் சிற்றூர் ஒன்றைத் தேவதானமாக அளித்தான். திருவல்லம் சிவபெருமானுக்கு பல அறங்களைச் செய்தான்.

முதலாம் இராசராசன் தஞ்சாவூரில் “இராசராசேச்சுரம் என்னும் கற்கோவிலை எடுப்பித்து அளித்த அளவிறந்த கொடைகளைப் பற்றி இக்கோவில் கல்வெட்டுக்கள் பறைசாற்றிக் கொண்டுள்ளன. கோவில் வழிபாட்டின் பொருட்டு ஐம்பதுக்கும் மேற்பட்ட ஊர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைச் செல்வங்கள், எண்ணற்ற இறைவன் திருமேனிகள், திருப்பதியம் விண்ணப்பம் செய்ய ஓதுவார்கள் நாற்பத்தெண்மா் உடுக்கை கொட்டி மத்தளம் வாசிக்க இருவர், உரிய கோவில் பணி செய்ய நானூறு தளிச்சேரிப் பெண்டிர், அவர்களுக்கு நடனம், கற்பிக்க நட்டுவனார், கணக்கர் முதலான நிவந்தக்காரர்கள், கருவூலம் காக்கும் பண்டாரிகள். திருமேனிகளைக் காக்க மெய்க்காப்பாளர்கள் ஆகிய இத்துணை விலைமதிப்பில்லாப் பொருள்களையும், பணியாளர்களையும் இராசராசன் அளித்தான் என்று மன்னரின் பெருமையை கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

**குடி நீக்கிய தேவதானம் :**

தானமாக வழங்கிய நிலத்தில் குடியிருப்பவர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கும் அந்நிலத்தில் குடியிருப்பவர்கள் ஏதேனும் தவறு செய்தால் அக்குடிகளை அவ்விடத்தை விட்டு நீக்கிவிட்டு வேறு குடிமக்களை குடியமர்த்துவார்கள். இதுவே குடிநீக்கிய தேவதானமாகும்.

**குடி நீங்காத் தேவதானம் :**

கோவில்களுக்குக் கொடையாக நிலத்தை வழங்கிய போது, அந்நிலத்தில் தொடர்ந்து குடியிருப்போர்க்கு எவ்வித இடையூறோ, இடம் பெயர்தலோ நிகழ்தல் கூடாது என்பதை இத்தொடர் தெளிவுபடுத்துகிறது.

முன்னர் பயிரிட்டுப் பகுதி நெல் செலுத்தும் பழங்குடி வாரிசு நீங்காத உழவர் வாழும் கோயிலுக்குரிய இறையிலிநிலம்

‘‘ஆகப்பாடகம் நாற்பத்திரண்டும் இவ் நாயனார்க்கு குடிநீங்காத்
தேவதானமாக விட்டோம்’’.

என்ற வரிகளிலிருந்து விளங்குகிறது.

**திருவிடையாட்டம் :**

கல்வெட்டுக்களில் பெரும்பாலானவை கொடைச் செய்திகளே பொறிக்கப்பட்டுள்ளன. கோயில்களுக்கும், பார்ப்பனர்களுக்ககும் வழங்கப் பெற்ற கொடைகளை விவரிக்கும் கல்வெட்டுக்களே மிகுதி. நிலக்கொடைகள் பெறுவோர் அடிப்படையில் தனிப்பெயர்களால் அழைக்கப்பெற்றன. திருமால் கோவிலுக்குத் தரப்பெற்ற நிலம் திருவிடையாட்டம் என்று குறிப்பிடப்படுகிறது. வளம் நிறைந்த நிலங்களே இத்தகு தானங்களாக வழங்கப்பெற்றன. இந்நிலங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டதால் அவை இறையிலி நிலங்கள் என அழைக்கப்பட்டன.

**திருநாமத்துக்காணி :**

கோயிலுக்குரிய சிவபெருமானின் பெயரால் அளிக்கப்பெறும் இறையிலி நிலம்.

‘‘நஞ்சை புஞ்சை திருவாநிலை மஹாதேவற்கு வேண்டும் நிமந்தங்
களுக்குத் திருநாமத்துக் காணியாக’’

தென்னார்க்காடு மாவட்டம், திருப்பாதிரிப்பூலியூரில் கோவில் உள்ளது. அக்கோவிலின் திருநாமத்துக் காணியாக நத்தமும், விளைநிலமும், புன்செய் நிலமும் இருந்தன. அந்நிலத்தை அவ்வூரில் வாழ்ந்த கோவில் அந்தணர் துய்த்து வந்தனர். விக்கிரம பாண்டிய தேவரின் மூன்றாவது நாளில் சுப்பிரமணிய பிள்ளையார் கோவிலொன்று அந்நாளில் தோற்றுவிக்கப் பெற்றது. அக்கோவிலுக்கு இரண்டு மா அளவு நிலம் இறைவன் பெயரில் விலையாகக் கொடுக்கப்பெற்றது. அந்நிலம் திருப்பாதிரிப்பூலியூர் கோவிலின் திருநாமத்துக்கணி நிலத்திலிருந்து பிரித்துக் கொடுக்கப்பட்டது. அதற்குரிய எல்லைக் கல்லும் நாட்டப்பெற்றது. அப்போது அவ்வூரில் வாழ்ந்த அந்தணர் கூட்டம் அது தங்கள் பிரம்ம சேத்திரம் (அந்தணர் வாழிடம்) என்றும், அதனை

அப்பிள்ளையார் பெயரில் பெருவிலையாகக் கொடுக்கக் கூடாது என்றும், அது தங்களுக்கே உரிமையான நிலம் என்றும் உரிமை கொண்டாடினர். அவ்வாறு உரிமைப்போர் நிகழ்த்தியபோது அவ்வந்தணர் கூட்டத்தில் ஒருவர் தீக்குளித்துஇறந்தார். செய்தியறிந்த விக்கிரம பாண்டியன் பல்லவராயர், அழகிய மணவாளப் பெருமாள் ஆகிய இரு அலுவலரையும் அழைத்தார். அந்நாட்டாரையும் நாட்டைச் சூழ்ந்துள்ள பலரையும் நன்கு கேட்டாய்ந்து அந்நிலம் யாருக்கு உரிமை உடையதோ அவர்களுக்கு உரிமையாக்க வேண்டும் என்று வாய்மொழியாக ஆணையிட்டார்.

## பண்டாரவாடை

பண்டாரவாடை என்பது குடிபாத்தியமான ஊர். அனைத்து வசதிகளும் இங்கு அமைந்திருக்கும். முதலாம் இராஜேந்திரனின் மூன்றாம் ஆட்சியாண்டு (கி.பி. 1015) கல்வெட்டொன்று தஞ்சை மாவட்டப் பண்டார வாடையில் பொறிக்கப்பெற்றுள்ளது. குந்தவை என்பார் தன் தந்தையின் நினைவாக ஓர் ஆதுல சாலையைத் தஞ்சாவூரில் நிறுவினார். அது சுந்தர சோழ விண்ணகர் ஆதுலசாலை எனப்பெற்றது. அது இலவச மருத்துவச் சாலையாக்கப் பெற்றது. அதை நடத்துதற்பொருட்டு எழுபது காசுகள் கொடுத்து ஒன்பது மாநிலம் இறையிலியாக வாங்கிய செய்தியைக் குறிப்பிடுகின்றது. இம்மருத்துவமனையில் இருந்த மருத்துவர் ‘சவர்ணன் அரையன் மதுராந்தகன்’ என்பவராவார். அவர் மருகால் என்னும் ஊரைச் சார்ந்தவர். இம் மருத்துவ மனைக்கு அளிக்கப்பெற்ற வைத்திய போகம் போதாமை கண்டு குந்தவையார் மேலும் பல மனைகள் விலைக்குப் பெற்று மருத்துவமனைக்கு அளித்துள்ளார். முன்னர் அளித்த நிலங்களையும், பின்னர் அளித்த நிலங்களையும் சவர்ணன் அரையன் மதுராந்தகனும், அவருடைய வழித்தோன்றல்களும் தொடர்ந்து துய்க்கலாம் என உரிமை அளிக்கப் பெற்றிருந்தது. பழையாற்றில் தன் அரண்மனையிலிருந்து இவ்வாணைகளைக் குந்தவையார் அளித்துள்ளார். பேரவையினர் கல்லில் பொறித்துள்ளனர்.

## பள்ளிச் சந்தம்

சைவ பௌத்த கோயில்களுக்கு விடப்பட்ட இறையிலி நில நிபந்தம், காசு முதலீடு ஆகியவை பள்ளிச் சந்தம் என்ற பெயரால் வழங்கப் பெறும்.

‘‘ஐயங் கொண்ட சோழமண்டலத்து பங்களநாட்டு நடுவில்
வகைமுகை நாட்டுப் பள்ளிச் சந்தம் ஸ்ரீகுந்தவை ஜிநாலயத்து
தேவற்கு சாமுண்டப்பை வைத்த திரு நுந்தா விளக்கு ஒன்றினுக்குக்
காசு இருபதும், திருவமுதுக்கு வைத்த காசு பத்தும்’’

‘‘நாகப்பட்டனத்து எடுப்பிக்கின்ற சூடாமணிபன்ம விஹாரத்துப்
பள்ளிக்கு வேண்டும் நிவந்தத்துக்கு சஷத்ரிய சிகாமணி வள
நாட்டுப் பட்டனக் கூற்றத்து ஆனைமங்கலம் பள்ளிச்சந்தம்
இறங்கலுள்பட அளந்தபடி’’

மேற்கூறிய பாடல்கள் சைவ, பௌத்த கோயில்களுக்கு நிலங்கள் அரசர்களால் கொடையாக வழங்கப்பெற்றதைக் கூறுகிறது.

கடாரநாட்டு அரசன் சூளாமணி வர்மன் என்பவன் நாகப்பட்டினத்தில் எடுத்த பௌத்த பள்ளிக்கு சோழ மன்னன் இராசராசன் ஆனைமங்கலம் என்ற ஊரைப் பள்ளிச்சந்த இறையிலியாக வழங்கினான். அப்பொழுது எடுக்கப்பட்ட சில முடிவுகள்.

1. ஆனை மங்கலத்தில் உள்ள நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்கு முன்பு நீர் பாய்ந்த ஆற்றிலிருந்து புது வாய்க்கால்களை வெட்டிக் கொள்ளலாம்.
2. நிலங்களுக்கு நீர் பாயும் வாய்க்கால்களில் அதிகமாக நீர் விடலாம். வாய்க்கால்களை ஆழப்படுத்தி நீரைத் தேக்கலாம்.
3. வாய்க்கால்களில் அயலவர் கிளை வாய்க்கால்களைத் தோண்டி நீர் பாய்ச்சுதல், கட்டைகளைக் கட்டி நீரைத் தேக்குதல், சிறிய ஏற்றங்களால் நீர் இறைத்தல், இறை கூடையால் நீர் இறைத்தல் முதலியன செய்யக் கூடாது.
4. வாய்க்காலின் நீரை வேறுவகையான பொதுச்செயல்களுக்குப் பயன்படுத்தக் கூடாது.
5. உரிமையுடையவர்கள் பயிர் செய்ய வாய்க்கால் நீரை அடைத்துப் பாய்ச்சிக் கொள்ளலாம்.
6. பெரிய கிணறுகள் தோண்டிக் கொள்ளலாம்.
7. இவ்வூர் நிலங்களிடையே சென்று வேற்றூர்களுக்குப் பாயும் வாய்க்கால்களில் அதிகமான நீர் பாயுமாறு விடலாம்.

8. புறவூர் வழியாக வந்து இவ்வூர் நிலங்களுக்கு நீர் பாயும் வாய்க்கால்களில் அதிகமான நீர்விடத் தூர் வாரலாம்.

இத்தகு செய்திகள் இராசராசனின் செப்பேட்டில் காணப்படுகிறது.

**முற்றூட்டு :**

எவ்விதத் தடையுமின்றி வரியுமின்றி முழுமையாகத் துய்க்க உரிமையாக்கிக் கொடுக்கப் பெற்ற நல்கொடை நிலமாகும். ‘‘தாங்கள் வேண்டிய பயிர் செய்து முற்றூட்டு அனுபவிப்பதாக’’ எனக் கல்வெட்டில் காணலாம்.

**இறையிலி :**

அரசுக்குரிய இறை வரி நீக்கப் பெற்ற நிலம் நஞ்சை புஞ்சைகளின் விளைவுகளைக் கொண்டு பெறும் வரிகளையும் அப்பகுதிகளில் குடியிருப்போர் தரும் தேவை, குடிமை முதலிய வருவாய்களையும் அரசு நீக்குதல் இறையிலியாகும். நஞ்சை புஞ்சைகளுக்கு வரும் தேவை குடிமைகளும் அனைத்தாயங்களும் உட்பட இழிந்து இறையிலியாகத் தந்தோம்.

**ஆயம் :**

சுங்கவரி ஊர் எல்லைக்குள் வணிகத்திற்குரிய பொருள்கள் வரவும் போகவும் பெறும் வரி ஆ யம் எனப்படும். ஆயம் பெறும் இடம் சுங்கச்சாவடி எனப்படும். குறித்த இடத்தில் வியாபாரிகள் கடையிட்டு விற்பனை செய்யும் சரக்குகட்குப் பெறும் காசும், பொருளும் ஆயம் எனப்படும்.

> ‘‘நாங்கள் ஆயம் வைத்துக் குடுத்த பரிசாவது – சரக்குகளெல்
> லாத்திலும் பிள்ளையார்க்கு தீர்ந்த சுங்கத்தில் வரி கொள்ளக் கட
> வார்களாகவும்’’

> இவர் திருவாசலில் கடைய்பரி மாறுங் கடை ஒன்றுக்கு ஆயமும்
> கடை ஒன்றுக்கு வேண்டுஞ் சரக்குகள் இக்கடையில் இருந்தவன்
> தான் வேண்டின இடங்களிலே கொண்டு பரிமாறி ஆயத்தால்
> உள்ளது இவர் பண்டாரத்தே ஒடுக்கக் கடவ னாகவும்.

**சாவா மூவா பேராடு :**

சாவினாலோ, மூப்பினாலோ ஆடுகளின் எண்ணிக்கை குறைந்தால் அதன் குட்டிகளைச் சேர்த்து ஈடுகட்டுவர். ‘திருநூந்தா விளக்கு ஒன்றுக்கு விட்ட சாவா மூவா பேராடு நூறு’ என வழக்கில் வருகிறது. ‘சாவா மூவாப் பசு’ என்றும் கல்வெட்டுகளில் காணலாம். பசுவின் நெய்யையும், ஆட்டின் நெய்யையும் கோவில்களில் எரியும் நந்தா விளக்குகளுக்குப் பயன்படுத்தினர். ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் ஆடு, மாடுகளை நிரந்தரமாகப் பராமரிக்கத் தேவையான பணம் கோவிலுக்குக் கொடையாக (நிவந்தம்) அளிக்கப் பெற்றதைச் ‘சாவா, மூவா’ என்ற அழகிய சொல் தொடர் குறிக்கிறது.

கோவில்களில் நந்தா விளக்கு அமைப்பதற்கு ‘சாவா மூவாப் பேரேடு’, பசு அல்லது எருமை கொடுத்தைக் குறிக்கின்றன. நிலம் கோவிலுக்கு விற்கும் பொழுதும், பிறறொருவருக்கு விற்கும் போதும் சரி அந்த நிலத்தின் பரப்பளவு, அதன் நான்கு பக்க எல்லைகள், அந்த நிலத்தைச் சார்ந்திருக்கும் பிற பொருட்கள், அந்த நிலத்திற்கு நீர் பாய்ச்சும் வாய்க்கால் ஆகியவையும் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. ‘‘இந்நாற்பாற் கெல்லைக்குட்பட்ட உண்ணிலம் ஒழிவின்றி’’ உரும்பொடி ஆமை தவழும் இடம் அனைத்தும் கீழ் நோக்கிய கிணறும், மேல் நோக்கிய மரமும், மீன் படு பள்ளமும், தேன்படு பொதும்பும் புற்றும் தெற்றியும் ஆகியவை எல்லாம் விற்கப்பட்டன’’ என்று குறிக்கப்பட்டிருக்கும்.

சில இடங்களில் நிலத்தின் பெயர் கூட குறிக்கப்பட்டுள்ளது. சிவன் கோவிலுக்கு நிலம் விற்கப்பட்டபோதெல்லாம் சண்டேசுவரர் பெயரால் விற்கப்பட்டன. மற்ற பொருட்களைக் கோவிலுக்குக் கொடையாக அளித்தால் அவைகள் நன்கு விளங்கும் வண்ணம் சொல்லப்பட்டுள்ளன. ஒரு சில காசை ஒருவனிடம் தந்து, கொடுத்தவரின் நன்மைக்காக கொடை அளித்தவனின் நன்மைக்காக கொடை அளி என்று கூறும் போது கொடுத்த முதல் கொடாது போலீ ஊட்டாகக் கொண்டு வந்து போலியில் (வட்டியில்) கொடையளிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கும். அத்துடன் வட்டி விகிதமும் குறிக்கப் பட்டிருக்கும். மேலும் அவ்வாறு அளிக்கப்பட்ட கொடை சந்திரன் சூரியன் உள்ளளவும் நிலை பெற்றிருக்கும் என்றும் குறிக்கப்பட்டிருக்கும். இது கல்வெட்டின் முக்கியப் பகுதியாகும்.

## நந்தா விளக்கு

கோயில்களில் நிவந்தமாக பொன், நிலம், ஆடு இவற்றுள் ஏதாவதொன்றினை வைத்து, இடப்பட்டதாகக் கூறப்பெறும், இந்நந்தா விளக்கு என்பது, இறைவன் சன்னதியில் நாள் முழுவதும் தொடர்ந்து தூண்டா விளக்காக எரியும் விளக்காகும். விளக்கின் வடிவம் பலவாக அமையினும், அதன் நிவந்தச் செயல் தூண்டாது தொடர்ந்து எரியுமாறு செய்யப்பெறும் விளக்கென்பதேயாகும். கல்வெட்டுகளில் நொந்தா விளக்கு, நந்தா விளக்கு, நுந்தா விளக்கு என்றெல்லாம் கூறப்பெறுவது இவ்விளக்கேயாகும்.

‘‘திருவாலந்துறை மஹாதேவர்க்கு சந்திராதித்தவல் இரவும்
பகலும் ஒரு நொந்தா விளக்கு எரிய வைத்த நெய்’’
‘‘உதைய அந்தமனமும் அந்தமன உதயமும்
எரிய வைத்த திரு நுந்தா விளக்கு’’
‘‘இத்திருநுந்தா விளக்கு எரிக்க இட்ட குத்து
விளக்கு ஒன்று இது தரா இடை அய’

தூண்டப் பெறாமல் எரியும் விளக்கு. இவ்விளக்கு இறைவன் திருமேனிக்கு அருகில் தொங்கு விளக்காகப் பெரும்பான்மையும் அமைக்கப் பெறினும், குத்து விளக்கு அமைப்பிலும் இவ்விளக்கு தரையில் நிலையாக நிற்கும் தோற்றத்திலும் செய்யப்பெறுவதுண்டு என்பதைத் திருவோத்தூர் கல்வெட்டு உணர்த்துகின்றது.

‘‘தொண்டைமானார் வார்ப்பித்துக்குடுத்த திருக்குத்து விளக்கு
இரண்டிலெரியுந் திருநுந்தா விளக்கு இரண்டுக்கு’’
‘‘திருவுண்ணாழிகையில் ஒரு நொந்தா விளக்கு இரவும் பகலும்
எரிய வைத்த பொன் முப்பதின் கழஞ்சு’’

நந்த விளக்கு போடுவதற்கு அக்கால மன்னர்கள் பொன்னும், பொருளும், நிலமும் ஆடுகளும், தானமாக கோவில்களுக்கு வழங்கியுள்ளனர் என்ற செய்தி கல்வொட்டுக்கள் மூலம் அறிய முடிகிறது.

**எச்சோறு :**

எல் + சோறு எல் : இரவு கிராமங்களில் ஊர்ப் பணிகளைச் செய்யும் ஊழியர்களுக்கு இரவு நேரத்தில் உணவு இடுவது வழக்கமாகும். இவ்வுணவுக்காக ஊரில் உள்ளோர் முறைப்படி சுற்று வரிசையாக வழங்குவர். “தட்டார்ப் பாட்டாங்களும் ஆளமஞ்சி எச்சோறுங் குற்றத் தெண்டமும் பட்டித் தெண்டமும் மற்றும் எப்பேர்ப்பட்ட பல்லாயங்களால் வந்தனவும்” என்பது கல்வெட்டுத் தொடராகும்.

**ஆவணக்களரி :**

பத்திரப்பதிவகத்திலேயே, அதிகாரிகள் பார்வையில் விலைக்குப் பெறுபவன், விலைத் தொகையை நேரில் செலுத்த, விற்பவன் தன் கைவழிக் குறைவு இல்லாமல் விலைத் தொகையினை முழுமையாக பெற்றுக் கொண்டு

“இம்மனை அஞ்சும் விற்றுக் குடுத்துக் கொள்வதான எம்மிலி
சைந்த விலைப்பொருள் ஆவணக்களரியே”

ஆவணம் - உரிமைச் சீட்டு; களரி – பதிவு செய்யுமிடம் இன்று ஆவண உரிமைகளைப் பதிவு செய்யும் அலுவலகத்தைப் பதிவாளர் அலுவலகம் (Registrar Office) என்கிறோம். ஆவணக்களரி என்று அழகு தமிழில் கல்வெட்டு வழக்கில் வழங்கப் பெற்றுள்ளது. “இக்காசு நாற்பத்தையாயிரமும் ஆவணக் களரியே காட்டி ஏற்றி கிழிகைச் செலவறக் கைக்கொண்டு” என்பதால் அறியலாம்.

**பயிற்சி வினாக்கள் :**

**I. ஒரு பக்க வினா :**

1. தேவதானம் - குறிப்பு வரைக.
2. திருவிடையாட்டம் என்றால் என்ன?
3. திருநாமத்துக்காணி – குறிப்பு வரைக.
4. பள்ளிச்சந்தம் கூறும் செய்திகள் யாவை?

**II. மூன்று பக்க வினா :**

4. பண்டாரவாடை, சாவா மூவா பேராடு, நந்தா விளக்கு போன்ற கலைச் சொற்கள் குறித்து விளக்குக.
5. கலைச்சொற்கள் உணர்த்தும் செய்திகளை எழுதுக.

# B. Litt. DEGREE EXAMINATION

## கல்வெட்டியல்

**Time : Three Hours** **Maximum : 100 Marks**

**பகுதி - அ (5 x 5 = 25 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.**

1. நடு கல் - சிறு குறிப்பு வரைக.
2. கொடை பற்றிக் கூறும் கல்வெட்டுக்கள் யாவை?
3. மெய்க்கீர்த்தி – குறிப்பு வரைக.
4. “பகல் செய்யும் வெண் ஞாயிறும் இரவுச் செய்யும் வெண் திங்களும் குறிப்பு வரைக.
5. திருமடைப்பள்ளி பற்றி எழுதுக.
6. புரவுவரி திணைக்களம் என்றால் என்ன?
7. பள்ளிச்சந்தம் கூறும் செய்திகள் யாவை?
8. நொந்தா விளக்கு பற்றிய செய்திகளைக் கூறுக.

**பகுதி - ஆ (5 x 15 = 75 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்தனுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.**

9. தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள் குறித்து விளக்குக.
10. மாங்குளம் கல்வெட்டில் காணப்படும் சொல்லமைதி பற்றிக் கூறுக.
11. மெய்கீர்த்தியின் தோற்றமும், வளர்ச்சியும் குறித்து ஒரு கட்டுரை வரைக.
12. ஓம்படைக்கிளவி விளக்குக.
13. பிரம்மதேயம் பற்றி கட்டுரை வரைக.
14. கல்வெட்டு கூறும் நிறுவனங்களை விவரிக்க.
15. வேள்விக்குடி செப்பேடுகள் குறித்து எழுதுக.
16. கலைச்சொற்கள் உணர்த்தும் செய்திகளை எழுதுக.

**முனைவர் மா. முத்துசாமி,**
இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
வ.உ.சி. கல்லூரி,
தூத்துக்குடி.